Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර ஜன.09-15, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 339

# அரசியலில் புதிய திருப்பங்கள்?




## பிரபல நடிகையின் விவாகரத்து விவகாரம்

## ரஜினி எடுக்கவுள்ள புதிய முடிவு?

# முரசம்

## அழைப்பு

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

இலங்கை ஜனாதிபதி
எதிர்க்கட்சித் தலைவர்
ரணில் விக்கிரமசிங்கவை
தேசிய அரசாங்கம்
அமைக்க அழைத்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவும்
சமாதான முயற்சிகளுக்கு
ஒத்துழைக்கத் தயாரெனக்
கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத்
தீர்வு காணுவதற்கு
புலிகள் தலைவர்
பிரபாகரனுடனும்
பேச்சுவார்த்தை நடத்த
தான் தயாரென்று
ஜனாதிபதி அழைத்துள்ளார்.

அதேவேளை
பிரபாகரனும்
மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தத்துடன்
பேச்சுவார்த்தை
நடத்த-
மாவீரர் தின உரையில்-
அழைப்பு விடுத்திருந்தார்.

அரசாங்கம், எதிர்க்கட்சி,
விடுதலைப் புலிகள்
ஆகிய மூன்று
முக்கோணப்
புள்ளிகளிடையே
இணக்கப்பாட்டை
ஈட்ட முடியாமையே
இன்றுவரை இந்நாட்டில்
தீர்வொன்றை எட்டப்
பிரதான தடையாக
இருந்து வருகிறது.

எப்போதும்
ஆட்சியைக் கைப்பற்றும்
குறியோடு இருக்கும்
எதிர்க்கட்சி மனோபாவத்தில்
அரசாங்கம் காணமுயலும்
தீர்வுகள் அனைத்தையும்,
தமிழருக்கு இந்நாட்டை
தாரைவார்க்கப் போவதாக
இனவாதக் கோஷத்தைக்
கையாண்டு
முறியடிக்க முனைவதே
வழமை.

இதன் மூலம்,
சிங்கள மக்களின்
பாதுகாவலர் தாமென்ற
போலித் தோற்றப்பாட்டை
ஏற்படுத்தி
அரசைக் கவிழ்க்கும்
எதிர்ப்பைக் கிளறலாம்.

அரசாங்கம் வழங்க
முன்வரும் தீர்வுக்கும்
புலிகள் ஏற்கத்
தயாராயிருக்கும்
தீர்வுக்கும் இடையில்
பாரிய இடைவெளி
நிலவுகிறது.

அரசாங்கமோ,
ஏனைய தமிழ்க்கட்சிகள்
ஏற்கக்கூடிய
ஒரு தீர்வுக்கே
இன்னும் வரவில்லை.

அதைவிடப்
பல மடங்கு அதிகரித்த-
புலிகள் ஏற்கக்கூடிய
ஒரு தீர்வை எட்டுவதானால்
அது தனது நிலைப்பாடுகளில்
மிகப் பெரும் மாற்றங்களைச்
செய்ய வேண்டும்.
அத்தோடு
அவற்றை அமுலாக்கவும்
வழிமுறையொன்றை
வகுக்க வேண்டும்.

புலிகளைப் பொறுத்தவரை,
தமிழீழம் என்பதே
தமிழ மக்களுக்கான
தங்கள் தீர்வென்றும்
அதைக் கைவிடுவதானால்
சிறந்ததொரு மாற்றுத் தீர்வை
அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.
அவ்வாறானால் அதைப்
பரிசீலிக்கத் தயாரென்றும்
கூறி வருகின்றனர்.

அதாவது,
தமிழீழம் தவிர்ந்த தீர்வொன்றை
தாங்கள் முன்வைக்கப்
போவதில்லை.
தீர்வைத் தெரிவிப்பது
அரசாங்கத்தின் பொறுப்பு.
அதை ஏற்பதா விடுவதா
என்று தீர்மானிப்பதே
தமது பொறுப்பு
என்பதே அவர்கள் நிலை.

இத்தகைய இந்த
மூன்று புள்ளிகளும்
தொடுக்கப்பட
முடியாதவாறு
எதிரும் புதிருமாக
இருந்து வந்தன.
அதுவே
தீர்வைக்கூட
எட்டாக் கனியாக
வைத்திருந்தது.

இந்நிலையில்தான்
புத்தாயிரமாண்டின்
நுழைவாயில்
திறக்கப்படும்போது
இம் மூன்று தரப்பினரும்
சமாதானத்தை ஈட்டுவதற்காக
ஒருவருக்கொருவர்
அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த அழைப்புகள்
வெளித் தோற்றத்துக்கு
விருப்பத்துக்குரியதாகத்
தெரிந்தாலும்
சாத்தியக் கூறுகள்
அற்றதாகவே தெரிகின்றன.

இவற்றைச்
சாத்தியப் படுத்த வேண்டின்
அதற்குச் சாதகமான
சூழ்நிலையை
முதலில்
தோற்றுவிக்க வேண்டும்.

அதற்கு மூவரும்
முன்வருவார்களா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஆன்மீகம்



## மெஞ்ஞானமும் விஞ்ஞானமும்

புத்தாயிரமாம் ஆண்டுக்குள் பிரவேசித்திருக்கும் நாம் கடந்த நூற்றாண்டில் பல முன்னேற்றங்களைக் கண்டோம் மனிதவாழ்க்கைக்குத் தேவையான அளப்பரிய சாதனங்களைப் பெற்றோம். வாழ்வு வளம் பெற அறிவியல் ஆய்வுகளின் மூலம் பெற்ற வசதிகளை அனுபவித்தோம்.

ஆக்கத்துக்கான அரிய வாய்ப்புக்களை எவ்வளவு தூரம் பெற்றோமோ அதைவிடப் பன்மடங்கு அதிகமாக அழிவுக்கானவற்றையும் பெற்றிருக்கிறோம். மனிதர்களை மட்டும் அழித்தொழிக்காமல் ஏனைய உயிரினங்களையும், இயற்கை வளங்களையும் கூட பூண்டோடு அழிக்கும் நடவடிக்கைகளும் நடந்தேறியுள்ளன. இவை புத்தாயிரமாம் ஆண்டும் தொடரத்தான் போகிறது.

மனிதனின் மூளைதான் சிந்தனைக்குத்தூண்டு கோலாகிறது. எதையும் ஆராய்ந்தறியவும் ஆக்கங்களை உருவாக்கவும் மூளைதான் காலாக அமைந்துள்ளது. அதே மூளையை உபயோகித்து மனிதனையும், இயற்கை வளங்களையும் அழிவிலிருந்து காப்பாற்ற ஏன் மனிதன் தயங்குகிறான்?

விஞ்ஞானத்தை மட்டுமே வளர்ப்பதில் நிச்சயமாக உயர் நிலை அடைய முடியாது மனிதன் அழிவுப் பாதையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளக்கூடிய சாதனம் மெஞ்ஞான உணர்வே.

இறைவனை உணர்ந்து, உயிரினங்களிலும் இயற்கையின் மீதும் அன்பு செலுத்துவதன் மூலமே உண்மையான மேம்பாட்டை அடைய முடியும். அழிவுப்பாதையிலிருந்து உலகை மீட்க, மெஞ்ஞானத்துடன் இணைந்த விஞ்ஞானமே துணைபுரியும்.

மெஞ்ஞானத்திலுள்ள விஞ்ஞானம் அளப்பரியது. அதனைத்தேடி உணர்ந்தால் மட்டுமே உண்மையான பேரின்ப வாழ்வை மனுக்குலம் புத்தாயிரமாமாண்டில் பெறமுடியும்.

ஞானேந்திரன்.

## நோன்பாளிக்கு மனத்தூய்மை வேண்டும்

ஒரு நோன்பாளி அனுஷ்டிக்க வேண்டிய அனுஷ்டானங்களில் மனத்தூய்மையும் பிரதானமான தொன்றாகும். நோன்பு நோற்ற பின்னரும், இந்த நோன்பு இறைவன் சந்நிதானத்தில் அங்கீகரிக்கப்பட்டதா? இல்லையா என்பது குறித்து அஞ்சிக் கொண்டே இருத்தல் வேண்டும். இவ்வாறே நோன்பு காலங்களில் விசேடமாகச் செய்யும் சகல வணக்கங்கள் யாவிலும் நம்மையறியாமல் பல தவறுகள் நிகழ்ந்திருக்கக் கூடுமாதலால், எங்கே இது இறைவனால் முகத்தில் வீசி எறிந்துவிடப்பட்டுப் போகிறதோ என்பதனை நினைத்து சதா அஞ்சுதல் வேண்டும்.

குர்ஆன் ஷரீப் ஓதும் எத்தனையோ பேர்களை (ஓதும் தவறான முறையினால்) அது லஃனத்துச் செய்கிறது என்பது நாயக வாக்காகும். மனத்தூய்மை இல்லாமல் வணக்கம் புரிந்ததால், ஷஹீதுகளும், ஆலிம்களும் நரகில் வீசப்பட்டனர் என்பதைக் குறித்துள்ள ஹதீதுகள் நிறைய இருக்கின்றன. இத்தகைய வேதனைகள் யாவும் மனத்தூய்மை இல்லாததினாலேயே நிகழ்கின்றன.

எனவே, இப்புனித றமழானில் மனத்தூய்மையுடனும், பய பக்தியுடனும் நல்லமல்கள் புரிந்து ஜெயம் பெறுவோமாக.

நன்றி 'றமழானின் சிறப்பு' தொகுப்பு:- வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-

## கவிதைப் போட்டி இல.336

### பரிசுக்குரிய கவிதை

#### காத்திருக்கும் கழுகு!

மரிக்கும் வரையும்
காத்திருக்கும் வானக் கழுகு
மரிக்கும் முன்னே
குதறித்தின்னும் மனிதக் கழுகு!

அ.சந்தியாகோ-கண்டி.



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

#### இது தானோ..?

ஆறாண்டு
ஆட்சியின்
ஐந்தாண்டு கால
அறுவடை!
இதுதானோ?

அ.அச்சுதன்-சேனையூர்,
மூதூர்.

#### வதை!

மனித...
கழுகுகளால்
வதை செய்யப்பட்டு...
குதறப்பட்ட...
இளம் பிஞ்சை..?
காட்டுக் கழுகு...
உருசி பார்க்க...
ஆயத்த மாகிறதோ...?

கயல்வண்ணன், வவுனியா.

#### கொடுமை

போரின் கொடுமையாலே!
பாலகன் பட்டினியால்,
சாகும் வரைக்கும்,
கழுகும் காத்திருக்கு.

அ.சிவஞானசேகரம்-
மல்லிகைத்தீவு

#### யார் இவன்?

இவன் சோமாலியன்
மகனா?
எத்தியோப்பியன்
மகனா?
அடா! ஐயையோ
இவன்
இலங்கையின்
மகன்?

சி.நாகேந்திரன்-
ஆரையம்பதி-03.

#### பதில் சொல்!

மெலிந்து போன என்னுடலை
விழுங்க நினைக்கும் வல்லூறே
யுத்தத்தை மட்டுமேன்
விட்டு வைத்தாய்?

பே.விஜிதா-ஹெந்தளை, வத்தளை.

#### அ(இ)ன்றும்

அன்று அந்த வெண்புறா
உண்டதெல்லாம் தானியமாம்
அது இன்று உருமாறி
உண்பதெல்லாம் மாமிசமாம்!

வீ.ஜெயராஜ்-கிரான்.

#### இ(வி)லக்கு

சமாதான வெண்புறா
பிணம் தின்னும் கழுகாய் மாறி,
இரையைக் குறிவைத்து
காத்திருக்கின்றதோ...?

எஸ்.ஞானராஜா-வாழைச்சேனை.

#### புத்(தரின்) தாயிரத்தில் நாடு

புத்தரைப்
போற்றும் நாட்டில்
போர் ஓயாவிட்டால்
புத்தாயிரத்திலும்
பிணக் காடுதான்!

ரவீந்திரநாத் அரவிந்தன்-அக்கரைப்பற்று-08.

#### மரணக்குஞ்சு

அன்று...
"ஆல வட்டம்போடு,
கோழிக்குஞ்சு தாறேன்...!"
இன்று..
"பருந்தே வட்டம் போடு
மனிதக்குஞ்சு தாறேன்...!"

பாக்கியராசா விகர்ணன்-
கோட்டைக்கல்லாறு-02.

#### உணவு

உணவின்றி மண்ணில்
மடியும் மழலை
உணவைக் கண்டு
மகிழ்ச்சியடையும் பறவை.

வா.சதானந்தன், கல்முனை

#### மன்னித்து விடு

உன்னைக் காப்பாற்றும்
சக்தி என்னிடம் இல்லை;
உன்னை உயிருடன் உண்ணும்
கல்மனமும் என்னிடம் இல்லை-
காத்திருப்பேன்.
நீயும் கண் மூடும் வரை!

ரஜனி சுகுமாரன்-தலவாக்கலை.

#### முகாம்

சுதந்திரம் அற்ற அகதிகள்
முகாமைவிட,
சுதந்திரமான கழுகு
முகாம் சிறந்தது!

கே.ஜெயராஜ்-
ஸ்பிரிங்வெளி.

#### எண்ணம்

வருந்திச் சாவதை விட
விருந்தாகிச் சாவது மேல்!

ச.மகாலிங்கம்-வெலிமடை.

உன் பட்டினியை
தீர்க்கவா...
இறைவன் என்னை இங்கே
அனுப்பினான்...?

ரி.ஐ.காமிஸ், தெமோதரை

#### தி(கொ)ண்டாட்டம்

தாயை இழந்த
பிள்ளைக்கு
திண்டாட்டம்!
அதைத் தின்னப்
போகும் கழுகுக்கு
கொண்டாட்டம்!


ஜுனைட் நிஸாத், மூதூர்-05

#### உற்று நோக்கல்!

உணவில்லாமல்
உயிர் போகும் குழந்தையைத்-தன்
உணவுக்காகவே
உற்று நோக்குகிறதோ
இந்தக் கழுகு!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்

## கவிதைப் போட்டி இல.339



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 15.01.2000

கவிதைப் போட்டி இல.339
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

அன்பிற்குரிய முரசே!
'ஆன்மீகம்', 'நில் கவனி-முன்னேறு', 'சிந்தியா பதில்கள்' மற்றும் நீ உன்னில் தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் சூப்பரிலும் சூப்பர். உன் பணி ஓங்க என் பாராட்டுக்கள்.

எம். ஆர்.எ.ப்.
பஸ்னா, தர்ஹா நகர்.

என் இனிய முரசே...!
பல்வேறுபட்ட பதிப்புக்கள் வெளிவந்தாலும், உன் பணி சற்றுவித்தியாசம்தான். மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த உனக்கு வேட்டு வைத்த வஞ்சங்களை காலம் ஒரு நாள் தண்டிக்கும். அற்புத படைப்புக்களை தந்த அற்புதனுக்குத்தான் மரணம். அவரின் படைப்புக்களுக்கு என்றும் மரணம் இல்லை. முரசே உனக்கு எமது ஆதரவு என்றும் உண்டு. உனது பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

செ.அருள், ஜெனிவா.

இனிய முரசே!
ஆசிரியர் அற்புதராஜாவின் கொலை அச்சுறுத்தல் கண்டும், அஞ்சாது உண்மைகளை வெளிக்கொண்டு வரும் எமது உயிர் நாடியான தினமுரசே! உனது உயிர் நாடியான, உனது ஆணிவேரான அற்புதமான எழுத்தாற்றல் கொண்ட, உனது ஆசிரியர் அற்புதராஜாவின் இழப்பான, திடீர் சோதனை கண்டு தோல்வியெனக்கருதி துவண்டு விடுவாயோ என்றிருந்தேன். இதனை பொருட்படுத்தாது மீண்டும் நீ உனது பாணியில் (சூடு, சுவை, சுவாரசியம்) வெற்றியோடு வீறு நடைபோட வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

வாராவாரம்; காலத்தால் அழியாத தமிழ்க் காவியங்களை தேன்செட்டும் தீந்தமிழில் வடித்தெடுத்து எமக்கென வழங்கிய ஈழப்புதல்வன் அற்புதராஜாவை நாம் இழந்து விட்டோம். அவருக்கு எனது கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

அவரது உடல் இவ்வுலகினை விட்டு மறைந்தாலும், அவரது அற்புதப்படைப்புகள் என்றும் காலத்தால் அழியாது. எங்களது நெஞ்சறைகளில் பூத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

வை.மாஹி அர்ஸலான்,
முறியாக்கடவள, கெக்கிறாவை.

## புகழாரம்




அன்பின் முரசே!
தித்திக்கும் தீந்தமிழாய்
திக்கெட்டாத் திசையெங்கும்
தித்திக்கும் தினமுரசே!
தினங்களில் ஒரு தினம்-
உன்னில் நான் அறியும்
அனைத்து அம்சங்களும்
என்னைக் கவர்ந்துள்ளன.
வாழ்க உன்பணி!
வளர்க இவ்வையகம்.

அ.யூட் மரி" அன்ரன்,
குடியிருப்பு, வவுனியா.

பாப்பா முரசின் அனைத்து ஆக்கங்களும் மாணவர்களாகிய எமக்கு பெரிதும் உதவுகின்றன. அளப்பரிய உனது பணிக்கு எம் வாழ்த்தும் நன்றியும் உரித்தாகட்டும்.

எம் இனிய புத்தாயிரமாம் ஆண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

எஸ்.பத்மா, உமாஜினி,
கொழும்பு-10.

இனிய அன்பின் முரசுக்கு
நீ சுமந்து வரும் திக்திக் தொடரான ராஜேஸ் குமாரின் கை வண்ணத்தில் உருவாகியிருக்கும் 'சிகப்பு வணக்கம்'. வாசிக்க வாசிக்க சுவையாகவும், மர்மமாகவும் உள்ளது. அடுத்த அத்தியாயங்களையும் ஒவ்வொன்றாக வாசித்து சுவைப்பதற்கு எதிர்ப் பார்க்க வைக்கிறது முரசு. 'வாழ்க முரசு!, வாழ்க தமிழ்'.

கா.சுகந்ததர்சனா, கல்லடி
மட்டக்களப்பு.

அன்பு மறவாத என் முரசே!
பல்லாயிரம் வாசகர்களில் நானும் ஒருவன். நீ கூறும் அனைத்து விடயங்களும் அருமையிலும் அருமை. அதிலும் 'இடி அமீனி'ன் தினமும் தொடர்ந்து வரும் கதை என் மனதை கிழித்துச் செல்கின்றது.

அப்துல் கையூம், பேராறு-கல்லாறு.

தினமுரசு குடும்பத்தினருக்கு!
இலங்கையில் அரசியல் படுகொலை நடக்கும் போதெல்லாம் 'ஈடுசெய்ய முடியாத இழப்பு' என்ற வாக்கியப் பிரயோகத்தை அடிக்கடி கேட்டிருக்கிறோம். அப்போது சில நேரங்களில் அந்த வாக்கியத்தோடு உடன்பட்டதில்லை. ஆனால் இப்போதுதான் உணர்கிறோம் இது தமிழ் பத்திரிகைத் துறையில் ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று. மக்களைக் குழப்பிக் கொண்டிருந்த பத்திரிகைகளின் மத்தியில் அவர்களை நேர்த்தியாக சிந்திக்க வைத்த பத்திரிகையை வெளிக்கொணர்ந்த பெருமை அற்புதன் அவர்களையே சாரும்.

ஆயினும் அவருக்காக எந்த பத்திரிகையும், எந்த அரசியல் தலைவரும் இவ்வாக்கியத்தைப் பிரயோகிக்காதது மாபெரும் அவலம். அற்புதன் அவர்களை அழித்துவிட்டு முரசை அழித்துவிடலாம் என்று கனவு கண்டவர்களுக்கு முரசு பதில் கூறிவிட்டது. அவரை அழித்தவர்களை வரலாறு என்றும் மன்னிக்கப்போவதில்லை. இப்போதைக்கு அவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்வதை தவிர எமக்கும் வேறு வழி இல்லை.

எம். ஆனந்த், கோபாலபுரம், நிலாவெளி.

அன்பின் முரசே!
நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர், அதிலும் நீ சுமந்து வரும் புதிய தொடர் 'சிவப்பு வணக்கம்' ஆரம்பமே படு சூப்பர். காலத்துக்கேற்ற படைப்புகளை சுமந்து வரும் முரசே! உனக்கு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

எம்.வசந்தி, ஏத்தாலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு.வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

# அமைதிக்கான அறிகுறிகள் அண்மையில் தென்படவில்லை!

ஆளும் கட்சியான பொதுஜன முன்னணியும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து, இந்நாட்டை வாட்டும் இனப்பிரச்சனைக்குத் தீர்க்கமானதொரு முடிவினை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அத்தகைய எதிர்பார்ப்பு வீண் கனவு என்று அவதானிகள் கருதுகின்றனர். இரு கட்சிகளும் வரிந்து கட்டிக்கொண்டு ஏட்டிக்குப் போட்டியாகத் திட்டித் தீர்த்துக் கொண்டிருக்கும்போது, ஒற்றுமை எவ்வாறு ஏற்படப்போகிறது என்று பலரும் விசனப்படுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலின் போது இரு கட்சிகளும் ஒன்றை ஒன்று காரசாரமாக விமர்சித்தன. தலைவர்கள் ஒருவரை ஒருவர் தனிப்பட்ட வகையிலும் திட்டித் தீர்த்தனர். தேர்தல் முடிவான பின்னராவது வசைபாடும் நிலையில் மாற்றம் ஏற்படும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிக்கா இலண்டன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில், ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை அரசாங்கம் எடுக்கவிருக்கும் இனப்பிரச்சனை தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறும், ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்க ஒத்தாசை வழங்குமாறும் கேட்டிருந்தார். ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஒத்துழைக்க முடியும் என்றும், ஜனாதிபதியின் இது குறித்த திட்டங்களைத் தெரியப்படுத்துமாறும் பதிலளித்திருந்தார். இருப்பினும் தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக அவர் சாதகமான கருத்தைக் கூறவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் கடந்த திங்கட்கிழமை இரவு நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ஐக்கிய தேசியக் கட்சிமீது கடுமையான தாக்குதல் கணைகளைத் தொடுத்திருந்தார். இவ்வுரையினை செவிமடுத்தவர்களே, ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதியின் தீர்வுத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வராது என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, நோர்வே நாட்டின் வெளிவிவகார அமைச்சர் நாட் வொலிபேர்க் இன்னும் சில தினங்களில் இலங்கைக்கு வரவிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ளவிருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

இருதரப்பாருக்குமிடையில் மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் இருந்தோ அல்லது இல்லாமலோ பேச்சுவார்த்தைகள் இடம்பெறலாம். ஆனால் ஒரு தீர்க்கமான நிரந்தர சமாதானம் ஏற்பட இதுமட்டும் போதுமானதாக இருக்க முடியாதென்றே அவதானிகள் கருதுகின்றனர். இந்நாட்டின் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு இல்லாமல் நிரந்தரமான சமாதானம் நிலைபெற முடியாது என்றே கருதப்படுகிறது.

கடந்த காலங்களில் இனப்பிரச்சனைத் தீர்வுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் நிலைபெறாமல் போனமைக்கும் ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் ஆளும் தரப்பினர் ஏனைய எதிர்க்கட்சிகளின் கருத்தை அறிந்து அக்கட்சிகளினது ஒத்துழைப்பினைப் பெறாமல் போனமையே பிரதான காரணமாகும்.

இந்த உண்மையை உணர்ந்து, எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் புலிகளுடனான பேச்சு வார்த்தைகளை அரசாங்கம் நடத்த முன்வரவேண்டும். தவறும் பட்சத்தில் சமாதானத்துக்கான விடிவுகாலம் என்றும் தோன்றப்போவதில்லை. ■

## பாராளுமன்றம் கலைக்கப்படும்?
### மார்ச்சில் பொதுத் தேர்தல்!

அவசரகால நீடிப்புக்கான பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதைத் தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற செய்தி பரவலாகப் பேசப்படுகிறது. மார்ச்மாத முடிவுக்குள் பொதுத் தேர்தல்கள் நடைபெறக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

அரசியல் யாப்புச் சீர்திருத்தத்துக்கான மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற இன்றுள்ள பாராளுமன்றத்தில் வாய்ப்பில்லை. எனவே பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலை வைத்தால் தேவையான மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெறலாம் என்று ஜனாதிபதியும் ஆளும் கட்சிப் பிரமுகர்களும் நம்புவதாகத் தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிக்காவுக்குக் கிடைத்த வாக்குகளைக் கொண்டு, பொதுத் தேர்தலில் அதிகப்படியான ஆசனங்களை பொதுஜன முன்னணி பெறும் என்று ஆளும் கட்சியினர் பெரிதும் நம்புகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது இனப்பிரச்சனைத் தீர்வுக்கான புதிய அரசியல் தீர்வு யோசனைகளை உள்ளடக்கிய தீர்வுப் பொதியை, தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், "எவருடைய ஆதரவும் தயவும் இல்லாமல் நடைமுறைக்குக் கொண்டு வருவேன்!" என்று ஜனாதிபதி சந்திரிக்கா வாக்குறுதி அளித்தார். ஆனால் நாட்டில் நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பு இதற்கான சரத்துக்களைக் கொண்டதாக இல்லை என்று சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிகிறது.

இதனாலேயே பொதுத் தேர்தலை கூடிய விரைவில் வைப்பதற்குத் திட்டமிடப்படுவதாக அறியப்படுகிறது. ■

## 'சிறிக்கொத்தா' கைப்பற்றும் திட்டம்?
### தோல்வியில் முடிந்தது!

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை நிலையமான 'சிறிக்கொத்தா' கட்டடத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகள் பலனளிக்கவில்லை என்று தெரிய வருகிறது. இக்கட்டடம் தற்போது பத்தறமுல்லையில் உள்ளது. ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேறிய சிலரே இம்முயற்சியிலீடுபட்டதாக நம்பப்படுகிறது.

சேர் ஜோன் கொத்தலாவெல முன்னாள் சில ஆண்டுகள் இந்நாட்டின் பிரதமராகப் பதவி வகித்தவர். ஏராளமான சொத்துக்குச் சொந்தக்காரர். ஆனால் அவர் திருமணமாகாதவர். வாரிசுகளும் கிடையாது. கொள்ளுப்பிட்டியில் ஒரு பிரமாண்டமான மாளிகை அவருக்கிருந்தது. இதற்கே 'சிறிக்கொத்தா' என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. இதனை அவர் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கே கொடுத்துவிட்டார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இம்மாளிகையை விட்டுவிட்டு பத்தரமுல்லையில் ஒரு கட்டடத்தை அமைத்து 'சிறிக்கொத்தா' என்று பெயரும் சூட்டி கட்சியின் தலைமை யகமாக அமைத்துக் கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் உட்கட்சி மோதல்கள் மலிந்து விட்டன. பல பிரபலமானவர்கள் கட்சியை விட்டு வெளியேறினர். பிரேமதாசா காலத்தில் கட்சியின் செயலாளராகவிருந்த சிறிசேன குரேயும் கட்சியிலிருந்து வெளியேறினார்.

தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் வழி நடத்தலில் வெறுப்புற்ற பல நீண்டகால கட்சிப் பிரமுகர்கள் அண்மையில் வெளியேறி, பொதுஜன முன்னணியில் சேர்ந்து விட்டனர். நாட்டின் தேசிய நெருக்கடிக்கான பிரச்சனையாக விளங்கும் இனப்பிரச்சனையில் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் நிலைப்பாடு ஏற்புடையதாகவில்லை என்று குற்றஞ்சாட்டி இன்னும் பல பிரமுகர்கள் ஐ.தே.கவை விட்டு வெளியேறப் போவதாக செய்திகள் அடிபடுகின்றன.

இக்காலகட்டத்தில்தான் கட்சியின் தலைமைப்பீடமான சிறிகொத்தாவைக் கைப்பற்றித் தம்வசமாக்க-ஏற்கனவே கட்சியை விட்டுப் பிரிந்து சென்றவர்கள்-இரு தட்வைகள் முயற்சித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த டிசம்பர் 22ம் திகதி திங்கட்கிழமை சிறிகொத்தாவைக் கைப்பற்ற முதலாவது திட்டம் தீட்டப்பட்டுள்ளது. ஆனால், ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றதைத் தொடர்ந்து நாட்டில் பதற்றநிலை இருந்தமையினால் அம் முயற்சி ஒத்தி வைக்கப்பட்டது எனத் தெரிகிறது. அடுத்ததாக டிசம்பர் 27ம் திகதி திங்கட்கிழமை இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன.

வாடகைக்கு அமர்த்தப்பட்ட தனியார் பஸ் வண்டிகளில் தொண்டர்களைக் கொண்டு போய் சிறிகொத்தாவைக் கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஐ.தே.கட்சியின் முன்னாள் முக்கியஸ்தரின் ஆசியுடன், அண்மையில் ஆளும் கட்சியில் சேர்ந்து கொண்டவர்களும் ஏனைய பிரபலங்களும் இணைந்து கட்டடத்தைக் கைப்பற்ற ஆயத்தமாயினர்.

இதற்கிடையில், சிறிகொத்தாவைக் கைப்பற்றத் தயாராகிவிட்ட தகவல் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்குத் தெரிந்துவிட்டது. உடனடியாகவே செயலில் இறங்கித் தனது ஆதரவாளர்களை-பூரண ஏற்பாடுகளுடன் சிறிகொத்தாவுக்கு ரணில் அனுப்பி வைத்துள்ளார்.

தங்கள் இரகசியத்திட்டம் அம்பலமாகிவிட்டதனை அறிந்த கைப்பற்றும் குழுவினர் தங்கள் திட்டத்தை உடனடியாகக் கைவிட்டுள்ளனர்.

எப்படியோ ஒரு பாரிய மோதல் தக்க தருணத்தில் தவிர்க்கப்பட்டதனால் சகலரும் ஓரளவு திருப்தி அடைந்துள்ளனர்.

## இப்படியும் நடக்கலாமா?

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக்கூட்டம் கொழும்பு நகர மண்டப முன்றிலில் கடந்த டிசம்பர் 18ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றபோது, தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டை வெடிக்க வைத்ததும் ஜனாதிபதி சந்திரிக்கா மயிரிழையில் உயிர் தப்பியதும் தெரிந்ததே.

இக்குண்டு வெடிப்பில் எம்.ரி.வி தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த படப்பிடிப்பாளர் இண்டிக பத்திரணம் என்பவரும் சுயாதீனத் தொலைக்காட்சி சேவைப் படப்பிடிப்பாளர் அநுர பிரியந்த குரே என்பவரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்த ஊடகவியலாளர் இருவரினதும் ஆத்மசாந்திக்கான சிறப்பு பூசை ஒன்றினை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஜயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நடத்தியது.

இந்நிகழ்ச்சியைத் தனியார் ஒளிபரப்பு நிறுவனங்கள் படமாகப்பிடித்து ஒளிபரப்பின. ஆனால் ரூபவாகினி செய்தியின் போது, ஜனாதிபதி சந்திரிகா பூரணகுணமடைய வேண்டும் என்று பூசையும் பிரார்த்தனையும் நடைபெற்றதாகத் திரித்துக்குறிப்பிட்டனர். ஜனாதிபதி உடல் நலம் பெற வேண்டும் என்று பூசை பிரார்த்தனை நடைபெறுவதை எவரும் தவறாகக் கருதமாட்டார்கள். ஆனால் ஊடகவியலாளர்களின் ஆத்மசாந்திக்காக நடைபெற்ற பூசையை - ஜனாதிபதி நலம்பெற வேண்டும் என்பதற்காக நடைபெற்றதொன்றாகக் குறிப்பிட்டது ஜனாதிபதியையே அவமதித்ததாகக் கொள்ளப்படலாம் அல்லவா?.

எதற்காக இத்தகைய திரிபுவேலை? இதனால் ரூபவாகினி நேயர்களையும் ஏமாற்றிவிட்டனரே! ■

## நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

புனிதமான றமழான் நோன்பை நோற்று பெருநாளைச் சிறப்புடன் கொண்டாடும் எமது வாசகர்களுக்கு இதயம் கனிந்த வாழ்த்துக்களை முரசு தெரிவித்துக் கொள்ளுகிறது.

2000ம் வருடம் ஆரம்பத்தில் றமழான் பெருநாளைக் கொண்டாடும் இஸ்லாமியச் சகோதரர்கள், இவ்வாண்டின் இறுதியிலும் இரண்டாவது தடவையாக பெருநாளைக் கொண் டாடும் பாக்கியம் பெற்றவர்கள் என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

ஆசிரியர்

## சமகால மொழிபெயர்ப்பில் சாதனை!

கடந்த ஜனவரி 2ம் திகதி திங்கட்கிழமை இரவு 8.30க்கு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டுமக்களுக்கு உரையாற்றினார். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத் தமிழ் தேசிய சேவையில் ஜனாதிபதியின் உரையை திரு.எம்.கே. ராகுலன் அவர்கள் தமிழில் சமகால ஒலிபரப்புச் செய்தார். சுமார் 3 மணி 8 நிமிடங்கள் தொடர்ந்த ஜனாதிபதியின் உரையை அதே அளவுநேரம் திரு.ராகுலன் தமிழில் மொழி பெயர்த்தார்.

மூன்று மொழிகளிலும் சமகால ஒலிபரப்பினைச் செய்யும் ஆற்றல் படைத்த திரு.ராகுலன், பாராளுமன்றத்தில் சமகால மொழிபெயர்ப்புச் செய்யும் பிரிவின் தலைவராக, பல்லாண்டுகளாக விளங்குகிறார். இருப்பினும் தொடர்ந்து இத்தனை நேரம் சமகால ஒலிபரப்பினை, வேறு எவரும் வேறு எந்த நாட்டிலும் செய்ததில்லை என்று கருதப்படுகின்றது.

ஆகவே இச்சாதனை உலகச் சாதனைப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டிய தொன்றாகும். ■

## செஞ்சிலுவைச் சங்க கப்பல் சேவை அட்டவணை

சர்வதேச செஞ்சிலுவைக் குழு திருக்கோணமலைக்கும் யாழ்குடா நாட்டுக்கும் இடையிலான ஜனவரி மாதத்துக்குரிய தனது கப்பல் சேவை பற்றிய அட்டவணையை வெளியிட்டுள்ளது.

இதன்படி ஜனவரி 11, 17, 20, 25, ந் திகதிகளில் திருகோணமலையிலிருந்து புறப்படும் கப்பல், ஜனவரி 6, 13, 19, 22, 27 ந் திகதிகளில் குடாநாட்டிலிருந்து திரும்பி வரவுள்ளது.

நோயாளர்களை ஏற்றிச் செல்வதைப் பிரதான இலக்காகக் கொண்ட இச்சேவையின்போது தபால் பொதிகள் வேறு அத்தியாவசியப் பொருட்கள் என்பனவும் ஏற்றிச் செல்லப்படவிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. ■

## 15 வருடங்களாக தமிழ்ப் பிரதேசங்கள் காத்திருப்பு!
### 15 நாட்களுக்குள் சிங்களப் பகுதியில் கொடுப்பனவு!

ஜனாதிபதித் தேர்தல் பிரசார இறுதித் தினமான டிசம்பர் 18ஆம் திகதியன்று கொழும்பு நகரசபை வளவிலும், ஜா-எலவிலும் குண்டுகள் வெடித்ததனால் 36 பேர் கொல்லப்பட்டார்கள், ஜனாதிபதி உட்பட நூற்றிருபது பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்தார்கள் என்பதும் தெரிந்ததே.

குண்டு வெடிப்பில் உயிரிழந்தோருக்கான முதற்கட்டக் கொடுப்பனவுகள் உடனடியாகவே வழங்கப்பட்டுவிட்டன. மிகுதிக் கொடுப்பனவுகள் அடுத்த சில தினங்களில் வழங்கப்பட்டுவிட்டன.

இதேபோன்று அச்சம்பவத்தில் காயமடைந்தோருக்கான கொடுப்பனவு வேலைகளும் முடிவடைந்து விட்டன.

சம்பவம் நடைபெற்று 15 நாட்களுக்குள் இழப்பீட்டு வேலைகள் பூர்த்தியடைந்து விட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடக்கு-கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் கடந்த 15 வருடங்களாக கொடுப்பனவு வழங்கப்படாத நிலையில் ஆயிரக்கணக்கான கொல்லப்பட்டோரினதும், காயமடைந்தோரினதும் விண்ணப்பங்கள் கவனிப்பின்றித் தேங்கிக் கிடக்கின்றன.

'இழப்பீடுகளை வழங்கி முடிப்பதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடுகள் தமக்கு வந்து சேர்வதில்லை' என்று தமிழ்ப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தாம் பல்வேறுபட்ட கோரிக்கைகளை விடுத்தும் அவை கரிசனைக்கு எடுபடுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வேடிக்கையான விபரீதம்
### பட்டாசுகளுக்குப் பதில் துப்பாக்கி வேட்டுக்கள்!

வேடிக்கைப் பட்டாசு வெடிகளுக்குப் பதிலாக வடக்கு-கிழக்கு மக்கள் விபரீதமான துப்பாக்கி வேட்டுச் சத்தங்களையே கேட்க வேண்டியிருந்தது.

இரண்டாயிரமாம் புத்தாண்டுப் பிறப்பைக் குதூகலத்துடன் வரவேற்கும் பட்டாசு வேடிக்கைகள் வேறு பகுதிகளில் கேட்டாலும், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களே புத்தாயிரமாம் ஆண்டை வரவேற்க முழங்கின.

நள்ளிரவு 12 மணிக்கு இராணுவ முகாம்கள், அதிரடிப்படை முகாம்கள், பொலிஸ் நிலையங்கள், காவலரண்கள், தமிழ் ஆயுதக் குழுக்களின் முகாம்கள் சகலவற்றிலிருந்தும் நாலாபுறமும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களே முழங்கின.

ஏற்கனவே துப்பாக்கி, ஷெல்- வெடியோசைகளால் அஞ்சி ஒடுங்கிப் போயிருக்கும் மக்கள் இந்த வெடியோசைகளால் மேலும் கிலி கொள்ள வேண்டியேற்பட்டது.

வேடிக்கை நிகழ்ச்சிகளுக்குக்கூட தமிழ்ப் பிரதேசங்களில் விபரீத துப்பாக்கிச் சூடுகளே நடத்தப்படுகிறது.

மட்டக்களப்பு-இருதயபுரப் பொலிஸார் புத்தாண்டை வரவேற்று, நள்ளிரவு 12 மணிக்குச் சரமாரியாகச் சுட்டதில் ஓர் இளைஞர் பரிதாபமாக மரணமானார். ஆர்.சூரியபிரகாஷ் (20) என்ற அந்த இளைஞரை கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

சென்ற முறை புத்தாண்டு வேளையிலும் இதே இடத்தில் இதே விதமாக ஓர் இளைஞர் காயமடைந்தது நினைவிருக்கலாம்.

'சாதாரண வேடிக்கை நிகழ்ச்சிகளுக்கு துப்பாக்கிச் சூடுகள் நடத்தக்கூடாது' என்ற கட்டுப்பாடுகளும், கண்டிப்பான உத்தரவுகளும் இருந்த போதும், தமிழ்ப் பிரதேசங்களில் மேலும் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாகவே இப்படி நடத்தப்பட்டது என்று மக்கள் வேதனைப்பட்டுக் கொள்கிறார்கள். ■

## ஆசிரியர்களுக்கு பழிவாங்கல் இடமாற்றம்

கல்முனைக் கல்வி வலயத்தில் உள்ள ஆசிரியர்கள் பலருக்கு எதுவித காரணமும் கூறப்படாமல் திடீர் இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

குறிப்பாக கர்ப்பிணி ஆசிரியைகளும் தூரமான கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் திடீர் இடமாற்றம் குறித்துப் பட்டதாரி ஆசிரியர் சங்கம் அதிருப்தி தெரிவித்து, வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர். அசோகா ஜெயவர்தனாவுக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே பாடசாலை ஆசிரியர்கள் பெரும்பாலானோர் கல்முனை கல்வி வலயத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அரசியல் ரீதியிலான பழிவாங்கலாகவே இதைக் கருதவேண்டியுள்ளது. எனவே இந்த இடமாற்றங்கள் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ■

## படையினர் மீது தாக்குதல்!
### படையினரின் சடலங்களைப் புலிகள் ஒப்படைத்தனர்!

மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலையில் மியான்கல் குளத்தில் படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அந்தச் சம்பவத்தில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர். இரண்டு படையினர் காயமடைந்தனர். புலிகள் கைப்பற்றியிருந்த படையினரின் இரு சடலங்களையும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுமூலம் இராணுவத்தினரிடம் கிடைக்கச் செய்தனர்.

கடந்த 31.12.99 அன்று காலை இச்சம்பவம் இடம் பெற்றது. இதனையடுத்து பிரதான கொழும்பு-மட்டக்களப்பு நெடுஞ்சாலை மருங்குகளில் இருந்த பற்றைக் காடுகள் வெட்டித் துப்புரவாக்கப்படுகின்றன.

## சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளி நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA,
T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. HP 97651074

## சிந்தித்துப் பாருங்கள்

நோவு, வலி ஏற்படுகின்றபோது வைத்தியரின் ஆலோசனையின் படி, மருந்து வில்லைகளை பாவிப்பதே சிறந்தது. எனினும், எல்லாவகையான வலி, நோவுகளுக்கும் மருந்து வில்லைகளை உட்கொள்வது சிறந்ததா?

மரம். செடி. வேர். மலர். பட்டை ஆகியவற்றின் சாரைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் **சித்தாலேப**யை தடவி வலி. நோவுகளில் இருந்து நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இலங்கையில் இலட்சக்கணக்கான **சித்தாலேப** பாவனையாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

இலங்கை சுகாதாரத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற **சித்தாலேப** ஐ.எஸ்.ஓ. 9002 (ISO 9002) சர்வதேச தர நிர்ணயத்தின் மேற்பார்வையின் கீழ் உற்பத்திசெய்யப்படுகின்றது.

**சித்தாலேப**

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரைவெட்) லிமிட்டெட்.
**33/3,** ஸ்ரீ தர்மாராம வீதி. இரத்மலான.
டெலிபோன்: 736910 பெக்ஸ்: 735465

TALENT A&M

## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM SERVICES INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"

## பிறந்த நாள் வாழ்த்து



சஜீரதன் 01.12.1998 | ஷாதனா 19.11.1996

திரு.திருமதி சிவசுந்தரம்-முத்துமலர் தம்பதியாின் செல்வப் புதல்வியான 'ஷாதனா' செல்வப் புதல்வனான 'சஜீரதன்' இவ்விருவரின் பிறந்தநாளை 01.12.1999ல் தங்களது இல்லத்தில் கொண்டாடினார்கள்.

இவர்களை அன்பு அப்பா, ஆசை அம்மா, சித்திமார்கள், அண்ணன்மார்கள், பாட்டா, பாட்டிமார்கள், அக்காமார்கள், அத்துடன் லண்டனில் வசிக்கும் சதானந்தினி அருட்குமரேசன் தம்பதியினரும் தங்கை நிஷாதனா மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-சி.பாலகிருஷ்ணன்

## 31ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
08
06
1937



ஆண்டவன் அடியில்
05
12
1999

**திருமதி அன்னமேரி லிகோறி**
மணல்காடு, குடத்தனை.

அன்பின் அம்மாவே!
எமை விட்டு பிரிந்து
முப்பத்தியொரு நாட்கள்
மறைந்ததம்மா.
பாசத்தை சொரிந்தே
எங்களை வளர்த்தீரம்மா.
பாசக்கடலே உமை நினைத்து
ஏங்கி தவிக்கின்றோம் எந்நாளும்

*உங்கள் பிரிவால் துயருறும்*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்மார், பெறாமக்கள், உறவினர்கள்.*

தகவல்:- மகன்
லி.சைமன் றூபேட், இத்தாலி.

## L ட்றைவிங் பயிற்சி

பிரபல போதனாசிரியர்

K. Senthil Moahan
Registered Driving Instructor
(All Class of Vehicle)

- முழுமையானதும் தெளிவானதுமான விளக்கம்
- ஆண் /பெண் இருபாலருக்கும் விரைவான பயிற்சி
- பயிற்சியின் முடிவில் லைசென்ஸ் பெற்றுத்தரப்படும்
- இன்டர்நாஷனல் லைசென்ஸிற்கும் ஒழுங்கு செய்யப்படும்
- உங்களுக்கு ஏற்றவாறு நேர ஒழுங்கு செய்துதரப்படும்
- சனி ஞாயிறு உட்பட வாரத்தில் முழு நாட்களிலும் பயிற்சி

No. 385 1/1, Galle Road, Wellawatta,
Telephone : 075-516532, 075-522171



## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

## சைப்பிரசில் கல்வி கற்றல்

கனடா. ஐக்கிய அமெரிக்கா. ஐக்கிய இராச்சியம். நியூ சீலாந்து. அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு இடமாற்றம் பெற வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

விஸா உறுதிப்படுத்தப்படும்

ஜனவரி/பெப்ரவரி தவணைக்கு இப்பொழுதே பதிவு செய்து கொள்க.

**மில்லெனியம்**
இல. 1/10, கொழும்பு பிளாசா,
இல. 50, காலி வீதி, வெள்ளவத்தை.
(வெள்ளவத்தை ஜும்மா பள்ளி வாசலுக்கு அடுத்ததாக,
அலுவலக நேரம் : காலை 9.30 முதல் மாலை 4.30 வரை)
**Tel: 074 - 515339, 505744**

## வாடகைக்கு வீடு

தெஹிவளை-களுபோவிலையில் முழு வசதிகளுடன் கூடிய 3 படுக்கை அறைகளைக் கொண்ட மேல் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 52, சிறிமகா விகாரைவீதி, களுபோவிலை, தெஹிவளை.

## Computer Classes

தெல்வத்த சந்தியில்
Computer Classes நடாத்தப்படுகின்றன.
MS Office '97 & 2000, Page Maker 6.5.
(Typesetting) CorelDraw 9.0 Programming, Internet & E-mail.
அனைத்து பயிற்சிகளும் தமிழ் மொழிமூல விளக்கத்துடன் நடாத்தப்படுகின்றன.

கட்டணம் தவணை முறையில்

**UNDER "CREATION"**
D.S.COMPUTER STUDIES
241, COL RD, TELWATTA JUNCTION,
NEGOMBO. TEL:-031-35904-6

## COMPUTER CLASSES

- Diploma in Software Engineering
- Diploma in Windows Application
- Diploma in Computer Programming
- Diploma in Desk-Top Publishing
- Micro Soft Office '97 & '2000
- Internet & E-mail
- Children Courses
- Hardware in Engineering
- Games (60/=per hour)

Typesetting Eng-Tam & Sin with 3 Colour Available

Spoken English Classes தரம் 5க்கான Scholorship Classes தமிழ் ஆங்கில தட்டெழுத்துப் பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன.

தொழில்புரிவோருக்கும் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

**D.S Computer Studies No.6A Hekitta Road, Wattala**
**Tel: 075-349247 E-mail: dscom @ mail. visual.lk**

## MATHS

**2000' O/L GRADE 10,9,8**
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
By: **T.RAMESH**
**HARROW** No.9 Rajasinghe Rd, Wellawatte, Col-06. Tel : 556972

## புதிய பிரிவுகள்

O/L, A/L மாணவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

| பாடநெறி | காலம் | கட்டணம் |
|---|---|---|
| DIPLOMA IN COMPUTER STUDIES | 3மாதம் | 5,500/- |
| CERTIFICATE IN MICROSOFT OFFICE | 3மாதம் | 6,000/- |
| DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | 3மாதம் | 6,000/- |
| DIPLOMA IN HARDWARE ENGINEERING | 2மாதம் | 5,000/- |
| CERTIFICATE IN DESKTOP PUBLISHING | 3மாதம் | 6,500/- |
| CERTIFICATE IN VISUAL BASIC | 2மாதம் | 5,000/- |

INSTITUTE OF INFORMATION SYSTEMS (Pvt)Ltd.
IIS (Affiliated to IMIS U.K)
379,1 st Floor Galle Road, Colombo-06
Tel : 074-517390, 077-319426

## உலகப் புகழ்பெற்ற எக்ஸ் ஓயில்

TRADE MARK

- ★வாதத்தால் வரும் வலிகள்
- ★உணர்ச்சியற்ற பாகங்கள்
- ★பிரயாணக்களைப்பு
- ★தலைப்பாரம்
- ★தலைச்சுற்று
- ★ஜலதோஷம்
- ★வயிற்றுவலி
- ★தலைவலி
- ★காய்ச்சல்
- ★பல்வலி
- ★காதுவலி
- ★மூக்கடைப்பு
- ★பூச்சிக்கடிகள்
- ★தசை வலிகள்
- ★சுளுக்கு ★இருமல்
- ★மதுவால் ஏற்படும் பிரச்சினை



Rs. 20.00 Only
(3m.l)

**ஆகியவற்றிக்கு உடனடி நிவாரணி**

ஏக விநியோகிஸ்தர்
**SINGHA HOLDINGS (PVT) LTD.**
14, Ground Floor-Welikada Plaza-Rajagiriya.
Tel: 888214 Fax: 682984

# அரசியலில் புதிய திருப்பங்கள்?

-நரன்-

ஜனாதிபதி மீண்டும் ஒரு சமாதான அழைப்பை விடுத்துள்ளார்.

இலண்டன் சிகிச்சைக்குச் சென்றிருந்த போது பி.பி.சிக்கு கொடுத்த பேட்டியில் தான் தனி நாட்டைத் தவிர வேறு எதைப் பற்றியும் பேசத்தயார். புலிகளோடு மேசையில் அமரவும் தயார். தமிழ் மக்கள் அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு வர நிர்ப்பந்திக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

பின்னர் இலங்கை வந்த பின்னும் இத்தகைய ஒரு கருத்தை மீண்டும் தெரிவித்திருந்தார்.

இப்போது அடுத்து ஒரு மதத்தலைவர்களின் தூதுக்குழுவை புலிகளின் கருத்தறிய அனுமதித்துள்ளார்.

இத்தகைய விடயங்களைப் பார்க்கும் போது ஏதேனும் புதிய திருப்பம் நிகழுமா என்ற ஆதங்கம் எவருக்கும் எழக்கூடும். ஆனால் அதற்கு இன்னும் பல விடயங்கள் தெளிவாக்கப் படவேண்டும்.

முதலில் இந்த அழைப்புக்கூட ஒரு சம்பிரதாயத் தனத்தையே கொண்டிருக்கிறது. அக்கறையுடனான தீவிரமான ஒரு முயற்சியாக இது காணப்படவில்லை.

அப்படியான ஒரு முயற்சியானால் அது பேச்சுவார்த்தைக்கு வசதியான சில சூழ்நிலைகளை உருவாக்கும் செயற்பாட்டோடு இணைந்திருக்க வேண்டும். அத்தோடு பேச்சு வார்த்தைக்கான ஏதோ ஒரு சில அடிப்படை உத்தரவாதங்களை மறு தரப்பினரிடம் எடுத்துச் செல்வதாக இருக்க வேண்டும். இதனைக்கூட அரசியல் ஈடுபாடுகொண்ட வல்லுனர்களைக் கொண்டே மேற்கொள்ளவும் வேண்டும்.

மதத் தலைவர்களின் தூதென்பது அதிக பட்சம் ஒரு நல்லெண்ணத் தூதாக மட்டுமே அமைய முடியுமேயன்றி பேச்சுவார்த்தைகளுக்கான அரசியல் தளமொன்றை உருவாக்கப்போவதில்லை.

அதாவது இத் தூதென்பது பேச்சு வார்த்தையின் ஒரு கட்டமாக அன்றி, பேச்சு வார்த்தைக்கு முற்பட்ட ஒரு கட்டமாகவே பார்க்கப்பட முடியும்.

அத்தகைய ஒரு கட்டம் இன்றைய இறுகிப் போயுள்ள அரசியல் சூழ்நிலையை மென்மைப்படுத்த அவசியம்தான்.

ஆனால் அத்துடன் எதுவும் மாறிவிடப் போவதில்லை.

அத்தோடு,

இம் மதத் தலைவர்கள் புலிகளிடம் சென்று கேட்கக்கூடியது என்ன?

புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வரத் தயாரா என்பதைத்தான் கேட்க முடியும்.

அதற்குப் புலிகள் வழங்கக்கூடிய பதிலை, ஏற்கெனவே மாவீரர் தின உரையில் பிரபாகரன் தெரிவித்துவிட்டார்.

இப்பதிலின்படி,

சர்வதேச மத்தியஸ்தத்துடனான ஒரு பகிரங்கப் பேச்சு வார்த்தையையே அவர் வலியுறுத்தியுள்ளார்.

தூது செல்லும் மதகுருமாரிடம் அவ்வாறான ஒரு மத்தியஸ்துவத்தை ஏற்படுத்த சந்திரிக்கா அரசாங்கம் சித்தமாக உள்ளதா என்ற சமிக்ஞை இருக்கிறதா என்பதே இங்குள்ள முதற் கேள்வி.

அப்படியான ஒரு தெளிவான கருத்து சந்திரிக்காவிடம் இருந்து வெளிப்படவில்லை. அவர் இத்தகைய ஒரு கேள்விக்கு, தான் முன்னரும் சில வெளிநாட்டு மத்தியஸ்தர்களை ஈடுபடுத்தியுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் அதை ஒரு தெளிவான பதிலாகக் கொள்ள முடியாது. முன்னர் ஈடுபடுத்தியதென்பதை தற்போது ஈடுபடுத்தத் தயார் என்பதாக நாம் அடையாளம் காணலாமா என்பதே இதிலுள்ள மயக்கமாகும்.

முன்னர் ஈடுபடுத்திய அந்த மத்தியஸ்துவம் என்பதுகூட எந்த வகைப்பட்டதாக இருந்ததென்பதும் அடுத்த கேள்வி.

மத்தியஸ்துவம் என்பதில் வேறு வேறு வகைகளுண்டு.

முதலாவது வகை இரு தரப்பினருக்கும் மேலே நீதிபதி ஸ்தானத்திலிருந்து செய்யும் மத்தியஸ்துவம். இதில் மத்தியஸ்தர் ஒரு உத்தரவாதியாகவும் பொறுப்பேற்பார். இரு புறத்தினரதும் வாக்குறுதிகளை நிறைவேற்ற நிர்ப்பந்தம் செலுத்துவார். தவறான நிபந்தனைகளை நிராகரிப்பார். இரு தரப்பினரையும் இணங்கச் செய்ய சில நெருக்குதல்களை வகிப்பார்.

இத்தகைய ஒரு மத்தியஸ்துவத்தை இலங்கை அரசாங்கம் ஏற்கவில்லை. எம்மீது எவரும் நிர்ப்பந்தம் திணிக்க அனுமதிக்க முடியாது என்பதே இலங்கை அரசாங்கத்தின் எண்ணம்.

அப்படியானால் அடுத்த ஒருவகை மத்தியஸ்தம் இரு தரப்பினரையும் எவ்வித நிர்ப்பந்தத்துக்கும் உள்ளாக்காமல் ஒருவரின் செய்தியை மற்றவருக்கு காவிச் செல்லும் 'தபால்காரர்' பாத்திரத்தை மட்டுமே வகிப்பது. இதை 'மெஸெஞ்சர்' என்பர்.

அத்தகைய ஒரு மத்தியஸ்துவம் பேச்சு வார்த்தையில்கூட பங்கேற்க மாட்டாது. விலகியிருந்து, நடக்கும் பேச்சுவார்த்தையை அவதானிக்க மட்டுமே அது செய்யும். இத்தகைய ஒரு மத்தியஸ்துவம் பேச்சு வார்த்தையை ஏற்படுத்துவதற்கான விடயங்களில் உதவக் கூடியதாக இருக்க முடியுமேயன்றி பேச்சுவார்த்தையை இட்டுச் செல்வதற்கு லாயக்கற்றது. இதனை வெளிநாட்டவர் இன்றி உள்நாட்டு சமாதான விரும்பிகளும் செய்யலாம். இப்போது தூதுசெல்லும் மதகுருமாரும் அத்தகைய ஒருவகைப் பாத்திரத்தை வகிக்கலாம்.

இதைத் தவிர அடுத்த ஒருவகை மத்தியஸ்துவம் இரு தரப்பினருக்கும் இடையே 'மீடியேட்டர்' என்றழைக்கப்படும் இடைத் தரகர் பாத்திரத்தை வகிப்பது. இதில் ஒரு தரப்பினரது கருத்துக்களை மறு தரப்பினருடன் விவாதித்து ஏற்க வைக்கவும் அதில் அவர்கள் காணும் குறைபாடுகளை அடுத்த தரப்பினருக்குச் சுட்டிக்காட்டி திருத்தியமைக்க வைப்பதுமான நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொள்வர். பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை இரு தரப்பினரும் பேண அழுத்தம் கொடுப்பர். நிபந்தனைகள், நடவடிக்கைகள் மீது மதிப்பீட்டையும் தெரிவிப்பர். ஆனால் வலிந்த ஒரு நிர்ப்பந்தத்தை இவர்கள் மேற்கொள்ளப் போவதில்லை.

ஏதோ ஒரு அளவிலாவது இணக்கப்பாடுள்ள ஒரு சூழ்நிலையில்தான் இத்தகைய மத்தியஸ்துவம் வெற்றியளிக்கும். அத்தகைய இணக்கப்பாடு இல்லையெனக் கண்டால் இந்த மத்தியஸ்தர்கள் ஒதுங்கிக் கொள்வர். ஒருவேளை இரு பகுதியினரது சரி பிழைகளைப் பற்றி ஓர் அபிப்பிராயத்தை மட்டும் இவர்கள் தெரிவிக்கலாம். தெரிவிக்காதும் விடலாம்.

சந்திரிக்கா அரசாங்கத்தைப் பொறுத்த வரை இவ்வகையான மத்தியஸ்தங்களில் மீடியேட்டர் என்ற வகையினரையே ஏற்கின்ற நிலைமை உள்ளது. வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிப்படுத்திருந்த



அபிப்பிராயங்களும் இதைத்தான் தெரிவிக்கின்றது.

இதை இரு வகையிலும் ஒருவர் எடுத்துக் கொள்ளலாம். இலங்கை அரசாங்கம் சர்வதேச மத்தியஸ்துவத்தை மறுக்கின்றது என்றாலும் ஒருவகையில் சரி-ஏனெனில் நீதிபதி ஸ்தானத்திலான ஒரு மத்தியஸ்துவத்தை அது நிராகரிக்கின்றது.

மறுபுறம் இல்லை, நாம் சர்வதேச மத்தியஸ்துவத்துக்கு உடன்பட்டே இருந்தோம் என்று சந்திரிக்கா அரசாங்கம் கூறவும் முடியும். அதைத்தான் அவர் பி.பி.ஸி. பேட்டியில் வெளிநாட்டவரைப் பேச்சுவார்த்தை முயற்சியில் ஈடுபடுத்தியதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர்களது பங்கு வெறும் இடைத் தரகர்களாகத்தான் இருந்தது.

அத்தோடு அவ்வாறான பேச்சு வார்த்தைகள் இரகசியமாக நடப்பதா பகிரங்கமாக நடப்பதா என்பதும் சர்ச்சைக்குரிய விடயம்.

அரசாங்கத்துக்கு 'மீடியேட்டர்' வகை மத்தியஸ்துவங்களை ஏற்பதில் சில வசதிகள் உண்டு. இனப் பிரச்சனையின் முட்டுக்கற்களாகப் போடப்பட்ட சில முக்கியமான சட்ட மூலங்களை அரசியலமைப்புச் சட்டம் என்ற பதாகையில் மாற்ற முடியாத விடயங்களாக சமர்ப்பிக்கலாம். அத்தோடு மத்தியஸ்தர் தம்மீது நிர்ப்பந்தம் செய்ய அனுமதிக்காத அதேவேளை எதிர்த் தரப்பினரின் செயற்பாடுகளை முரட்டுத்தனமான, விட்டுக்கொடுப்பற்ற செயற்பாடுகளென அவர்களுக்குச் சுட்டிக்காட்டி பழியை மறுபுறம் போட்டுக்கொள்ளலாம்.

பேச்சு வார்த்தையில் இலங்கை அரசுக்கு எந்த வகையிலாவது ஒரு பாதிப்பான நிலைமை தோன்றினால் அந்த நேரத்தில் வசதியாக பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகிக் கொள்ளலாம். அதற்கான சாட்டுக்களாக, மக்கள் எதிர்க்கிறார்கள், மதத் தலைவர்கள் எதிர்க்கிறார்கள், எதிர்க்கட்சி எதிர்க்கிறது, அரசியல் சட்டத்துக்கு விரோதமாகச் செயற்பட முடியாது என்பன போன்ற காரணங்களைத் தாராளமாகப் பாவித்துக் கொள்ளலாம்.

இதேவேளை, புலிகளைப் பொறுத்த வரையில் இப் பேச்சுவார்த்தைக்கான சர்வதேச மத்தியஸ்துவத்தைப்பற்றிய வரையறை எதையும் இன்னும் தெளிவாக முன்வைக்கவில்லை. எனினும் இலங்கை அரசாங்கம் எதிர்பார்ப்பதைப் போல ஒரு நொய்தான மத்தியஸ்துவத்துக்கு புலிகள் இணங்கப் போவதில்லை என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

அப்படியாக அவர்கள் இணங்க மறுப்பதையும் இலங்கை அரசாங்கம் புலிகள்தான் சர்வதேச மத்தியஸ்துவத்தையும் மறுக்கிறார்கள் எனப் பறைசாற்றப் பயன்படுத்தலாம்.

எனவே, இங்கு மத்தியஸ்துவம் என்பது மட்டுமல்ல எத்தகைய மத்தியஸ்துவம் என்பதும் பிரச்சினையே.

இந்நிலையில், இப்போது ஜனாதிபதி விடுத்துள்ள சமாதான அழைப்பு, அதன் முதற்கதவையே திறக்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளதா என்பது கேள்விக்குரியது.

பேச்சுவார்த்தை பற்றிப் பேசப் போனால் மத்தியஸ்துவம் என்ற பிரச்சினை நிச்சயம் எழுந்தே தீரும். அதுவே பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான முட்டுக் கட்டையாக மாறியும் போகலாம்.

அடுத்துள்ள விடயங்களில் பிரதானமானவை நிபந்தனைகள். புலிகள் தலைவர் பிரபாகரன் கடந்த மாவீரர் தின உரையிலும் அதற்கு முன்னைய மாவீரர் தின உரையிலும் ஒரேவகையான சில நிபந்தனைகளை முன்வைத்துவந்துள்ளார். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்ற கருத்தை அவர் தெரிவித்தாலும் அது பேச்சுவார்த்தைகளை நடத்தும் போது நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும் என்றும் ஆனால் பேச்சுவார்த்தையை ஏற்படுத்துவதற்கு சில அடிப்படை நிபந்தனைகள் பூர்த்தி செய்யப் படவேண்டுமென்றுமே பொருள்பட்டு நிற்கிறது. அத்தகைய அவரது நிபந்தனைகள், யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடைகளை நீக்கல், படைகளை வாபஸ் பெறுதல் ஆகிய மூன்று விடயங்களை வலியுறுத்துகிறது.

எனவே பேச்சுவார்த்தைத் தூதுக்குச் செல்லும் இக் குழுவினர் அந் நிபந்தனைகளுக்கான அரசின் பதில் என்னவென்பதையும் எடுத்துச் செல்வது அவசியமாகிறது.

ஆனால் அரசாங்கம் இதுகுறித்த எவ் அபிப்பிராயங்களையும் வெளியிட்டுள்ளதாகத் தெரியவில்லை.

இதேவேளை,

ஜனாதிபதி சந்திரிக்கா வேறு சில விடயங்களையும் பற்றிப் பிரஸ்தாபித்துள்ளார்.

அவை புலிகளற்ற சமாதானச் செயற்பாட்டுக்கான முயற்சிகளாகத் தென்படுகின்றன. அதாவது, பாராளுமன்றத்தை அரசியல் சட்ட நிர்ணய சபையாக மாற்றுவது, தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது, கட்சி மாறுவதை அங்கீகரிக்கும் சட்டமூலமொன்றை நிறைவேற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஒரு பகுதியினரைத் தம் பக்கம் கவர்ந்திழுத்து பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கைப்பற்றி தீர்வுப் பொதியை நிறைவேற்றுவது, வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாக சபையை உருவாக்குவது, போன்ற விடயங்களை அவர் முன்னெடுத்துள்ளார்.

இவை புலிகளை வெளியே விட்டு மேற் கொள்ளப்படும் அரசியல் நகர்வுகளாக உள்ளன.

இவற்றில் அவர் அறுதியாக எவையெவற்றைச் செய்யப்போகிறார் என்று இன்னும் முடிவு கட்டவில்லை.

எப்படியாயினும் அரசியலமைப்புச் சட்டமொன்றைப் புதிதாக வரைந்து, அல்லது ஏற்கெனவே ஒரு கட்டத்துக்கு வந்துள்ள தீர்வுத் திட்டங்களைப் பூரணப் படுத்தி நிறைவேற்றும் ஒரு வகை முயற்சியாக இது அமையலாம்.

அப்படியான முயற்சி வரவேற்கக் கூடியதாயினும் அதையிட்டு இப்போதே அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்க முடியாது. அது, சமைப்பதற்கு முன் சமையலின் சுவை குறித்து அபிப்பிராயம் சொல்வது போலாகும்.

ஆனால் இம் முயற்சி தொடர்பாக உள்ள கேள்விகளை மட்டும் சொல்லி வைக்கலாம்.

முதலில் இம் முயற்சிகூட தற்கொலைத் தாக்குதல், தேர்தல் வெற்றிபோன்றவற்றின் உணர்ச்சித் தளத்தில் நிகழ்வதால் காலப் போக்கில் இதன் உற்சாகம் மங்குமா, மறையுமா என்ற சந்தேகங்களையும் தாங்கி நிற்கிறது. இன்று ஜனாதிபதிக்கு முன்னால் தடைக்கற்களைப் போடப் பயந்து எட்ட நிற்கும் பல்வேறு சக்திகள் இவ்வுணர்ச்சிச் சூடு தணிய மீண்டும் தங்கள் கைவரிசைகளைக் காட்டலாம். முன்னரும் சந்திரிக்கா ஏதோ ஒரு சில உருப்படியான விடயங்களோடுதன்னும் முன்வைத்த தீர்வு ஆலோசனைப் பொதியை இவர்கள் மெதுவாக வாங்கிச் சென்று அவிழ்த்துப் பிரித்து மலினப் படுத்தியதை நாம் கண்டோம்.

அடுத்து ஐ.தே.க.விலிருந்து மாறி வருபவர்கள், மற்றும் இவரது பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்ளேயே உள்ள எதிர்ப்பாளர்கள் ஆகியோர் இவ் அரசியலமைப்புச் சட்ட வரைவில் தமிழ் மக்களுக்கான உரிமைகளை எந்தளவுக்கு அங்கீகரிப்பார்கள் என்ற கேள்வியும் உள்ளது. தற்போது நிலைமை கருதி மௌனமாக இருக்கும் இவர்கள் தீர்வுத் திட்டங்கள் விவாதிக்கப்படும்போது எத்தகைய அழுத்தங்களைப் பிரயோகிப்பர் என்பதும் அச்சுறுத்தலாக உள்ள விடயம்.

இவ் அரசியல் திட்ட வரைவில் இவற்றை விட, தமிழ்த் தரப்பில் கருத்தாதிக்கம் செலுத்தக்கூடிய நிலையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் வலுவான நிலையில் இருப்பார்களா என்பது அடுத்த சந்தேகம்.

ஜனாதிபதித் தேர்தலில் எடுத்த நிலைப்பாடுகள் தொடர்பாக கூட்டணியினர்மீதான ஒரு அதிருப்தி நிலையே அரச தரப்பில் காணப்படுகின்றது. அதேவேளை ஈ.பி.டி.பி., புளொட் போன்ற மற்றைய பாராளுமன்றக் கட்சிகளுக்கு தேர்தல் காலத்தில் இருந்த செல்வாக்கு அவர்களின் தேவை முடிந்துவிட்ட இவ்வேளையில் அரசாங்கத்தில் இருக்குமா என்பதுவும் சந்தேகத்துக்குரியது. இத் தேர்தலில் அவர்கள் சந்திரிக்காவை ஆதரித்தாலும் பெரும்பான்மையான தமிழ் மக்கள் எதிர்த்துள்ளமையால் அரசாங்கத்தை நெருக்குதலுக்குள்ளாக்கும் தார்மீக பலம் தம்மிடம் இல்லையென்பதை அவர்கள் உணர்ந்தவர்களாக இருப்பார்கள். அரசாங்கமும் அவர்களை அவ்வாறே எடைபோடும். இந்நிலையில் பேரம் பேசக்கூடிய பாரிய சக்தியாகவுள்ள விடுதலைப் புலிகளே இதில் ஈடுபடாத வகையில் வெளியே வைத்துக் கொண்டு இவர்களால் எவ்வளவு தூரம் இவ்வரசியல் சட்ட வரைபில் முன்னேற்றங்களை ஈட்ட முடியும் என்பது மற்றைய விடயம்.

இறுதியில் அவ்வாறான ஒரு அரசியல் சட்டம் வரையப்பட்டாலும் தமது பங்கு பற்றல் இல்லாத இத் திட்டத்தை புலிகள் ஏற்க முன் வருவார்களா என்பதே பெருத்த சந்தேகம்.

புலிகள் சம்மதிக்காத ஒரு தீர்வுத் திட்டத்தை அமுலாக்குவதால் இந்நாட்டை உலுக்குகின்ற இந்த யுத்தத்தை நிறுத்த முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

எனவே புதிய அரசியல் திட்டத்தை வரைவதாக இருந்தால்கூட இதில் தெளிவான ஒரு விடயத்தைப்பற்றி முடிவெடுக்க வேண்டும்.

அதாவது, புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திவிட்டு அரசியல் திட்டத்தை வரைவதா, அரசியல் திட்டத்தை வரைந்துவிட்டுப் புலிகளுடன் பேசுவதா?

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினால்தான் புலிகளின் அபிலாஷைகளையும், அவர்களைத் திருப்திப்படுத்தும் தீர்வுகளையும் புரிந்து கொள்ளலாம். அப்படியான புரிதலோடு அரசியல் திட்டம் வரையப்பட்டாலே அவை அர்த்தபுஷ்டியானதாக இருக்கும்.

ஆனால் இதிலுள்ள சந்தேகம் என்னவென்றால் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான பேச்சுவார்த்தையே இன்னும் ஆரம்பிக்கப்படாத நிலையில், பேச்சுவார்த்தைக்கான புறச்சூழ்நிலைகளை மாற்றியமைத்து, இருபகுதியிலும் மனமாற்றங்களைத் தோற்றுவித்து பேச்சுவார்த்தையைத் தொடங்கி, முறிவடையாதவாறு முன்னெடுத்து அரசியல் தீர்வுக்கான இணக்கங்களைக் காணுவதற்கு எவ்வளவு காலமெடுக்கும் என்பதும், அது வரை இவ் அரசியல் திட்ட வரைவுக்காகக் கனிந்துள்ள சூழ்நிலை மாறாதிருக்குமா என்பதுவுமேயாகும்.

அப்படியில்லாமல் ஏதோ தமது விருப்பத்துக்கு ஏற்ற வகையில் பாராளுமன்றக் கட்சிகளுள் நிலவும் கருத்துக்களின் பலம், பலஹீனங்களை மட்டுமே கொண்டு வகுக்கப்படும் புதிய அரசியல் தீர்வுத் திட்டம் சிலவேளை தற்போதுள்ள ஒரேயொரு அரசியல் தீர்வான 13ம் திருத்தச் சட்டமூலமான மாகாண சபை அதிகாரங்களைவிட மேம்பட்டதாகக் கூட இருக்கலாம். இருந்தாலும் அவை புலிகளைத் திருப்திப்படுத்தும் அனைத்து அம்சங்களையும் கொண்டிருக்கப் போவதில்லை. இதனைப் புலிகள் நிராகரிக்கும் பட்சத்தில் இந்த யுத்தமும் ஓயப்போவதில்லை. இன்று புலிகள் இராணுவ சமபலத்தில் ஈட்டியுள்ள உயர் நிலையிலிருந்து மேற்கொள்ளப்போகும் எதிர்ப்புக்கு மத்தியில் இவர்களால் ஈட்டப்பட்ட இத் திட்டத்தை எவ்வளவு தூரம் அமுலாக்க முடியும் என்பதுவும் கேள்விக்குரியதே.

அன்று புலிகள் இத்துணை இராணுவ வளர்ச்சியை எய்திராத நிலையிலேயே வலுமிக்க இந்திய இராணுவத்தின் பெரும் எண்ணிக்கையான வீரர்களின் துணையுடன்கூட மாகாண அரசின் நிர்வாகத்தை செயற்படுத்த முடியாதுபோனபோது இன்று எப்படி அது சாத்தியப்படப்போகிறது என்பது சிந்திக்கப்படவேண்டிய ஒன்று.

எனவே இவ் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் தென்படும் புதிய திருப்பங்கள் அத் திருப்பங்களுக்குப் பின்னால் தொடர்ந்து செல்லக்கூடிய ஒரு பாதையை எமக்குக் காட்டவில்லை. கடந்து செல்லமுடியாத முடக்கங்களாகவே தற்போது தென்படுகின்றன.

இம் முடக்கங்களை நிமிர்த்தி சீர்செய்து பாதை வகுக்காவிட்டால் இன்றுள்ள போர் இன்னும் மிக உயர்ந்த கட்டத்துக்குச் செல்வது தவிர்க்க முடியாதது. அவ்வாறான ஒருகட்டம் விரும்பத்தகாத பல விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதை மறுக்க முடியாது. அந் நிலைமைக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய ஒரு கடப்பாட்டையும் இந்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் அரசியல் சக்திகள் ஏற்கத்தான் வேண்டியிருக்கு;

ஆகவே,

சமாதானத்துக்கான மதகுருமாரின் தூதும், அரசியல் சட்ட வரைவுக்கான முன்னெடுப்பும் அர்த்தமற்றவையென ஒரேயடியாக நிராகரிக்க முனைவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அவற்றை அர்த்தம் பெற வைக்க வேண்டுமென்று வலியுறுத்தும் வகையில் இங்குள்ள இடர்ப்பாடுகளைச் சுட்டிக்காட்டுவதே நோக்கம்.

## -ஸ்பெஷல் ரிப்போர்ட்-

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

தமிழ் இயக்கங்கள் பல முளைவிட்டாலும் அவை அனைத்தும் நாணற் புற் புதர்களாக மட்டுமே மண்டியிட்டுக் கிடக்க, புலிகள் இயக்கம் மட்டும் ஓர் ஆல விருட்சம்போல் அசுர பலம்பெற்று வளர்ந்தது ஏன் என்பது பலருக்கு வியப்பாக இருக்கலாம்.

பலர் வெவ்வேறு வியாக்கியானங்களை முன்வைத்திருக்கலாம்.

இவ் வியாக்கியானங்கள் ஒவ்வொன்றும் ஒரு வகையில் உண்மையாகக்கூட இருக்கலாம்.

ஆனால் இவ் வெற்றிக்குரிய சில அடிப்படை விடயங்களைப் பலரும் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்.

ஏனெனில்,

இதுவொரு பரிசோதனை முயற்சியல்ல.

பரிசோதனையால் நிருபணமாகியிருக்கும் உண்மை.

உண்மை சிலவேளை கசக்கலாம்.

உண்மை சிலவேளை வெறுக்கப்படலாம்.

உண்மை சிலவேளை தவறானதாகவும் இருக்கலாம்.

ஆனால் உண்மையென்பது விரும்பியோ விரும்பாமலோ நிலைநாட்டப் பட்டுவிடுகிறது.

இங்கு, நிலைநாட்டப்பட்டதால் உண்மையாகிவிட்டவையே இவ்வடிப்படைகள்.

ஆரம்பத்தில் விடுதலை இயக்கங்கள் யாவும் கிட்டத்தட்ட ஒரேயளவினதாக காணப்பட்டன. அதில்கூட எண்ணிக்கைப்படி பார்க்கையில் சிறிதாக இருந்தது புலிகள் தான்.

சக்திகளின் உதவியால் பெறப்பட்டவை,

அல்லது முதலாளித்துவவாதிகளால் வளர்த்து விடப்பட்டவை என்பர்.

இன்னும் சிலர்,

இதுவே உண்மையல்ல,

இவையெல்லாம் தற்காலிகமானவை,

வரலாறு பதில் சொல்லும்,

காலம் மாறும்,

எழுச்சிக்குப்பின், எப்போதும் வீழ்ச்சியிருக்கும்,

என்றெல்லாம்

இன்னும்இல்லாத எதிர்கால மொன்றால்

இன்றைய இயலாமைக்குப் பதில் தேடிக்கொள்வர்.

ஆனால்,

எத்தனை காரணங்கள் சொன்னாலும்,

அவையத்தனையும்,

இன்றைய புலிகளின் இமாலய வளர்ச்சியை

ஏதோவொரு வகையில்

ஒப்புக்கொண்டே சொல்லப்படுகின்றன.

அடிப்படையில்

இவர்களின் இந்தப் பாரிய வளர்ச்சியை,

அதன் மூலம்சமாகத் திகழ்ந்த விடயங்களை,

விரும்பியோ விரும்பாமலோ ஆராய்ந்து பார்க்கவேண்டும்

என்ற பக்குவம்

இவர்களுக்கு இன்னும் ஏற்படவில்லை.

அவர்களின் செயற்பாடுகள் பலவற்றை

வரலாற்றுத் தவறுகள் எனச் சிலர் விமர்சித்தபோதும்,

அந்த மோதலிலும் தனது பிரமிக்கத்தக்க ஆற்றலை வெளிக்காட்டி இந்தியாவின் கணிப்பைத் தவறெனக் காட்டியது.

தென் கிழக்காசிய அரசியல் சமூகத்திலும் உலக அரசியல் அரங்கிலும்

இந்தியாவின் செல்வாக்கை நன்கறிந்திருந்தும் தன்மேல் திணிக்கப்பட்ட மேலாதிக்கத்துக்குத் தண்டனையாக

இந்தியப் பிரதமராயிருந்த ராஜீவ் காந்தியை இந்திய மண்ணிலேயே கொல்லத் துணிந்தது.

ஆனாலும் புலிகளின் அரசியல் அன்றோடு முடிந்ததென ஆர்ப்பரித்த அரசியல் விமர்சகர்களை ஏளனமாய்ப் பார்த்துவிட்டு,

அது இன்றுவரை வீறுநடை போடுவது மட்டுமல்லாமல்,

எந்த இந்தியாவில் எதிர்ப்புக் கிளம்புமென்று

இந்த அரசியல் அறிஞர்கள் அஞ்சினரோ

அதே இந்திய அரசியல்வாதிகளைத்

தமக்கே வாக்காலத்து வாங்கவும் வகை செய்தது.

முன்னொரு காலத்தில் தமிழ்நாட்டு அரசியலில் எம்.ஜி. ஆரை மட்டுமே ஆணித்தரமாய் ஆதரித்து,

கருணாநிதியைப் புறங்கையால் விலக்கினர் புலிகள்.

இலங்கைத் தமிழர் இன்னல் களையவென்று

கருணாநிதி கையளிக்க முன்வந்த பணத்தைக்கூட

பெற முடியாதென புறந்தள்ளி ஒதுக்கினர்.

எம்.ஜி. ஆர். இறந்த பின்னர்

கருணாநிதியின் கைகளில்

இதைக்கண்டு,

கொள்கையை அடகுவைத்து விட்டதாக

கொக்கரித்தவர்கள் பலர்.

அவர்களின் குரல்வளை கட்டிப்போய், விக்கித்து நிற்க,

இந்தியப் படைகள் விலகிய கையோடு

குலுக்கிய கைகளை உதறித்தள்ளிவிட்டு

அடுத்த யுத்தத்தைத் தொடுத்தனர் புலிகள்.

அந்த யுத்தத்தில் வீழ்ந்த பெருந்தலை

பிரேமதாஸாவேதான்!

இப்படியான ஒரு எல்லைக் கடந்த அரசியல் தந்திரத்தை

யுத்தத்தை தந்திரத்தோடு பின்னி விளையாடிவிட்டு

அப்பின்னலிலிருந்து தான் விலகிக் கொண்டு

எதிரியை வீழ்த்தும் நுட்பமும் லாவகமும்

அவர்களிடமிருந்தது.

அன்று, எம் நாட்டுப் பிரச்சனையில் அன்னியர் வேண்டாமென்ற அதே புலிகள்,

இன்று மூன்றாம்தரப்பு மத்தியஸ்தம் அவசியமென்று

அன்னியரைக் கோருவது எப்படியென இன்றும் சிலர் விசனிக்கின்றனர்.

விசனம் எதையும் விளைவிக்கப் போவதில்லை

விவேகம்தான் முக்கியம்.

பாதை என்பது பல நெளிவு சுழிவு நிறைந்தது.

நிலமும் வரலாம் நீரும் வரலாம்.

பனிப்படுக்கையும் பாதாளக் கிடங்குகளும் குறுக்கிடலாம்.

பயணிக்கும் வாகனத்தை மாற்றுவதில் தப்பில்லை. பயணத்தின் இலக்கில் தெளிவாயிருத்தலே அத்தியாவசியம் என்ற

அடிப்படை விளக்கத்தைப் புரிந்து கொண்டாலே புலிகளின் நகர்வுகளை அவர்கள் விளங்குவர்.

சுற்றி அறிஞர்கள், நிபுணர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களெனப்

பலரும் வலம் வந்து கொண்டிருப்பதன் அர்த்தமென்ன?

புலிகள், நினைந்தோ நினையாமலோ செய்து செல்கின்ற செயல்களையெல்லாம்

ஏதோ ஒரு வியாக்கியானம் கொடுத்து நியாயப்படுத்தி, அரசியல் கருத்து விளக்கமளிக்க ஏன் இத்தனைபேர் முன்னிற்கிறார்கள்?

உண்மையில், இங்கு அரசியல் என்பது

போராட்டத்திலிருந்து உதிரியாக நிகழும்

ஒரு செஸ் விளையாட்டல்ல.

போராட்டத்தை விளைவித்ததும்,

போராட்டத்தினால் விளைவிக்கப்படுவதும்

போராட்டத்துக்கேயானதுமாக

போராட்டத்துடன் இரண்டறக் கலந்துள்ளது இங்கு அரசியல்.

போராட்டத்துக்கான அரசியலும்அரசியலுக்கான போராட்டமும்

பின்னிப்பிணைந்துள்ள நிலையில் அரசியலை மட்டும் உருவியெடுத்து,

சில விற்பன்னர்களின் சொற்சாகசத்தால்

யாவற்றையும் மாற்றியமைத்துவிட முடியுமெனப்

பிரமை காட்டுவது பித்தலாட்டம்.

புலிகளின் போராட்டத்தில் அரசியல் இருக்கிறது.

இன்றுகூட

இலங்கை அரசியல் தலையாய தலைவர்கள் யாவும்,

அரசியல் தீர்வொன்றை வழங்குவது

தவிர்க்க முடியாததென்பதை உணரவும், கூறவும்,

அன்று ஏனைய சக விடுதலை இயக்கங்களில் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் உறுப்பினர்கள் இருக்க,

தமிழ்ப் பிரதேசங்கள் யாவும் அவற்றின் கிளைகள் இருக்க,

சில இயக்கங்களுக்கு கொழும்பு, மலையகம் போன்ற எல்லை கடந்த பிரதேசங்களிலும் உறுப்பினர்களும் தொடர்புகளும் இருக்க,

புலிகளில் இருந்தவர்கள் சுமார் 25 பேர் வரைதான்.

இருந்தாலும்

இன்று,

அந்தப் பரந்துபட்ட இயக்கங்கள் யாவும் கடுகுபோலக் குறுகிப் போக,

அவற்றில் எஞ்சியிருக்கும் உறுப்பினர்களும் நாளாந்தம் விலகிப் போக,

புதிய ஒரு உறுப்பினர் இணைவதென்பதே அரிதிலும்அரிதாகிப் போயிருக்க,

விடுதலைப் புலிகள் மட்டும்

எப்படி?

இத்தனை பாரிய இயக்கமாக விஸ்தரித்தனர்?

எப்படி, இத்தனை வல்லமை பெற்றவர்களாக உயர்ந்தனர்?

எப்படி வற்றாத ஊற்றுப்போல் எண்ணிறந்த உறுப்பினர்களால் நிரம்பி வழிகிறார்கள்?

எப்படி உலகெங்கும் கிளைபரப்பி வியாபித்து நிற்கிறார்கள்?

எப்படிப் பாரிய நிதிவளம், ஆயுத வளம் யாவற்றையும் திரட்டிக் கொண்டுள்ளார்கள்?

எப்படி இத்தனை பெரியதோர் இயக்கத்தை குலையாமல், பிசகின்றி வழிநடத்திச் செல்கிறார்கள்?

அத்தோடு,

அதற்கு ஆதரவாக

எத்தனையோ புத்திமான்களையும், நிபுணர்களையும் பிரபல மனிதர்களையும், அமைப்புக்களையும் எப்படிச் செயற்பட வைக்கிறார்கள்?

இதற்கு மேலாக,

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும், ஏன் தென்னிந்தியாவிலும்கூட

எப்படி மக்களின் கணிசமான ஒரு தொகையினரை

தமது செயற்பாட்டின் பால் நம்பிக்கை வைக்கச் செய்துள்ளார்கள்?

இந்தக் கேள்விகளை நாம் கேட்டுப் பார்க்கும்போது அதற்கான தயார் நிலையில் விடைகளை மாற்று இயக்கங்கள் வைத்திருப்பதையும் அறியாமலில்லை.

அவர்கள் சொல்வார்கள், இவையெல்லாம்

பலவந்தமாகப் பெற்றுக்கொள்ளப் பட்டவையென்று.

அநியாயமாகச் சுவீகரிக்கப்பட்டவையென்று.

ஆயுத பலத்தால் அபகரிக்கப்பட்டவையென்று.

இல்லையேல்,

இவையெல்லாம் பிற்போக்குவாதிகளின் செல்வாக்கால் கிடைத்தவை. அல்லது தீய

அந்த வரலாற்றையே அவர்கள் வெற்றி கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் விவேகமற்றவையெனச் சிலரால் வியாக்கியானம் கொடுக்கப்படுகின்றபோதும்

அந்த அரசியலையே தீர்மானிப்பவர்களாக-



அரசியலுக்கு ஏற்பத் தம்மை மாற்றிக் கொள்பவர்களாக

அல்லாமல் அரசியலையே தமக்கேற்ப மாற்றியமைப்பவர்களாக உள்ளார்கள்.

இத்தகைய நிலைமையில் இன்றிருக்கும் இவ்விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிப் பாதை இலகுவானதாக இருக்கவில்லை.

இந்த வெற்றிக்கான பாதையின் படிக்கற்கள் யாவும்

முன்னனுபவத்தால் செதுக்கப்பட்டவையல்ல.

எனினும்

உலகின் எந்தவொரு விடுதலையியக்கமும் இத்தனை விரைவில்

இத்தனை பெருவளர்ச்சி கண்டதில்லை.

இதன் பாதையில் விழுந்த எத்தனையோ இடர்களை

அது இட்டு மிதித்து நடந்து வந்துள்ளது.

பாரிய பின்னடைவுகளிலும் இழப்புக்களிலுமிருந்தும்

மீண்டு வந்திருக்கிறது.

அதே வேளை

எதிர்பாராத முடிவுகளை அது எடுத்திருக்கிறது. ஆச்சரியப்படத்தக்க திருப்பங்களை அது நிகழ்த்தியிருக்கிறது.

எனினும்

தனது பயணத்தில் தளராதிருக்கிறது.

பாதையினையும் அதுவே வகுத்துக் கொள்கிறது.

அது எடுத்திருந்த சில முடிவுகள் மலைக்க வைத்தன.

உலகின் மூன்றாவது பெரும் இராணுவமெனக் கூறப்பட்ட

தென்னாசியாவின் வல்லரசாகக் கணிக்கப்பட்ட இந்திய இராணுவத்துடனேயே மோதத் துணிந்தது.

புலிகள் கசக்கிப் பிழியப்படுவர் என்றே

பலரும் கற்பனை கட்டினர்.

ஆனால்

அதே கருணாநிதி

தன்னை எட்டியுதைத்த புலிகளுக்கே ஆதரவு தெரிவித்து,

இந்திய இராணுவத்தையே எதிர்த்து குரலெழுப்பினார்.

அத்தோடு

புலிகளின் பக்கம் நின்று

மாகாணசபை அரசைக் கலைக்கும்படியும் வற்புறுத்தியிருந்தார்.

இன்றும்கூட

ராஜீக் காந்தி கொலைவழக்குக் குற்றவாளிகளுக்கு கருணை காட்டச் சிபாரிசு செய்கிறார்.

இப்படி, தான் எதிர்த்தவர்களே தன்னை ஆதரிக்க வைத்தவர்கள் புலிகள்.

இதுநாள் வரை,

எதிரி என்றுரைத்துக் கடுஞ்சமர் புரிந்த

இலங்கை அரசாங்கத்துடனேயே

ஒன்றாய்க் கைகுலுக்கி ஒட்டியுறவாடிய

புலிகளின் முடிவைக் கண்டு உலகே அதிசயித்தது.

இலங்கைப் பிரச்சனை உள்நாட்டுப் பிரச்சனை, அடிபட்டோ, பேசியோ நாம் எமக்குள்ளே தீர்த்துக் கொள்வோம்,

வெளியாருக்கு இங்கே வேலை வேண்டாமென

பிரேமதாஸாவுடன் சேர்ந்து குரல் கொடுத்து

இந்தியப் படையை வெளியேற்றினர் புலிகள்.

அத்தோடு மட்டுமன்றி,

வெளியேற்றுவதற்கான வெகுமதியாக வெடிமருந்தும் ஆயுதமும் பெருமளவில் பெற்றனர்.

புலிகளின் ஆதரவாளர்களுக்கே

புலிகளின் நகர்வுகள் புரிவதில்லை.

அதைப் புரியாமல், அதற்கு முன்னால்

தாமே தாவிக் குதித்து சேர்க்கஸ் காட்ட முனையும்

சில பிரபல்ய விரும்பிகள்

அடிக்கடி இவ்வாறு அடிபட்டும் போவதுண்டு.

புலிகள் பிரேமதாஸாவுடன் கைகுலுக்கினால்

அவர்கள் ஒரேயடியாகப் பிரேமதாஸா புராணம் பாடுவர்.

புலிகள் கருணாநிதியோடு கைகுலுக்கிக் கொண்டால் அவர்கள் கருணாநிதியே சரணம் என்று காவடியாடுவர்.

பின்னால் நிகழும் நிகழ்வுகள் இவர்கள்

முன்னால் சொன்ன வார்த்தைகளைப் பொய்யாக்கி

இவர்களின் முகத்திலேயே கரியைப் பூசிவிடுவதுண்டு.

இப்படி முந்தி விழுகின்ற முந்திரியக் கொட்டைபோன்ற மோட்டுத்தனத்துக்கு நல்ல உதாரணம்

அண்மைக் காலத்தில்

குமார் பொன்னம்பலத்தின் தேர்தல் துடிதுடிப்பு.

புலிகள் ஆதரிப்பார்களெனக் கற்பனைக் கட்டி

பொதுவேட்பாளராக குதிக்க முனைந்தார். புலிகளின் எண்ணம் வேறெனக் கண்டபின்

முன்வைத்த காலை முடக்கி வைத்துக் கொண்டார்.

**சத்தியன்**

புலிகள் வெறும் இராணுவ வல்லுனர்களேயன்றி

அரசியல் சிந்தனையாளர்கள் அல்ல என்று இன்னும் ஒருசிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் இரா. சம்பந்தன்கூட,

“வீரம் இருக்கும் இடத்தில் விவேகமும் வேண்டு”மென விமர்சித்திருந்தார்.

விடுதலைப் போராட்டத்தில் வேறு எதையும் செய்ய முடியாவிட்டாலும்

விவேகத்தின் பங்கு தம்மிடம்தான் இருப்பதாகத்

தம்பட்டம் அடிப்பதிலேயே இவர்கள் தம்மை நியாயப்படுத்த விளைகிறார்கள்.

ஆனாலும்,

சூரியனைச் சுற்றிக் கிரகங்கள் வலம்வருவதுபோல்

இந்த ‘இராணுவ அமைப்பைச்’

தாமே அவ்வாறு ஒரு தீர்வை வழங்க வல்லவரென

ஏட்டிக்குப் போட்டியாகத் தம்பட்டமடிக்கவும்

நிலைமை மாறியிருக்கிறதென்றால்,

சிங்கள மக்கள், தமிழர்களுக்கான

உரிமைகளை வழங்கிப் பிரச்சனையைத் தீர்க்கவேண்டுமென

ஆதங்கப்படுகிறார்களென்றால்,

அந்த அரசியல் மாற்றத்தின் மூலயந்திரமாகப்

புலிகளின் போராட்டம் அமைந்திருப்பதென்பது

உள்ளுறைந்த உண்மை.

இதை மிக அநாகரிகமான மார்க்கமாகப் பலர் வர்ணிக்கலாம்.

ஜனநாயக வழிமுறைகளின் அடிப்படை நியாயங்களை எடுத்தியம்பி,

வன்முறை, வன்முறையைத்தான் உருவாக்கி

வன்முறையால் முறியடிக்கப்படுமென்று

வன்முறை மீது வசைமாரி பொழியலாம்.

அந்நேரத்தில் அரச வன்முறைக்கு சுதந்திரமளித்தபடிதான்

ஜனநாயகத்தைத் தழைக்கவைக்கும்படி

தாங்கள் பிரார்த்தனை செய்கிறார்களென்பதை மறந்திருக்கலாம்.

எவ்வாறாயினும்,

வன்முறையால்தான் இந்த அரசியல்

இந்தளவு தூரத்துக்காவது தள்ளிவரப்பட்டுள்ள தென்பதையும்,

அதன் பெறுபேறுகளின் தளத்தில் நின்றே

இவர்களும் அரசியல் செய்ய முனைகிறார்களென்பதையும்

மறுதலிக்க முடியாது.

அதற்காக,

வன்முறையை நியாயப்படுத்த இங்கு விளையவில்லை.

வன்முறைக்கு வழிகோலிய அரசியல் யதார்த்தங்கள் மாறாதவரை

வன்முறை விளையத்தான்

செய்யும் என்ற உண்மையையே நியாயப்படுத்த வேண்டியுள்ளது.

சக்தி இருக்கும்வரை நுளம்புகள் விளையும்.

அன்று, சின்னஞ் சிறிதாக இருந்த ஒரு அமைப்பானது

இன்று, இத்தனை பெரிதாகவும் வலிதாகவும்

மாறியதற்கான யதார்த்தங்களை

ஆராயாமல் விளைவை மட்டும்

விசனித்துப் பயனென்ன?

இன்னும் சற்றே ஆராய்வோம் இதை...

(அடுத்த வாரம்...)

## அலசுவது -இராஜதந்திரி

# 'மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலை'யும் காட்டும் இராஜதந்திரம்' பயன்தராது

## 'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்' என்றிருக்கலாகாது.

இலங்கையில் கொழும்பு மாநகரில் மோசமான குண்டு வெடிப்பில் மயிரிழையில் உயர்தப்பிய ஜனாதிபதி சந்திரிக்கா இரண்டாவது தடவையாகவும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

தாமதங்களுக்கும், தமாஷாக்களுக்கும் இடம் தராது மிக அமைதியாகவே தனது பதவிப் பிரமாணத்தை முடித்துக் கொண்ட பின்னர், கண்ணில் ஏற்பட்ட காயத்துக்குச் சிகிச்சை பெற ஜனாதிபதி சந்திரிக்கா லண்டன் சென்றிருந்தார்.

லண்டனில் அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சையை விட, செய்தி நிறுவனமான பிபிஸிக்கு ஜனாதிபதி சந்திரிக்கா வழங்கிய பேட்டியே அனைவரது கவனத்தையும் வெகுவாக ஈர்த்துள்ளது.

இரண்டாவது தடவையாகவும் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி சந்திரிக்கா தமது புதிய அரசியல் நிலைப்பாடு எப்படி இருக்குமென்பதை பிபிஸி மூலமாக இலங்கையர்களுக்கு மட்டுமல்ல. சர்வதேச சமூகத்துக்கும் அறியத்தந்துள்ளார்.

ஜனாதிபதியின் பிபிஸி பேட்டியில் சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, போன்ற பண்புகள் அவரிடம் வெளிப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

தமது ஒரு கண்ணை பார்வையிழக்கச் செய்யுமளவுக்கு குண்டுத் தாக்குதல் மோசமாக இருந்த போதிலும், சமாதான நடவடிக்கைகளிலும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் குறித்தும் தாம் நம்பிக்கை தளரவில்லை என்று ஜனாதிபதி சந்திரிக்கா கூறியிருந்தார்.

இது அவரது சகிப்புத் தன்மையையே வெளிப்படுத்தியிருந்தது. ஏனெனில் 1983 ம் ஆண்டு தமிழ் மக்களைப் பாதிப்படையச் செய்த இனக்கலவரம் ஏற்பட்டபோது ஜே. ஆர். ஜயவர்த்தனவே இலங்கையின் ஜனாதிபதியாக இருந்தார்.

ஜே. ஆர். தம்மிடம் அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருந்தபோதிலும், இனக் கலவரத்தைத் தடுத்து நிறுத்த முன்வரவில்லை. அத்துடன் அப்பாவித் தமிழர்கள் அநாதரவாக அகதிகளாகியிருந்தவேளை "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்று 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது' போலவும் அவர் பேசியிருந்தார்.

1983ம் ஆண்டில் தமிழருக்கெதிராக வெடித்த இனக்கலவரம், அன்றிலிருந்து, நாடுதழுவிய உள்நாட்டு யுத்தமாகவே இன்று உருமாறியுள்ளது. இந்த யுத்தத்தின் அசுரத்தனமான வளர்ச்சியே பல்லாயிரம் உயிர்களை இதுவரை பலியெடுத்துள்ளதுடன், ஜனாதிபதி சந்திரிக்காவின் உயிரைக் குடிக்கவும் முயன்றிருந்தது.

இருந்தபோதிலும் ஜனாதிபதி சந்திரிக்கா நிதானமிழக்காது இனவாதக் கருத்துக்களுக்கு இடந்தராது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தாம் திடசங்கற்பம் கொண்டுள்ளதாகவும் பிபிஸி பேட்டியின்போது கூறியிருந்தார்.

இக்கூற்று, அவரது சிறந்த தலைமைத்துவப் பண்பை வெளிப்படுத்தியதோடு, ஒரு புதிய யுகத்தின் ஜனாதிபதியாக விளங்கவே அவரும் வேட்கை கொண்டுள்ளார் என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தது.

ஜனாதிபதி சந்திரிக்காவின் கடந்த ஐந்து வருடகால அரசியல் நடவடிக்கைகளை இரு வேறு கோணங்களில் இருந்து ஆராயமுடியும்.

அவரது சர்வதேசத் தொடர்புகளை ஒரு புறமும் மறுபுறமாகவும் அவரது உள்நாட்டு அரசியலை இரு பகுதிகளாக நோக்க முடிகின்றது.

சர்வதேச அரசியல் கோதாவில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் முதற்கொண்டு அனைத்து முக்கிய அமைப்புகளின் அரங்குகளிலும் ஜனாதிபதி சந்திரிக்கா தோன்றியிருந்தார்.

முக்கியமான உலகத் தலைவர்கள், இராஜதந்திர முக்கியஸ்தர்களைச் சந்திக்கும் வாய்ப்புக்களையும் கடந்த பதவிக் காலத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா வெகுவாகப் பெற்றிருந்தார்.

அப்போதெல்லாம் இனப் பிரச்சனைத் தீர்வில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகவும், அரசியல் அணுகுமுறைகள் மூலமாகவே தொடரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியும் எனவும் ஜனாதிபதி சந்திரிக்கா கூறிவந்தார்.

இதேவேளை அவரைச் சந்தித்த உலகத் தலைவர்கள் மற்றும் சர்வதேச முக்கியஸ்தர்கள் கூட, இலங்கையின் இனப்பிரச்சனை அரசியல் ரீதியாகவே தீர்க்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியிருந்தனர்.

அத்துடன் முக்கிய சர்வதேச பிரமுகர்கள் பலர் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தம்மால் மத்தியஸ்த உதவிகளை வழங்க முடியுமெனவும் தெரிவித்திருந்தனர்.

பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத், தென்னாபிரிக்க தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா ஆகியோர் இலங்கையின் இனப் பிரச்சனைத் தீர்வுக்கு தம்மால் உதவ முடியுமெனக் கூறியவர்களில் முக்கியமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இலங்கையின் இனப் பிரச்சினை உரிய மத்தியஸ்த நடவடிக்கைகளுடன் சுமுகமாகத் தீர்க்கப்படக்கூடியதென்றே சர்வதேச சமூகம் பெரிதும் நம்புகின்றது. கூடவே இலங்கையின் இனப் பிரச்சினை தீர்க்கப்படும் பட்சத்தில் யுத்த வடுக்களை நீக்கி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவவும் உலக நாடுகள் பல ஆயத்தமாகவே இருக்கின்றன.

இருந்தபோதிலும் சந்திரிக்கா அம்மையாரது முதலாவது பதவிக்காலத்தை உள்ளடக்கிய கடந்த ஐந்தாண்டு காலத்தில் இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அறிகுறி எதுவுமே தென்பட்டிருக்கவில்லை.

இராணுவ நடவடிக்கைகளே சூடு பிடித்திருந்ததுடன், இலங்கையின் இராணுவ வரலாற்றில் இதுவரை காலமும் ஏற்பட்டிராதவாறு பெரும் உயிர்ச் சேதங்களும் கடந்த ஐந்தாண்டில் ஏற்பட்டிருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருடகால ஆட்சியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணாத நாட்டு மக்கள், பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு, ஆக்கபூர்வமாக அரசியல் அணுகு முறைகளை முன்னெடுக்குமென்றே எதிர்பார்த்தனர்.

ஆனால் வடக்கு-கிழக்குப் பிரச்சனை அழிவு பூர்வமானதாகவே கடந்த ஐந்தாண்டு கால பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் இருந்து வந்தது.

சர்வதேச சமூகத்தின் மத்தியில் தோன்றும்போது இலங்கைப் பிரச்சனைக்கு அரசியல் அணுகுமுறைகளே அனுகூலமாக இருக்குமென்று ஜனாதிபதி சந்திரிக்காவும் அவரது முக்கிய அமைச்சர்களும் கூறிவந்தனர்.

ஆனால் இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் அணுகுமுறைகளை உரிய வகையில் இனங்காணத் தவறியவர்களாகவே பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள் விளங்கினர்.

உள்நாட்டில் இனப்பிரச்சினை குறித்து அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள், மற்றும் கையாண்ட நடவடிக்கைகள் என்பவை பெரும்பாலும் இராணுவ அணுகுமுறைகள் சார்ந்தவையாகவே அமைந்திருந்தன.

இந்நிலையில் சர்வதேச சமுகத்துக்கு அரசியல் அணுகுமுறைகளின் அத்தியாவசியத்தைப் பற்றிக் குறிப்பிட்ட அதே சமயம், உள்நாட்டில் இராணுவ நடவடிக்கைகளையே ஆட்சியாளர்கள் விரிவுபடுத்தியிருந்தனர்.

இத்தகைய போக்கு 'மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும்' காண்பிக்கும் விலாங்கு மீனின் குணத்தை ஒத்ததாகவே இருந்தது.

முதலாவது ஐந்தாண்டுகால ஆட்சியைப் பூர்த்தி செய்த நிலையில் இரண்டாவது பதவிக் காலத்தை வகிக்கும் சந்தர்ப்பத்தையும் ஜனாதிபதி சந்திரிக்கா தற்சமயம் பெற்றுள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் சந்திரிக்கா வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் 1994ம் ஆண்டுத் தேர்தலில் நாட்டு மக்கள் அவர்மீது வெளியிட்ட நம்பிக்கையைவிட, இத் தடவை குறைவாகவே தமது விசுவாசத்தை வெளிப்படுத்தி விட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.



1994ம் ஆண்டு தேர்தலில் 62 சதவீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவான சந்திரிக்கா, இத்தடவை 51 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது.

இனப் பிரச்சனையைத் தீர்க்கத் தவறியதால் அவர்மீது ஏற்பட்ட நம்பிக்கையீனம், மற்றும் தொடர்ந்து செல்லும் யுத்தம் காரணமாக மோசமடைந்து செல்லும் நாட்டின் பொருளாதாரம் ஆகியவையே இத்தடவை அவரது வெற்றியில் கிடைத்த வீதாசாரத்தில் வீழ்ச்சியைக் காண்பித்திருந்தது.

இருந்த போதிலும் ஜனாதிபதி சந்திரிக்காவினால் நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றே மக்கள் தொடர்ந்து நம்புவதையே அவரது இத்தடவை தேர்தல் வெற்றி புலப்படுத்துகின்றது.

நாட்டு மக்கள் இரண்டாவது தடவையாகவும் தனது ஆட்சியை வேண்டி நிற்பதையும், அதற்கு ஏற்றாற்போல தாம் நடந்து கொள்ள வேண்டுமென ஜனாதிபதி சந்திரிக்காவும் விரும்புவதையே அவரது லண்டன் பிபிஸி பேட்டி வெளிப்படுத்தியிருந்தது.

இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் சந்திரிக்கா வழங்கிய முதலாவது முக்கிய பேட்டியாகவும் அந்த பிபிஸி பேட்டி விளங்கியிருந்தது.

அப்பேட்டியின் மூலம் சர்வதேச சமூகமும், இலங்கையர்களும், புலம் பெயர்ந்து வாழும் இலங்கை மக்களும் ஜனாதிபதி கொண்டுள்ள நிலைப்பாடுகளை தெளிவுற அறிந்து கொள்ள முடிந்தது.

காயத்துக்குள்ளானதால் மூடப்பட்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிக்காவின் வலப்புறக் கண்ணையும், அதில் ஏற்பட்டுள்ள வீக்கத்தையும்கூட பிபிஸி நேயர்களால் காண முடிந்திருந்தது.

ஜனாதிபதியின் கண்ணில் ஏற்பட்ட காயம் என்று அனுதாபம் ஏற்படுவதைவிட, நாட்டின் கொடிய யுத்தம் எவ்வளவு தூரம் மூர்க்கமடைந்துள்ளது என உணரச் செய்வதாகவே அக்கண் வீக்கம் காணப்பட்டிருந்தது.

தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தச் சூழல், இனப்பிரச்சினை என்பவற்றால் ஜனாதிபதி மட்டுமல்ல இலங்கையின் ஒவ்வொரு பிரஜையுமே நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிப்புக்களை எதிர் நோக்கியவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் தனது ஒரு கண்ணில் ஏற்பட்ட காயத்துடன் பிபிஸி பேட்டியை வழங்கிய ஜனாதிபதி சந்திரிக்கா மனந்திறந்து இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக ஏராளமானவற்றைக் கூறியிருந்தார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட அரசியல் அவதானிகள் சிலர், "கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்" என்ற கதையாக புதிய அணுகுமுறைகள் இருக்கலாகாது எனவும் தெரிவித்திருந்தனர்.

ஜனாதிபதி சந்திரிக்காவுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருப்போரும், அவரை நன்கறிந்தவர்களும், எவ்விதத்திலும் அவரிடம் இனவாதக் கண்ணோட்டம் இல்லை எனவும், இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவே அவர் விரும்புகிறார் எனவும் பேசுவதைக் கேட்க முடியும்.

கூடவே, ஜனாதிபதி பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புகின்ற போதிலும் அவரைச் சூழ்ந்துள்ளோரும், பேரினவாதிகளுமே முட்டுக் கட்டைகளைப் போடுகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டே வருகின்றது.

ஒரு பரந்துபட்ட அரசியலில் இத்தகைய பேச்சுக்கள் யாவும் வேடிக்கையானதாகவே இருக்கின்றன.

ஜனாதிபதி என்பவர் நாட்டு மக்களின் ஆணையைப் பெற்றவராகவும், நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியவராகவுமே இருக்கின்றார்.

இந்நிலையில் அவர் ஏனையோரின் பகடைக் காயாகவும், 'கயிற்று பொம்மை' யாகவும் இருக்கின்றார் என்னும்போது, எந்தவொரு விடயத்திலும் ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எட்டப்பட முடியாமலேயே இருக்கும்.

இரண்டாவது தடவையாகவும் ஆட்சிப் பீடத்தில் ஏறியுள்ள ஜனாதிபதி சந்திரிக்கா விடை பெற்றுச் சென்றுள்ள பழைய நூற்றாண்டை முற்றிலுமாக நிராகரித்துப் புதுயுகமொன்றைப் படைத்து விடமுடியாது.

ஏனெனில் விடை பெற்றுச் சென்ற ஆண்டுகளில் இலங்கையின் கடந்த கால அரசியலில் விடப்பட்ட தவறுகளையும், அதனால் தோன்றிய விளைவுகளையும் ஜனாதிபதி சந்திரிக்கா ஒரு படிப்பினையாகக் கொள்ள வேண்டியவராகின்றார்.

இலங்கையின் போர் அனர்த்தங்களால் சூழப்பட்டுள்ள வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் மட்டுமல்ல. தென்னிலங்கை மக்கள்கூட யுத்தத்தினால் வெகுவாகவே பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தினந்தோறும் இரத்தமும், கண்ணீருமே பெருகிய வண்ணமிருப்பதை அவதானிக்கமுடிகின்றது. வயிற்றில் நெருப்பைக் கட்டியவர்கள் போன்று எவ்வேளையிலும் பீதியுடனும், நிச்சயமற்ற தன்மையுடனுமே மக்கள் வாழ வேண்டியுள்ளது.

அரசியல் பிரச்சினைகள் மட்டுமல்ல. அடிப்படை மனித உரிமை மீறல்கள், காட்டு மிராண்டித் தனங்கள், என்பவைகூட நாட்டின் தலை விரித்தாடத் தொடங்கியிருப்பதையே காணமுடிகின்றது.

வடக்கே இடம்பெற்ற 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் கைதடியைச் சேர்ந்த கிருஷாந்தி குமாரசாமி என்ற இளம் மாணவி, அவரது தாயார் ஆகியோர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் தவிர யாழ்ப்பாணக் குடாநாட்டில் 600க்குமதிகமானோர் காணாமல் போனதுடன் அவர்கள் குறித்து எதுவுமே தெரியாதென தற்சமயம் கைவிரிக்கப்பட்டுள்ளது.

இவையாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாணம் புங்குடுதீவுப் பகுதியில் சாரதாம்பாள் என்ற வீட்டிலிருந்த பிராமணப் பெண்ணொருவர் ஆயுத பாணிகளால் வெளியே இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவின் பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

எனவே தமிழ் மக்கள் வெறுமனே அரசியல் பிரச்சனைகளால் மட்டும் பாதிக்கப்படவில்லை. காட்டு மிராண்டித் தனங்களுக்கும் இரையாகி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் புத்தாயிரம் ஆண்டில் இலங்கையின் முதலாவது ஆட்சியாளரான ஜனாதிபதி சந்திரிக்கா முன்னிலையில் நிறையவே பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டியதாகவுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசியே இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமெனவும், பேச்சுவார்த்தைகளுக்குத் தாம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிக்கா பிபிஸி பேட்டியில் கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள்கூட பேச்சுவார்த்தைகளுக்குத் தாம் தயாராக இருப்பதாகவே இறுதியாக இடம்பெற்ற அவர்களது மாவீரர் வாரத்தின்போது தெரிவித்திருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை நடத்த தாம் தயாராக உள்ளதாகவே கூறியிருந்தார்.

எனவே ஜனாதிபதி சந்திரிக்காவும் புலிகளுடன் பேசுவதற்கு விருப்பந் தெரிவித்துள்ள நிலையில், இருதரப்பினருமே பேச்சுக்களுக்கான சூழ்நிலையை உருவாக்குவது பற்றிச் சிந்திக்க வேண்டியதாகின்றது.

அரசியல் தீர்வு முயற்சிகள் ஆரம்பிக்கப்படும்போது பேரினவாத விஷமக் கும்பல்கள் எப்போதுமே விழிப்புடனிருந்து அம்முயற்சிகளைக் குழப்புவது வழக்கமாகவே இருந்து வருகின்றது.

ஆனால் அண்மைக் காலங்களில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற கோஷங்கள் கூடப் பலமடைந்து வருவதுடன், பல்வேறு அமைப்புகளும் சமாதானத்துக்காகக் குரல் கொடுத்தும் வருகின்றன.

போதும் இந்தப் போர் என்பதே நாட்டு மக்களின் மனக்கிடக்கையாக இருக்கின்றது.

இங்கிலாந்தில் பிபிஸி பேட்டியில் அரசியல் தீர்வு பற்றி ஜனாதிபதி சந்திரிக்கா எவற்றைக் கூறினாரோ, அவற்றை நோக்கியே காலடி எடுத்து வைக்கவேண்டியவராகின்றார்.

இல்லையேல் 'பழைய குருடி கதவைத்திறவடி' என்ற கதையாகவே அனைத்தும் இருக்குமென்றே கருதமுடியும்.

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 91

### கடந்தவாரம்

கடத்தப்பட்ட பணயக் கைதிகளை விடுவிக்க நிபந்தனைகள் என்னவகையில் அமைய வேண்டும் என்பதைப் பற்றிக் கலந்துரையாட பாலஸ்தீன விடுதலை முன்னணியினரை அமீன் சந்திப்பதற்காக தனது அலுவலகத்தில் காத்திருந்தான். அப்போது ஃபுளோரா என்ற அழகிய யுவதி வந்து சேர்கிறாள்.
சிறிது நேரத்தில் கார்லோஸ் உட்பட வேறு சில பா.வி.இயக்கக் கடத்தல்காரரும் வந்து சேர்கின்றனர். ஜூலை முதலாம் திகதிக்கு முன்னர், பா.வி.இயக்கக் கைதிகள் 54 பேரும் விடுதலை செய்யப்படவேண்டும் என்று நிபந்தனை அறிவிக்கப்பட்டது. கால அவகாசம் போதாது என்பதனால் ஜூலை 4ம் திகதிவரை நீடிக்கப்படுகிறது.
வந்தவர்கள் திரும்பிச் சென்ற பின்னர், ஃபுளோராவிடம் அமீன் வருகிறான். ஆனால் அவள் முன்பிருந்த இடத்தில் இருக்கவில்லை. உகண்டா வரலாற்றைச் சித்தரிக்கும் காட்சிப் பொருட்கள் அடங்கிய மண்டபத்துள் அவள் நின்றிருந்தாள். அவளை நோக்கி அமீன் செல்கிறான். இனி...

# இடி அமீன்

உகண்டா நாட்டுப் பெண்கள் பெரும்பாலும் கறுப்பு நிறமுடையவர்களே. அவர்களுடைய உடலமைப்பும் சற்றுப் பருத்ததாகவே இருக்கும்.

அமீனின் அந்தப் புரத்திலிருந்த அழகிகளில் உகண்டா அழகிகள்தான் பெரும்பான்மையினராக இருந்தனர். பிரிட்டிஷ் பெண்கள், அமெரிக்க வெள்ளைக்காரிகள், ஃபிரான்ஸ் நாட்டுப் பெண்கள் ஆகியோரும் இருந்தனர். ஆசிய நாடுகளைச் சேர்ந்த ஆறு அழகிகளும் இருந்தனர். ஆசிய-உகண்டாக் கலப்பினப் பெண்கள் நால்வரும் அந்த அந்தப்புரத்தில் இருந்தனர்.

அமீனின் இரசனை பெரும்பாலும் குறிப்பிட்ட ஆசிய-உகண்டா கலப்பினப் பெண்களின் மீதே அதிகம் இருந்தது. அடிக்கடி அவர்களையே அமீன் தன் மாளிகைக்கு வரவழைப்பான். இதனால் இந்த நால்வர்மீதும் ஏனைய அந்தப்புரத்து அழகிகள் பொறாமை கொண்டிருந்தனர். இதனால் அந்த நான்கு அழகிகளும் சில வெள்ளை நிற அழகிகளும் ஏனையோருடன் ஒட்டாமலே ஒதுங்கியிருப்பார்கள்.

அமீனின் இரசனை முழுவதையும் ஒரே தடவையில் தன்பால் ஈர்த்தெடுக்கும் சக்தி வாய்ந்தவளாக ஃபுளோரா, அவன் முன் நின்றிருந்தாள்.

தன்னை நெருங்கி வருபவர் உகண்டா நாட்டதிபர் இடி அமீன்தான் என்பதை அப்போது தெரிந்து கொண்ட அவள், சற்றுத் தயங்கினாள். அமீனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே அப்போது அவளால் முடியாதிருந்தது. ஆடாமல் அசையாமல் அம்மண்டபத்தில் சிலைபோல் நின்றிருந்தாள்.

அவளருகில் சென்ற அமீன், அவளுடைய கவனத்தை தன்பால் ஈர்க்கும் நோக்குடன் ஒரு தடவை செருமினான். அப்போது ஒருவகை மருண்ட பார்வையுடன் அவள் அமீனைப் பார்த்தாள்.

அம்மண்டப வாயிலில் நின்றிருந்த தனது அந்தரங்கக் காப்பாளனைச் சைகை மூலம் அழைத்து, ஃபுளோராவை தனது அலுவலகத்துக்குக் கூட்டிக் கொண்டு வருமாறு பணித்தான். ஒரு புன்சிரிப்பை உதிர்த்துவிட்டு தனது பூட்ஸ் கால்களின் ஒலியைச் சற்று அதிகமாக்கியபடி அமீன் தன் அலுவலகப் பகுதியை நோக்கிச் சென்றான்.

கூடுமானவரை நிதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று தனக்குத் தானே கட்டளையிட்டிருந்தான். இருக்கையில் சென்றமர்ந்தவனாக, அங்கிருந்த ஒரு கோப்பினை எடுத்துத் திறந்து கண்ணோட்டமிட்டான்.

ஃபுளோராவை அழைத்துக் கொண்டு வந்த காவலன் கதவைத் திறந்து ஃபுளோராவை உள்ளே அனுப்பிவிட்டுக் கதவை மூடினான். அவள் உள்ளே வந்ததும் கையிலிருந்த கோப்பை ஒருபுறம் வைத்துவிட்டு நிமிர்ந்தான். நின்ற வண்ணமிருந்த அவளை அவன் முன்புறமிருந்த இருக்கையில் அமரும்படி சைகை செய்தான்.

**"பெயர் என்ன..? ஓ.. ஃபுளோரா.. குட். உனக்கு உகண்டா மொழி பேசத் தெரியுமா?"** இது முதல் வினா.

"ஓரளவு தெரியும், ஆங்கிலம், ஃபிரெஞ்ச், அரபு மொழிகளும் தெரியும்!"

அமீன் உகண்டன் மொழியிலேயே உரையாடலைத் தொடர்ந்தான். சில நிமிடங்களில் தனது இருக்கையிலிருந்து எழுந்து ஃபுளோரா பக்கம் வந்து அவளுக்கு முன்புறம் மேசையின் மேல் தனது வலது காலை வைத்து அமர்ந்து அதே காலை வீசிக் கொண்டு தனது பேச்சைத் தொடர்ந்தான்.

**"என்ன படித்திருக்கிறாய்?"**

"பி.கொம்"

**"ஒஹோ... எங்கே படித்தாய்?"**

"ஜோஹன் ஸ்பேர்க் பல்கலைக் கழகத்தில்"

அமீன் கேட்ட கேள்விகளுக்குத் தயக்கமெதுவுமின்றிப் பதிலளித்தாள் ஃபுளோரா. அவளுடைய கையிலிருந்த கோப்பையை மெல்ல உருவி எடுத்தான். அப்போது அமீனுடைய கண்கள் மாறி மாறி அவளுடைய உடலில் இரு இடங்களைத் தொட்டுத் தடாவின.

ஃபுளோராவின் மேல் சட்டை அவளுடைய உடலோடு ஒட்டியிருந்த பழுப்பு நிறதிலானது. மேல் இரு அழகுகள் ஏறத்தாழ அரை வாசி வரை அவனுடைய கண்களுக்கு விருந்தளித்தன. அவனுடைய பார்வை சற்றுக் கீழிறங்கி, அவளுடைய முழங்காலுக்கு மேல் சில அங்குலங்களை அளவிட்டன. அவள் அமர்ந்திருந்த இருக்கை அக்குறிப்பிட்ட பகுதியைச் சற்றுப் பொலிவாகக் காட்டியது.

இத்தனைக்கும் அமீனுடைய உணர்ச்சிகள் எல்லாம் சூடாகத் தொடங்கியிருந்தன. இருப்பினும் அமீன் இம்முறை நிதானமிழக்காமல் பொறுமையாக செயற்பட எண்ணினான் போலும். ஏற்கனவே, தான் இரு இளம் பெண்களிடம் அவசரப்பட்டமையினால் அவர்கள் அவனிடம் அகப்படாமல் பறந்தோடி விட்டனர். ஃபுளோராவும் இப்பொழுது இளமையின் விளிம்பில் காலடி வைத்துள்ளவள். தனது அலுவலகத்திலேயே பணியாற்றவிருக்கிறாள். தட்டிக் கனியவைத்து கசப்பான இரசனையை உருசி பார்க்க அமீன் விரும்பவில்லை. சற்று விட்டுப் பிடித்து, 'தானாகக் கனிய வைக்க வேண்டும்!' என்று கருதினான்.

ஃபுளோராவிடமிருந்து பெற்ற கோப்பின் உள்ளே இருந்த அவளுடைய விண்ணப்பத் தாளில் ஏதோ கிறுக்கினான். கோப்பை மூடி அவளுடைய மடியில் மெதுவாக வைத்துவிட்டு, தொலைபேசியில் தனது பிரதான அலுவலகப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டான்.

**"இங்கு அனுப்பி வைத்தீரே... மிஸ். ஃபுளோரா அவளுக்கு நியமனக் கடிதத்தை இப்போதே கொடுத்து விடும். மாதச் சம்பளம் 'ஏ கிரே'டில் போட்டு விடும். இதோ அவளை உன்னிடம் அனுப்புகிறேன்."**

இவ்வாறு தொலைபேசி மூலம் தனது பணிக்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டதைக் கவனித்துக் கொண்டிருந்த ஃபுளோரா, பூரித்துப் போனாள். அவளுடைய முகம் மலர்வதை அமீன் பார்த்து வெகுவாக இரசித்தான். பெண்களை வசப்படுத்துவதில் கில்லாடியான அமீனுக்கு 'இப்பழம் தானாகவே கனிந்து என் கையில் வந்து விழும்' என்ற நம்பிக்கை பிறந்துவிட்டது.



மேசைமீது போடப்பட்டிருந்த தனது காலை மிகவும் பக்குவமாகக் கீழே நகர்த்தினான். **"சரி நீ இப்பொழுது அலுவலகத்துக்குப் போகலாம்."** என்று கூறி தனது வலது கையை அவளிடம் நீட்டினான். அவளும் தயக்கமில்லாமல் அமீனின் கையைப் பற்றினாள். அலுவலக வாயிலில் நின்ற காவலன் கதவைத் திறந்து ஃபுளோராவை வெளியேற விட்டான். அவள் நடந்து செல்லும் போது அவளுடைய பின்புற அழகைப் பார்த்துச் சப்புக் கொட்டிவிட்டு மாடிப்படிகளில் ஏறினான்.

முன்வாயிற் புறப்படிக்கட்டுகளில் ஃபுளோரா இறங்கிச் செல்ல, அவளுக்காக அலுவலக வண்டி காத்து நின்றது. வண்டியினுள் அவளுடைய எண்ணங்கள் அமீனின் பெருந்தன்மையை மெச்சி மகிழ்வூட்டின. தென் ஆபிரிக்காவிலிருக்கும்போது அமீனைப் பற்றிப் பலவிதமான தகவல்கள் அந்நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. ஆனால் அத்தகைய தகவல்களுடன் தான் நேரில் கண்ட அமீனை ஒப்பிட்டுப் பார்த்த ஃபுளோரா, அப்பத்திரிகைகள் அமீன் பற்றிய உண்மைக்குப் புறம்பான செய்திகளையே வெளியிட்டுள்ளன என்று கருதினாள்.

ஜனாதிபதி அலுவலகத்துக்கு வண்டியில் வந்திறங்கிய ஃபுளோராவைப் பார்த்த கண்கள் அத்தனையும் வெவ்வேறு கருத்துக்களைத் தொகுத்தன. அலுவலகப் பொறுப்பதிகாரியின் அறைக்கே நேராக அவள் சென்றாள். அவரும் தன்னை சற்றுக் கூர்மையாக அளவெடுப்பதை அவள் உணரவில்லை. அமீன் தன்னிடமிருந்து வாங்கிப் பார்த்துவிட்டுக் குறிப்பெழுதிக் கொடுத்திருந்த கோப்பினை அந்த அதிகாரியிடம் நீட்டினாள். அதனைத் திறந்து பார்த்த அந்த அதிகாரியின் முகத்தில் ஆச்சரியக் குறிகள் பல ஒரே தடவையில் தோன்றின.

எந்தக் கோப்பிலும் அமீன் எத்தகைய குறிப்பும் எழுதியிருந்ததை அந்த அதிகாரி அதுவரை கண்டதில்லை. அவருக்கு முன்னாலிருந்த இருக்கையில் அமரும்படி ஃபுளோராவுக்குச் சைகை காட்டிய அவர், "ஃபுளோரா! இக்குறிப்பினை அதிபரே எழுதினாரா?" என்று கேட்டார்.

"ஆம்" என்று அவள் தலையாட்டினாள். "உங்களுக்கு தொலைபேசியிலும் அதிபரே பேசினாரே?" என்று மறு வினாத் தொடுத்தாள் ஃபுளோரா. தனது நெற்றியைச் சொறிந்த வண்ணம், திங்கட்கிழமை பணியில் வந்து இணையும்படி கூறி அவளை அனுப்பி வைத்தார் அந்த அதிகாரி.

உலகின் பல நாடுகளிலும் சிறை வைக்கப்பட்டிருந்த பாலஸ்தீனத் தீவிரவாதிகள் 54 பேரையும் விடுதலை செய்யாவிட்டால் பணயக் கைதிகள் அனைவரும் உகண்டா மண்ணில் இரத்தம் சிந்தி மடிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டாயிற்று.

ஜூலை முதலாம் திகதிக்கிடையில் பல நாடுகளிலுமுள்ள தீவிரவாதிகளை விடுவிப்பதென்பது நடைமுறை சாத்தியமற்றது என்பதனால், காலக் கெடுவைப் பின் போட உத்தேசிக்கப்பட்டது. இதற்கிடையில் ஆபிரிக்க நாடுகளின் உச்சி மாநாடு மொரீஷியஸ் நாட்டில் நடைபெறவிருந்தது. இந்நாடுகளின் உச்சி மாநாடு கடந்த வருடம் உகண்டாவில் நடைபெற்றது. ஆகவே இப்பொழுது அவ்வமைப்பின் தலைவர் பதவியில் அமீன் இருந்தான்.

மொரீஷியஸ் நாட்டில் நடைபெறும் மாநாட்டில் இடி அமீன் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் மொரீஷியஸ் நாட்டின் பிரதமரிடம் தனது தலைமைப் பதவியை சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு அமீனுக்கு இருந்தது. ஆகவே அங்கு சென்று திரும்பும்வரை, கடத்தல்காரர்கள் பற்றிய முடிவினை ஒத்திப் போட்டாக வேண்டியிருந்தது. இதற்குத் தோதாக, ஜூலை 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.00 மணிவரை காலக் கெடுவை நீடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

*(இடி தொடரும்)*

## தருவது அழகன்

---

# ரஜினி எடுக்கப்போகும் புதிய முடிவு?

இன்று தமிழ்த் திரையுலகின் முதன்மையான பிரபல மனிதராகவும், அசைக்க முடியாத மக்கள் சக்தியைக் கொண்டவராகவும் திகழ்பவர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்.

'அபூர்வ ராகங்கள்' படம் மூலம் அறிமுகமான ரஜினி திரையுலகிற்கு வந்து 25 ஆண்டுகளாகி விட்டன. இந்த வெள்ளிவிழா நாயகன், தனது நெருங்கிய நண்பர்களிடம் அடிக்கடி மனம் விட்டுப் பேசிய வார்த்தைகள் இவை:

"தமிழ் மக்கள் எனக்கு நான் முற்றிலும் எதிர்பாராத ஓர் உயர்ந்த இடத்தைக் கொடுத்துள்ளனர். இவர்களுக்கு நான் பதிலுக்கு ஏதாவது பிரதியுபகாரம் செய்ய வேண்டும்!" என்பதுதான்.

என்ன செய்யப்போகிறார்? எப்படிச் செய்யப் போகிறார்! அரசியல் மூலமாகவா? அல்லது வேறு விதமான சேவைகள் மூலமாகவா?



என்ன முடிவு எடுக்கப் போகிறார் ரஜினி? இந்தப் புதிய நூற்றாண்டில் ரஜினி எடுக்கப்போகும் புதிய முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் பல இலட்சக்கணக்கான இரசிகர்கள்.

# அழகியின் அடுத்த திட்டம்



இந்திய முன்னாள் உலக அழகிகளான சுஷ்மிதா சென்னும் ஐஸ்வர்யா ராயும் சினிமாவில் குதித்துவிட்டார்கள்.

தற்போதைய உலக அழகியான யுக்தா முகி சின்னத்திரையில் குதிக்கப் போகிறார். உலக அழகிப் பட்டத்திற்கு பின் ஃபோட்டோவுக்கு போஸ் கொடுப்பதில் பிஸியாக இருக்கிறார் யுக்தா முகி.

இவை எல்லாம் முடிந்ததும், தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவுள்ளார் யுக்தா முகி. ஏன் இந்த அழகி சினிமாவில் நடிக்கவில்லை என்று பலர் நினைக்கலாம்.

இன்னமும் சினிமா வாயப்பு அம்மணிக்குக் கிட்டவில்லை. அப்படிக் கிட்டினாலும் இவரது உயரத்தை எட்டும் ஆண்மகன்தான் ஜோடியாக நடிக்க வேண்டும். யுக்தா முகியின் உயரம் 5 அடி 11 அங்குலம்.

# சின்னத்திரையில் காதல்

திரையுலகில் காதலித்துத் திருமணம் செய்த நட்சத்திரத் தம்பதிகளாகப் பலர் உள்ளனர். ஜெமினி-சாவித்திரி முதல் விரைவில் திருமணம் செய்யவிருக்கும் அஜித்-ஷாலினி வரை பலரை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

பெரியதிரையைப் போலவே சின்னத்திரையிலும் காதல் முளைவிடத் தொடங்கியுள்ளது. இது திருமணத்திலும் முடியவுள்ளது.

சின்னத்திரையில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் நாடகங்களில் நடித்து வருபவருமான ஸ்வர்ணமால்யா, பிரபல தொலைக்காட்சி நடிகரான ஷ்யாம் கணேஷைக் காதலிக்கிறார்.

'உயிரே உயிரே' தொலைக்காட்சித் தொடரில் இணைந்து நடித்த போதே ஷ்யாம் கணேஷிற்கும் ஸ்வர்ணமால்யாவுக்கும் காதல் மலர்ந்ததாம்.

'உயிரே உயிரே' தவிர 'நெஞ்சே நெஞ்சே' உட்பட பல தொடர்களில் இவர்கள் இருவரும் இணைந்து நடித்துள்ளனர்.



இதேபோல் 'மர்மதேசம்' தொடரின் இரண்டாம் பாகமான 'விடாது கருப்பு' மூலம் சேத்தனுக்கும், தேவதர்ஷினிக்கும் நேசம் பிறந்துள்ளதாம்.

# வயாக்ரீனுக்குத் தடை



அமெரிக்க கண்டுபிடிப்பு' மாத்திரையான வயாக்ரா, விற்பனைக்கு வந்த சிறிது காலத்திலேயே உலகம் முழுவதும் பிரபலமடைந்து விட்டது.

இந்நிலையில் இங்கிலாந்து நாட்டில் ஸ்டொக்ஹோம் என்ற இடத்தில் வயாக்ரா என்ற பெயரைப் போன்று வயாக்ரீன் என்ற ஒருவகைப் புதிய பானத்தை தயாரித்து விற்பனைக்கு விட்டனர்.

இதை எதிர்த்து அமெரிக்க வயாக்ரா தயாரிப்பு நிறுவனம் வழக்குத் தொடர்ந்தது. இதைத் தொடர்ந்து வயாக்ரீன் பானம் தடை செய்யப்பட்டுள்ளது.

மிகக் குறுகிய காலத்திற்குள் வயாக்ரா மாத்திரை பெரும்புகழடைந்து விட்டது. இன்று மக்களுக்கு வயாக்ரா நன்கு அறிமுகமாகியுள்ளதால், வயாக்ரீன் பானத்தை விற்பனை செய்வது வாடிக்கையாளர்களிடையே குழப்பத்தையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தும், எனவே வயாக்ரீன் பானத்தைத் தடை செய்துள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# தண்டனை வழங்க யோசனை

அமெரிக்காவில் டெட்ராய்ட் என்ற இடத்தில் 15 வயதுடைய பெண்ணும் 14 வயதுடைய பெண்ணுமாகச் சேர்ந்து மனநிலை சரியில்லாத 12 வயதுடைய ஒரு பெண்ணை உயர் வகுப்பு மாணவர்களிடம் விபச்சாரத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அதுமட்டுமன்றி குறிப்பிட்ட இரு பெண்களும் சட்டத்திற்குப் புறம்பான சில செயல்களிலும் ஈடுபட்டனர்.

இரு பெண்களையும் பொலிஸ் கைது செய்து, விசாரணை செய்தது.

இவர்கள் இருவருக்கும் வயது வந்த குற்றவாளிகளுக்குக் கொடுக்கும் தண்டனையைக் கொடுப்பதா? சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்த்து விடுவதா? அல்லது அவர்களுக்கு 21 வயதாகும்வரை பொறுத்திருந்து பெரிய தண்டனை கொடுப்பதா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறது நீதிமன்றம்.

# வழக்குத் தொடர முடிவு!



இங்கிலாந்தின் மறைந்த இளவரசி டயானாவுடன் அவரது காதலர் டோடி பயட்டும் இரண்டு வருடங்களுக்கு முன் ஃபிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் கார் விபத்தில் பலியானார்கள்.

இந்த விபத்தின் பின்னணியில் இங்கிலாந்து அரச குடும்பத்தின் சதி இருப்பதாகவும், இங்கிலாந்து ராணியின் கணவர் ஃபிலிப்தான் சதி செய்து டயானாவையும், டோடியையும் கொன்று விட்டதாகவும் டோடியின் தந்தையான முகமட் அல்பயட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

அதுமட்டுமன்றி, இந்தக் குற்றச்சாட்டுக்காக, தன்மீது ஃபிலிப் வழக்குத் தொடரட்டும் பார்க்கலாம் என்றும் சவால் விட்டிருக்கிறார் அல்பயட்.


இந்நிலையில் ராணி தனது அரண்மனை வழக்கறிஞர்களுடன் விவாதித்து அல்பயட்மீது வழக்குத் தொடர முடிவு செய்துள்ளதாக அரண்மனை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அஞ்சலி

அண்மையில் காலமான குரோஷிய ஜனாதிபதி பிரான்ஜோ துட்மன் நினைவாக ஏற்றிவைக்கப்பட்டுள்ள மெழுகுவர்த்திகள்தான் இவை.

குரோஷிய நாட்டின் ஜாக்ரப் நகரத்தில் உள்ள தூய மார்க்கோ சதுக்கத்தில், மறைந்த ஜனாதிபதிக்காக அந்நாட்டு மக்கள் ஆயிரக்கணக்கான மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து அஞ்சலி செலுத்தினர்.





## இண்டர் நெட் இல்லம்

வடக்கு இலண்டனில் உள்ள வாட்ஃபோர்ட் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது இந்த இண்டர்நெட் இல்லம்.

இண்டர் நெட் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த இல்லம் கட்டப்பட்டுள்ளதால், இருந்த இடத்தில் இருந்துகொண்டே இந்த வீட்டை இயக்கலாம்.

தனியான கம்பியூட்டர் கட்டுப்பாட்டின் உதவியுடன் அடுப்புப் பற்ற வைப்பது, மின் சுவிட்சைப் போடுவது போன்ற வேலைகளைச் செய்யலாம். இந்த இண்டர்நெட் இல்லத்தை அமைக்க ஆகியுள்ள செலவு அதிகமில்லை 5 இலட்சம் ஸ்ரேர்லிங் பவுண்ஸ். நம்மூர் மதிப்புப்படி சுமார் 5 கோடியே 75 இலட்சம் ரூபாய்.

## தகவல் பெட்டி



## தண்ணீருக்கடியில் சாதனை

தண்ணீருக்குள் மணிக்கணக்கில் நீந்துவது, மூச்சை அடக்கிக்கொண்டு உள்ளே கிடப்பது என்று பலவிதமான சாதனைகளைச் செய்து அலுத்துவிட்டதால் புதுமையாகச் சில சாதனைகளைச் செய்கிறார்கள்.

தண்ணீருக்கடியில் உதைபந்தாட்டப்போட்டி, தண்ணீருக்கடியில் தபால்பெட்டி இப்படி தண்ணீருக்கடியில் பல புதுமைகளைச் செய்து வருவதை முரசு வாசகர்கள் நன்கறிவீர்கள்.

இது வேறொரு சாதனை. இத்தாலி நாட்டைச் சேர்ந்த விக்டோரியா இன்னொசென்ட் தனது 'மவுண்ட் பைக்' மூலம் தண்ணீருக்கடியில் 30 மீட்டர் ஆழத்தில் சைக்கிள் ஓட்டி சாதனை படைத்துள்ளார்.

53 வயதான இன்னொசென்டின் சாதனையை உலக சாதனைகளைப் பதிவு செய்யும் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெற பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.




## பெரிய வாழ்த்து அட்டை

சிலி நாட்டில் சர்வாதிகாரி ஜெனரல் அகஸ்டோ பினோசெடின் மகன் அகஸ்டோ ஹிரியார்ட், இலண்டனில் கைது செய்யப்பட்டார். 1998ம் ஆண்டு ஒக்டோபர் 16ம் திகதியில் இருந்து சிறைவாசம் அனுபவித்து வருகிறார்.

சிறையில் இருக்கும் ஹிரியார்ட்டுக்கு வாழ்த்து அட்டை ஒன்று அனுப்பப்பட்டது. அவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட இந்த வாழ்த்து அட்டை 'கின்னஸ்' உலக சாதனைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

காரணம் உலகத்திலேயே மிகப் பெரிய வாழ்த்து அட்டை இதுதானாம். இதனுடைய உயரம் 9.3 அடி. அகலம் 5.3 அடி. வாழ்த்து அட்டையின் பக்கத்தில் நிற்பவர் தான் ஹிரியார்ட்.

## சிங்கமும் கிறிஸ்துமஸ் மரமும்



கிறிஸ்துமஸ் தினத்தன்று கிறிஸ்தவர்களின் வீடுகளில் கிறிஸ்துமஸ் மரம் அலங்கரித்து வைக்கப்படும். கிறிஸ்துமஸ் நெருங்கும்போது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கிறிஸ்துமஸ் மரங்களுடன் காணப்படுவார்கள்.

இங்கே சிங்கம் ஒன்று கிறிஸ்துமஸ் மரத்துடன் காணப்படுகிறதே? இது எப்படி என்கிறீர்களா?

கிறிஸ்துமஸ் தினத்திற்குச் சில நாட்களுக்கு முன் அமெரிக்காவிலுள்ள சான்பீகோ மிருகக்காட்சி சாலையில் வன விலங்குகள் தினம் கொண்டாடப்பட்டது.

அப்போது ஒரு சிங்கத்திடம் 'கிறிஸ்துமஸ் மரம்' ஒன்று கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரத்தைச் சிங்கம் இழுத்துச் செல்லும் காட்சியே இது.


## கட்டில் கார்

ஒரு கட்டில் போன்ற காரை வடிவமைத்து, அதில் படுத்துக்கொண்டே ஓட்டிச் சென்று இலண்டனில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் 'ஜேனாஸ்' என்ற முதியவர்.

இந்தக் கட்டில் கார் இலண்டன் வீதிகளில் சென்றபோது இதைப் பார்க்காத ஆட்களே கிடையாது.

இப்படி ஓட்டுவது சட்டப்படி குற்றம் என்பதால், ஒரே ஒருநாள் மட்டும் இந்தக் கட்டில் காரை ஓட்டிவிட்டு பின் ஓரங்கட்டி விட்டார் 'ஜேனாஸ்'.




மாதவன்
படம்: அலைபாயுதே

## மகளிர்க்காக....

குடும்பப் படங்களை இயக்கிவரும் வி.சேகரிடம் 'பொறந்தவீடா புகுந்த வீடா', 'வரவு எட்டணா செலவு பத்தணா' உட்பட பல படங்களுக்கு உதவி இயக்குநராகப் பணியாற்றியவர் இந்தியன்.

இவர் முதன் முதலாக 'மகளிர்க்காக...' என்ற படத்தை இயக்கவுள்ளார். தன் குருநாதர் பாணியில் சமூகத்தில் பெண்களின் பிரச்சனைகளை வித்தியாசமான கோணத்தில் சொல்லவுள்ளார்.

இப்படத்தில் குஷ்பு, விந்தியா, அம்பிகா, கோவை சரளா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள். இவர்களுடன் சரண்ராஜ், ரஞ்சித், 'தலைவாசல்' விஜய், வடிவேலு, ஜெய்கணேஷ், வடிவுக்கரசி, குமரிமுத்து, 'வெண்ணிற ஆடை' மூர்த்தி ஆகியோர் நடிக்கிறார்கள்.

அறிவுமதி, கிருஷ்ணா, அண்ணாதாஸன் பாடல்களுக்கு வர்ஷன் என்ற அறிமுக இசையமைப்பாளர் இசையமைக்கிறார்.

இந்தப் படத்தை சித்திரைப் புத்தாண்டில் வெளியிட தீர்மானித்துள்ளார் தயாரிப்பாளர் ஏ.கோவிந்தராஜா.

## திருமணம் ஒத்திவைப்பு

ஜனவரி மாதம் அஜித்-ஷாலினி திருமணம் நடப்பதாக முதலில் கூறப்பட்டது. இப்போதைய நிலவரப்படி பார்த்தால் திருமணம் ஜனவரியில் நடக்காது.

வருகின்ற ஏப்ரல் மாதத்திற்கு திருமணத்தை ஒத்திவைத்திருப்பதாகக் கூறுகிறார் அஜித்.

## பாண்டியராஜனின் 'டபுள்ஸ்'

பிரபுதேவா-மீனா ஜோடியாக நடிக்கும் படம் 'டபுள்ஸ்'. இதற்கு முன் பிரபுதேவா-மீனா 'நாமிருவர் நமக்கிருவர்' என்ற படத்தில் இணைந்து நடித்துள்ளனர்.

நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கும் இப்படத்தை நடிகர் பாண்டியராஜன் இயக்கவுள்ளார். படத்தை இயக்குவதுடன் கதை, திரைக்கதை, வசனத்தையும் இவரே எழுதியுள்ளார்.

ஏனைய நடிக, நடிகைகள் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் இந்த அறிவிப்பு வெளியாகும்.

## காத்திருந்த புதுமுகம்

பாரதிராஜா இயக்குவதாகத் தொடங்கப்பட்ட 'சிறகுகள் முறிவதில்லை' படத்தில் அறிமுகப்படுத்துவதற்காக ரதிமுகி என்ற புதுமுகத்தை தேர்வு செய்து வைத்திருந்தார்.

மும்பையில் இருந்து வந்த இந்த புதுமுகம் படத்தில் நடிப்பதற்காக பலகாலம் காத்திருந்தார். படத்தின் படப்பிடிப்புக்கள் எதுவும் நடைபெறவில்லை.

இத்தனை காலம் காத்திருந்தவர் இப்போது தொலைக்காட்சிகளில் வாய்ப்புக் கேட்டு ஒப்பந்தமாகியுள்ளார்.

## டொப் ஸ்டார்

'அமர்க்களம்' படத்தில் அஜித்குமாருக்கு 'லக்கி ஸ்டார்' என்றும் ஷாலினிக்கு 'லவ் ஸ்டார்' என்றும் பட்டம் கொடுத்த இயக்குநர் சரண், தற்போது இயக்கி வரும் 'பார்த்தேன் ரசித்தேன்' பட நாயகன் பிரசாந்திற்கு 'டொப் ஸ்டார்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளார்.

## தெலுங்கில் சேது

தமிழ்த் திரையுலகில் பரபரப்பாகப் பேசப்படும் 'சேது' படத்தை தெலுங்கு நடிகரான 'ஆனந்த மழை' பவன் கல்யாண் பார்த்து அசந்து விட்டாராம். அப்படியே தெலுங்கில் தயாரித்து தான் நடிக்கவும் ஆசைப்பட்டாராம்.

விரைவில் தெலுங்கில் தயாராகவுள்ள 'சேது'வை தமிழில் இயக்கிய பாலாவே இயக்கப் போகிறார்.


கரிஷ்மா கபூர்

## தமிழில் ஃப்ரண்ட்ஸ்

சரிதா தயாரிப்பில் அவரது கணவர் முகேஷ் கதாநாயகனாக நடித்த மலையாளப் படம் 'ஃப்ரண்ட்ஸ்' இது மலையாளத்தில் பெருவெற்றி பெற்றது. இதை தமிழில் மொழிமாற்றி வெளியிடத் திட்டமிட்டிருந்தார் சரிதா. பின் அத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்.

இப்போது 'ஃப்ரண்ட்ஸ்' தமிழில் தயாராகவுள்ளது. முகேஷ் வேடத்தில் தமிழில் விஜய் நடிக்கவுள்ளார். இப்படத்தை இயக்குவதன் மூலம் தமிழில் அறிமுகமாகிறார் மலையாள இயக்குநர் சித்திக்.

சித்திக் முதலில் ஃபாஸிலிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர். பின்னர் 'ஹிட்லர்' போன்ற பல வெற்றிப் படங்களை இயக்கி மலையாளத்தில் வெற்றி இயக்குநராக வலம் வருகிறார்.

## மும்பை அழகிகளின் காமப் பார்வை

'காமப் பார்வை' என்ற பெயரில் படமொன்று தயாராகி வருகிறது. படத்தின் பெயரைப் போன்றே கிளுகிளுப்பான காட்சிகளுடன் இப்படம் தயாராகிறது.

கதாநாயகியாக லட்சுமிராஜ் மற்றும் மும்பாய் அழகிகளான சத்னம் கோர், ஹேமா பிந்து, ஹேமா சித்து போன்றோர் நடிக்கின்றனர்.

கே.மோகன் என்பவர் இப்படத்தை இயக்குகிறார்.

அண்மையில் இந்தியாவின் பாண்டிச்சேரியில் நடைபெற்ற ஓர் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, கிளுகிளு காட்சிகளுடன் இப்படம் உருவாக்கப்படுகிறது.

பி.ஏழுமலை என்பவர் தயாரிக்கும் இப்படம் இம்மாதம் திரைக்கு வரவுள்ளது.

## கடல் மோகினி

ஆங்கிலத்தில் வெளியான 'த மம்மி' என்ற படத்தை தமிழில் மொழிமாற்றி வெளியிட்டார்கள். நல்ல வசூல். விடுவார்களா தயாரிப்பாளர்கள்?

இன்னொரு ஆங்கிலப்படத்தை 'கடல் மோகினி' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றி வருகிறார்கள்.

கடற்கரையில் அட்டகாசம் செய்த ஒரு மோகினியை அடக்கி ஒடுக்க, அவள் கடலுக்கடியில்போய் தவமிருந்து தீய சக்திகளின் பக்கத்துணையுடன் பழிவாங்கப் புறப்பட்டு வருகிறாள்.

இளம் பெண்ணொருத்தி சில நல்லவர்களின் துணையோடு அதை எதிர்த்துப் போராடுகிறாள். மூன்று தலைமுறைக் கதை அமானுஷ்ய கற்பனைகளுடன் கூடிய இந்த ஆங்கிலப் படம் விரைவில் தமிழ் பேசி ரசிகர்களைப் பிரமிக்க வைக்கப்போகிறது.

## வெறும் பாண்டு

ஜேம்ஸ் பொண்ட் சீரீஸ்களில் நாயகன் அறிமுகமாகும் காட்சியில் எல்லாப் படங்களிலும் பேசும் வசனம் இது.

'மை நேம் இஸ் பொண்ட்- ஜேம்ஸ் பொண்ட்.'

இந்தப் பிரபலமான வசனத்தைப் போல் 'ஜேம்ஸ்பாண்டு' படத்திலும் பயன்படுத்துகிறார் பார்த்திபன். பார்த்திபன்-பிரபுதேவா இணைந்து நடிக்கும் 'ஜேம்ஸ் பாண்டு' படத்தில் பார்த்திபனின் பெயர்தான் பாண்டு.

ஜேம்ஸ்பாண்டு' படத்தில் பார்த்திபன் பேசும் வசனம் இது.

'மை நேம் இஸ் பாண்ட், வெறும் பாண்டு'.

## முகப்பில்

ரஜினி
கௌசல்யா

## கேயாரின் புரட்சி

கேயார் தயாரிப்பில் சரத்குமார் கதாநாயகனாக நடிக்கும் படம் 'புரட்சி'.

'பாடும் வானம்பாடி', 'சின்னப்பூவே மெல்லப்பேசு' போன்ற படங்களை தயாரித்தவர் கேயார். அத்துடன் 'வனஜா கிரிஜா' 'தர்மா' போன்ற படங்களையும் இயக்கியுள்ளார்.

இப்போது இவர் தயாரிக்கும் 'புரட்சி' படத்திற்கு கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார் சூர்யகுமார். இவர் இயக்கும் முதல் படம் இது. சூர்யகுமார் கேயாரிடம் உதவியாளராக இருந்தவர்.

வெள்ளையனை எதிர்த்துப் போராடிய மாவீரனின் புரட்சிக்காவியமாக 'புரட்சி' உருவாகிறது.

இப்படத்தின் நாயகியாக சௌந்தர்யா நடிக்கிறார். இளையராஜா இசையமைக்க பி.கண்ணன் ஒளிப்பதிவு செய்கிறார்.

'டொல்பி' ஒலிப்பதிவு முறையில் மிகப்பிரமாண்டமாக உருவாகிறது இப்படம்.

## நிறுத்தம்

விஜய் ரசிகர்களுக்காக 5 பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. இப்போது விஜய் பெயரில் ஒரேயொரு பத்திரிகை மட்டுமே வெளிவருகிறது. ஏனைய பத்திரிகைகள் நிறுத்தப்பட்டு விட்டன.


விக்னேஷ்-அனுஷா
படம்: என்றும் ஆனந்தம்


பிரசாந்த்
படம்: அப்பு

## கமல் இயக்கத்தில் பிரசாந்த்-ஷாலினி

நிகிலா என்டர்பிரைஸஸ் என்ற புதிய நிறுவனம் தயாரிக்கும் படத்தில் பிரசாந்த்-ஷாலினி முதன் முதலாக ஜோடி சேர்ந்து நடிக்கிறார்கள்.

மலையாளத்தில் பெருவெற்றி பெற்ற 'நிறம்' என்ற படம் தான் தமிழில் உருவாகிறது. தமிழில் இதற்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை.

மலையாள 'நிறத்'திலும் ஷாலினி தான் நாயகியாக நடித்தார்.

'நிறம்' மலையாளப்படத்தை இயக்கிய கமல் தான் இப்படத்தையும் இயக்குகிறார். இதன் மூலம் முதல் முறையாகத் தமிழில் காலடி பதிக்கிறார் கமல். இவர் இ... 23 மலையாளப்படங்களை இயக்... இவற்றில் 20 படங்கள் பெருவெற்றி... ஓடியுள்ளன.

பிரசாந்த்-ஷாலினி ஜோ... மனோரமா, மணிவண்ணன், ... அஞ்சலி தேவன், விஸ்.சி.ஹனீபா, ... தாமு, வையாபுரி ஆகியோர் ந... னர்.

வசனத்தை பேரரசு எழு... என்.ஏ.ராஜ்குமார் இயக்குகிறார்.

இப்படத்தின் படப்பிடிப்புகள் ... கேரள மாநிலத்தில் நடைபெறவு...

திரையுலக மறுபக்கம் 132

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# பிரபல நடிகையின் விவாகரத்து விவகாரம்

சமூகசேவை செய்யும் நட்சத்திர நடிகைகளில் முக்கியமானவர் இந்த நடிகை. மலையாளப் பெண்ணான இவர் ஒரு காலத்தில் முன்னணி நடிகை.

முன்னணி நடிகையாக இருந்தபோது நடிகையை அறிமுகப்படுத்திய 'இமய' இயக்குநருடன் நெருக்கமாக இருந்தார். இயக்குநருடன் நெருக்கமாக இருந்தவர், பிரபல தயாரிப்பாளர் ஒருவருடைய மகனுடன் ஊர் சுற்றினார்.

நடிகையின் நடவடிக்கைகள் எல்லைமீறிப் போவதை உணர்ந்த இவரது தந்தை, இளம் ஒளிப்பதிவாளர் ஒருவருக்கு நடிகையை மணமுடித்துக் கொடுத்தார். கொஞ்சக் காலம் கணவனுக்குக் கட்டுப்பட்டு இருந்த நடிகை, மீண்டும் பழையபடி மாறினார்.

திருமணத்திற்குப் பின் நடித்த முதல் படத்திலேயே படத்தின்நாயகனான 'வாரிசு' நடிகருடன் நெருக்கமானார்.

## வலையில் வீழ்த்தினார்

அதன்பின் கணவர் இயக்குநரானபோது அவருக்கு உதவியாளராகப் பணியாற்றிய வாலிபருடன் பழக்கம் ஏற்பட்டது. பின் அந்த இளம் இயக்குநரைத் தன் வலையில் வீழ்த்தினார்.

'தொட்டால் சிணுங்கி'யான அந்த இளம் இயக்குநருக்குப் பின் ஓர் இளம் கதாநாயகன் நடிகையின் கண்ணில் பட்டார்.

'ஆஹா' என்று தன் கணவருடன் இணைந்து தயாரித்த தொலைக்காட்சித் தொடர்களில் அவருக்கு வாய்ப்புக் கொடுத்தார். அதன் மூலம் அந்த இளம் நடிகரை 24 மணிநேரமும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார்.

இந்த விஷயம் கணவருக்குத் தெரியவர குடும்பத்தில் பெரிய பூகம்பம் வெடித்தது. சிறிது காலத்தின் பின் அடங்கிப்போனது.

இப்போது நடிகையின் குடும்பத்தில் மறுபடி பூகம்பம். காரணம் நடிகையின் புதிய காதல் கதை. நடிகையை அறிமுகப்படுத்திய 'இமய' இயக்குநரின் 'உலக அதிசய' படத்தில் அறிமுகமான இயக்குநரின் மகனுக்கும் நடிகைக்கும் இடையே கசமுசா.

படப்பிடிப்புக்கள் முடிய இருவரும் பள்ளியறை சென்றார்கள்.

## கணவரின் கோபம்

இது நடிகரின் கணவருக்குத் தெரியவந்ததும், நடிகையின் கணவர் கோபத்தின் உச்சிக்கே சென்றார்.

பலமுறை மன்னித்தும் மனைவியின் மோகத்தீ அணையவில்லை என்பதை உணர்ந்த நடிகையின் கணவர் அவரை விவாகரத்து செய்ய முடிவு செய்துள்ளார்.

அரசியலில் இப்போது காலடி வைத்திருக்கும் நடிகை, தன் கணவரின் இந்த முடிவினால் அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கிறார்.


விவாகரத்து நடந்தால் தனது அரசியல் கனவு தகர்ந்து விடுமே என்பதுதான் நடிகை அச்சத்திற்குக் காரணம்.

# அப்படியா சங்கதி?


'பூவே உனக்காக' படம் மூலம் அறிமுகமானவர் அஞ்சு அரவிந்த். தற்போது இவர் 'கண்ணா உன்னை தேடுகிறேன்' 'வானத்தைப்போல', 'ஏழையின் சிரிப்பில்' உட்பட நான்கைந்து படங்களில் நடித்து வருகிறார்.

அத்துடன் சில தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்து வருகிறார். அண்மையில் இவர் கேரள தொழிலதிபர் ஒருவரை மணந்துகொண்ட விஷயத்தை எல்லாரிடமும் மறைத்து வருகிறார்.

எவ்வளவு நாளைக்குத்தான் மறைப்பீங்க அம்மணி?



சத்யராஜ்-ரோஜா
படம்: அழகர் சாமி




சத்யன்-கௌசல்யா
படம்: இளையவன்

# காதோடு சொல்லுகிறோம்

பிரகாசமான வில்லன் நடிகர் படத்தயாரிப்பில் இறங்கி, ஒரே நேரத்தில் மூன்று படங்களை ஆரம்பித்தார். அவர் வைத்த அகலக்கால் இப்போது வினையாகி விட்டது. படத்தயாரிப்புக்கு வெளியில் வாங்கும் கடன் கிடைக்காமல் நடிகரது படங்கள் அந்தரத்தில் நிற்கின்றன.

'காதல் கோட்டை' கட்டிய தயாரிப்பாளரின் அண்மைய கனவு கலைந்து போனதால் அடுத்து ஒரு படத்தைத் தயாரித்து 'வெற்றிக்கொடி' பறக்க விட எண்ணினார். அதில் நடிக்க 'காதல் மன்னன்'னை அணுக, அவர் பிஸியாக இருந்ததால் கை விரித்து விட்டாராம்.

புன்னகைக்கு அரசியான நடிகையின் தங்கைகளில் ஒருவரான நடிகை சின்னச் சின்ன வேடங்களில் நடித்து வருகிறார். தனியாக வாழும் அந்த நடிகை தினம் ஒருவரை வீட்டிற்கு அழைத்து வந்து விருந்து வைத்து வருகிறாராம்.

விநோதமான நடிகை ஒரு நகைக் கடைக்காக ரீவி நிகழ்ச்சி ஒன்றில் தோன்றினார். இப்போது அந்த நகைக்கடைக்காரரின் அன்புக்குப் பாத்திரமாகி விட்டார். சம்பகாலமாக அவரை மகிழ்வித்து அதனால் பெரும் இலாபமடைந்து வருகிறார்.

இனிஷியலையே பெயராக வைத்திருக்கும் இரண்டெழுத்து இயக்குநர் சொந்தமாகத் தயாரித்து இயக்கும் படத்தில் நடிக்க 'கார்' நடிகருக்கு பத்து லகரம் அட்வான்ஸ் கொடுத்தார். அட்வான்ஸ் வாங்கிக் கொண்டு நடித்துக் கொடுக்காமல் இழுத்தடித்து வருகிறாராம் நடிகர்.

## மினி சினி

✦ ஆர்.வி.உதயகுமார் இயக்கத்தில் கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் படம் 'உலகை விலை பேசவா'. இப்படத்தில் கார்த்திக்கிற்கு ஜோடியாக மோனிஷா என் மோனா லிசா' மும்தாஜ நடிக்கிறார்.

✦ கே.பாலச்சந்தர் தயாரிக்க வசந்த் இயக்கத்தில் பிரசாந்த் நடித்து வரும் படம் 'அப்பு'. இப்படத்திற்கு முதலில் 'சூர்யா' என்று பெயரிடப்பட்டு பின்னர் மாற்றப் பட்டுவிட்டது.

✦ அருண்குமார் -மந்த்ரா நடித்த 'ப்ரியம்' படத்தைத் தயாரித்த அசோக் சாம்ராஜ் 'கல்வெட்டு' என்ற படத்தை தயாரிக்கவுள்ளார். இதில் மலையாள முன்னணி நடிகை திவ்யா உண்ணி கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

✦ சாந்துமாமா வைத்து 'கேசவன்' படத்தை இயக்கிவருகிறார் முகஞ்சியம். இதை அடுத்து இவர் சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கத் திட்ட மிட்டிருக்கிறார்.

✦ ரவிகா நடித்த 'இங்கிலீஷ் மீடியம்' என்ற மலையாளப்படம் வெற்றிகரமாக ஓடுவதால் ரவிகாவுக்கு பல மலையாளப்பட வாய்ப்புக்கள் வந்துள்ளன. இனி சங்கீதா என்ற சொந்தப் பெயரில் நடிக்க முடிவெடுத்துள்ளார் ரவிகா.

✦ அஜித்குமாரின் 'அமர்க்களம்' படம் தெலுங்கில் 'அற்புதம்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. 'வானத்தைப்போல' படத்தைத் தயாரிக்கும் 'ஆஸ்கார்' ரவிச்சந்திரன் இப்படத்தை தயாரித்து வருகிறார்.

✦ ஷங்கரின் 'முதல்வன்' படத்தில் ஒரே ஒரு பாடல்காட்சியில் தோன்றி நடனமாடினார் முன்னாள் 'பிரபஞ்ச அழகி' சுஷ்மிதா சென். இப்போது நாகார்ஜுனின் 'ஷங்கர்' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடனமாடுகிறார் முன்னாள் 'உலக அழகி' ஐஸ்வர்யா ராய்.

✦ அரவிந்தசாமி கதாநாயகனாக நடித்த 'என் சுவாசக்காற்றே' படத்தை இயக்கியவர் கே.எஸ்.ரவி. படம் தோல்வியடைந்தாலும் மறுபடி அரவிந்தசாமி- கே.எஸ்.ரவி இணைந்து புதிய படமொன்றை வழங்கவுள்ளார்கள்.

✦ சித்திரைப்புத்தாண்டுக்கு வெளியாகவிருக்கும் விஜயகாந்தின் 'வல்லரசு' படத்தின் நாயகியாக தேவயானி நடித்து வருகிறார். முதலில் இந்த வேடத்தில் சிம்ரான் நடிப்பதாக இருந்தது.

✦ இந்தியில் வெற்றிகரமாக ஓடிய 'ஹம் அப் கே தில் மே ரெஹ்தா ஹெய்ன்' தமிழில் தயாராகவுள்ளது. இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார் விஜய்.

## அடுத்த அதிரடி

விஜயசாந்தியின் அதிரடிப்பட வரிசையில் அடுத்து வரவிருக்கும் படம் 'தலைவி'. தெலுங்கில் 'குண்டா தர்பார்' என்ற பெயரில் வெற்றிகரமாக ஓடிய படம்தான் 'தலைவி' என்ற பெயரில் தமிழில் மொழிமாறுகிறது.

பரமசாதுவாக இருக்கும் பெண், சமூக அநீதிகளைத் தட்டிக்கேட்கத் துவங்கி எப்படி பாயும் வேங்கையாகிறாள் என்பதுதான் 'தலைவி'யின் கதை. இப்படியான கதைகள் என்றால் விஜயசாந்திக்கு அல்வா சாப்பிடுகிற மாதிரி. இதில் சிம்ரானும் நடிக்கிறார்.

ஜெய்ப்பூர் அரண்மனையில் துணை நடிகைகள் பலருடன் சிம்ரான் ஆடும் நடனக்காட்சி ஒன்று பிரமிக்க வைத்துள்ளதாம்.

## இன்னொரு கண்டக்டர்

கண்டக்டராக இருந்து நடிகராகி திரையுலகில் பீடு நடைபோட்டுக் கொண்டிருப்பவர் யார் என்று சொல்லாமலே தெரிந்திருக்கும். அவர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்.

இவரைப் போல் இன்னொரு கண்டக்டரும் தமிழ்த் திரையுலகில் பிரவேசித்துள்ளார். நடிகராக அல்ல இயக்குநராக. கண்டக்டராக இருந்து டைரக்டராகியுள்ளவர் கவி காளிதாஸ்.

இயக்குநர் கே.பாக்யராஜிடம் 'வீட்ல விசேஷங்க', படத்தில் இருந்து 'வேட்டிய மடிச்சுக் கட்டு' படம் வரை உதவி இயக்குநராகப் பணியாற்றியவர் கவி காளிதாஸ்.

இவர் இப்போது சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்க அஜித்-சிம்ரான் ஜோடியாக நடிக்கும் 'உன்னைக் கொடு என்னைத் தருவேன்' என்ற படத்தை இயக்கி வருகிறார்.

## திறமைக்கு மரியாதை

கதை விவாதம் என்ற பெயரில் தான் நைந்து பேர் காட்சிகளை தெரிவு செய்து அதைக் கோர்வையாக்குவார்கள். இப்படி பலரால் உருவாக்கப்படும் கதை-திரைக்கதை படத்தின் இயக்குநருக்குச் சொந்தமாகிவிடும்.

இந்த விஷயத்தில் 'ஊட்டி' படத்தின் இயக்குநர் அனவர் மற்றவர்களில் இருந்து வித்தியாசப்படுகிறார். 'ஊட்டி' படத்தின் எழுத்தோட்டத்தில் திரைக்கதை என்ற வரும் போது, கதை விவாதத்தில் கலந்துகொண்ட 8 பேரின் பெயர்களையும் போட்டுள்ளார்.

திறமைக்கு மரியாதை கொடுக்கும் இயக்குநர்.



மனீஷா கொய்ராலா

# எப்படி மறப்போம் உன்னை!

சத்தம் இல்லாமலே!
சரித்திரம்!
படைத்த
அற்புதராஜனே!
உன்
அகாலமரணம் கேட்டு.
ஆடிப்போனது
என் இதயம்.

உண்மைகளை உதிர்த்த
பலபேரின்
உயிர்கள்
பறிக்கப்பட்டதை
உன் மரணத்தின்பின்
உணரவைத்தவனே!
துடிக்கிறதே
என் இதயம்.

மில்லேனியம்
பிறக்கும் முன்னே
தொள்ளாயிரத்தோடு
தொலைத்து விட்டனரே
கொலைவெறிபிடித்த
பாவிகள் உன்னை.

வாள்முனையை விட
பேனாமுனை
வலிமையென்று
கட்டியம் கூறி
கருத்தெழுதிய
காவிய நாயகனே!
உன்னை
குண்டுகளால் பந்தாடிய
கோழைகள் எங்கே?

அற்புதப்படைப்புக்களை
அகிலமெங்கும்
தந்த
இளஞ்சிட்டே!
முதுமை நெருங்குமுன்னே
முதுகெலும்பில்லாதவர்களால்
உன்னை
இல்லாமலாக்கிய
ஈனர்கள் எங்கே?

அற்புதமானவனே!
ஆயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
அகிலத்தில்
நாம் வாழும்வரை
உன் நினைவுகளை
எப்படி மறப்போம்?

ஹப்புத்தளையூர்
மனோ கோபாலன்

# படிப்பும் நடிப்பும்

வெள்ளைக் காரன் வீடுகளில்
வேலைக் காரன் ஆயிருந்து
அல்லும் பகலும் பாடுபட்டு
அப்பன் அனுப்பும் காசினிலே
ஜொள்ளுப் போட்டு ஜோக்கடித்து
ஜோடி சேர்ந்துக் கேலி செய்து
பல்லுக் கேற்ற பதம் தேடி
'பிஸ்ஸா ஹட்'டில் சாப்பிடுவர்!
☆
வீதி கூட்டும் வேலனையும்
வேலைக் காரச் செல்வியையும்
சாதி கெட்ட ஆட்களென
சுட்டிக் காட்டிக் கேலி செய்வர்.
கூதற் காட்டில் அண்ணனுமே
கூலி வேலை செய்வதனை
பாதிப் பேரும் அறியா ரோ
பாசாங் கின்னும் ஏன் தமிழா?
☆
பிரமச் சாரிச் சாயத்தின்
போலிப் பேச்சைத் தான் கேட்டு
துறவி சொன்னான் வேதத்தை
தாளம் தப்பா தென்கின்றார்!

அரவச் சாரம் உள்ளார்ந்த
ஆலா பரணம் பொன்னென்பர்
உறவைத் தானும் நம்பாதார்
ஊரை ஏய்ப்போர் பின் செல்வர்!
☆
படிப்ப தென்று நேரத்தை
பாதை யோரம் போக்காட்டி
நடிப்ப தொன்றே இந்நாளில்
நல்ல போக்கு என்றாச்சு!
முடிப்ப தெல்லாம் பெற்றோரின்
மூல தனமும் வேர்வையுமாம்
அடிப்ப டையில் தம்வாழ்வை
ஆட்டம் காணச் செய்வாரே!
☆
ஆடம் பரமும் ஆட்காட்டும்
அற்பத் தனமும் காழ்ப்புணர்வும்
கூடப் பிறந்த சொந்த மென்றோ
கொண்டாய் தமிழா இப்புவியில்
வேடக் கயமை வஞ்சங்கள்
வீசும் வலையில் வீழ்ந்தாய் நீ!
தேடத் தடமும் இல்லாத
தீர்ப்பே உனக்கு இறுதியுமாம்.

மாவை வரோதயன்.


# மிலேனியத்தை வரவேற்போம்!

மிலேனியமே!
உன்னை வரவேற்பதில்
நாங்கள் கர்வம்
கொள்கிறோம்!
கற்பனைக் கெட்டா
அதிசயங்களை
விஞ்ஞானப் புதுமைகளாக
எம் காலடிக்கு
கொண்டு வரும் ஆற்றல்
உனக்கே யுண்டு!
*
நாம் நடந்து வந்த பாதையில்
முட்களாய்த் தைத்த
பகைமையினை வேரறுத்து
பாங்கான சமாதானத்தை
பரிசாக எமக்கு
நீ தருவாய்!
அதனால் உன்னை வரவேற்கிறோம்!
*
முடிவிலா இருளிலே
வீழ்ந்துவிட்ட அகதிகளின்
நெஞ்சமதில்
இன்ப ஒளியேற்றும்
பகலவனாய்
நீ மலர்வாய்
என்பதனால்
உன்னை வரவேற்கிறோம்!

ஜாஹிறா இக்பால்-
கிண்ணியா.

# தேன் கிண்ணம்

## நன்றி பெண்ணே நன்றி!



என் மௌனத்தின் அலறல்களை
பதிவு செய்ய என் செவிகளுக்கு
கற்றுத் தந்தவள் நீ..
என் இரவுகளை இருள் ஒளிக்
கீற்றுக்களாய்
என் கண்கள் காண்பதற்கு
கற்றுத் தந்தவள் நீ...!
***
என் மனதை எப்போதும்
சுடுகின்ற குளிர்மையாய்
ஆக்கி வைத்தவளும் நீ...
என் பாதைகள் எங்கும்
முட் பூக்களை
தூவிச் சென்றவளும் நீ..!
***
மொத்தத்தில் எனை மறந்து
சென்று
எனக்கு நரகத்தில் சுவர்க்கத்தைப்
பரிசளித்தவளும் நீ...
நன்றி பெண்ணே...!?
***
எனக்கு வாழ்வில் துன்பத்தில்
இன்பத்தைக் காணக் கற்றுத்
தந்திருக்கின்றாயே?
அதற்காக... நன்றி!


சு. நரசிம்மன்-
திருமலை.

## வஞ்சனை

காதலனே!
நான் மேகம் என்றால்
நீ வானம் என்றாய்!
நான் மலர் என்றால்
அதன் வண்ணம் நீ என்றாய்!
விழிகள் நான் என்றால்
அதன் இமைகள் நீ என்றாய்!
நம் உடல்கள் ஏதோ இரண்டு
உயிராய் என்னுள் உன்னுள்
இருப்பது ஒன்று என்றாய்!
இத்தனையும்-என்
கற்பை கத்தரிக்க தீட்டிய
காமக்கத்திகளோ?!....

எம். சிறி-டோஹா-கட்டார்.

# 25 வது ஆண்டு ★★★ ரஜினியின் வெற்றி விழா



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் திரையுலகில் நுழைந்து 25 வருடங்கள் நிறைவடைவதை ஒட்டி 'ரஜினி-25' என்ற பெயரில் பிரமாண்டமான விழா, மூன்று கட்டங்களாகக் கொண்டாடப்பட்டது.

முதல் கட்டமாக ரஜினியின் பிறந்த நாளான டிசம்பர் 12ம் திகதியில் இருந்து ரஜினி நடித்த 15 திரைப் படங்கள் திரையிட்டுக்காட்டப்பட்டன.

## ரஜினி 25 கண் கா ட் சி



இரண்டாவது கட்டமாக 'ரஜினி-25' சிறப்புக் கண்காட்சி நடத்தப்பட்டது.

மூன்றாவது கட்டமாக 'ரஜினி-25' நட்சத்திரக்கலைவிழா நடத்தப் பட்டது. இவையாவும் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் நடைபெற்றன.

இவற்றில் இரண்டாவது கட்டமாக நடைபெற்ற சிறப்புக்கண் காட்சி ரஜினியை அறிமுகப்படுத்திய கே.பாலச்சந்தரால் திறந்து வைக்கப்பட்டது.

கண்காட்சியில் ரஜினி நடித்த படங்களின் 169 விதமான பெரிய புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன. அத்துடன் படங்களில் ரஜினி பயன்படுத்திய உடைகள், காப்புக்கள், பெல்ட்கள், சப்பாத்துக்கள், கடிகாரங்கள், மூக்குக்கண்ணாடிகள் உட்பட பல பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன.

கண்காட்சியின் முன் அரங்கத்தில் ரஜினி நடித்த சில முக்கிய திரைப்படங்களின் தோற்றங்கள் 'கட்-அவுட்'களாக வைக்கப்பட்டிருந்தன.





இவற்றுடன் பலர் பார்த்து பரவசமடைந்தது திரைப் படங்களில் வரும் ரஜினியின் தோற்றங்கள் சிலைகளாக வைக்கப்பட்டிருந்தமை. 'அண்ணாமலை'யில் சைக்கிளுடன் 'பாட்சா'வில் ஆட்டோவுடன் 'முன்று முகத்'தில் ஜீப்புடன், 'முத்து'வில் குதிரை வண்டியுடன், 'தாய் மீது சத்தி'யத்தில் குதிரையுடன் இப்படி பல்வேறு படங்களில் வரும் ரஜினியின் சிலைகள் கண்களுக்கு விருந்தளித்தன.



அதுமட்டுமன்றி 'உழைப்பாளி' படத்தில் சிவபெருமான் வேடத்தில் ரஜினி அய்யர் ஒருவரின் ஸ்கூட்டரின் பின்னால் அமர்ந்து செல்வார். இந்தக்கண்காட்சியில் சிவன் வேடத்தில் ரஜினியின் சிலை ஸ்கூட்டரில் உட்கார வைக்கப்பட்டு 'உழைப்பாளி' படத்தில் ஸ்கூட்டர் ஓட்டிய அதே அய்யரால் மூன்று நாட்கள் திரைப்பட நகரைச் சுற்றி ஓட்டி வரப்பட்டது.

# இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானா'

09.01.2000 முதல் 15.01.2000 வரை

**மேடம்:**
சில பிரச்சனைகள் குறைவடையும். பண வருமானம் என்பன காணப்படும். புதிய முயற்சிகள் தொடரப்பெறும். திருமண வாய்ப்புக்களும் கல்வி ஊக்கமும் தொடங்கிய வேலைத்திட்டங்களும் பூர்த்தியாகும். அச்சுவினி, கார்த்திகை 1ம் நட்சத்திரருக்கு இலாபஸ்தானமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 23, 25.

**இடபம்:-**
சிறுசிறு சிக்கல்கள் வந்து விலகும். நெடுநாள் எதிர்பார்த்த நண்பர்கள், உறவினர்களின் வருகைக்கிடமுண்டு. பலமாற்ற முயற்சிகள் தொடர்ந்து சென்றபடி அமையும். ரோகிணி நட்சத்திரர் உடலைக் கவனமாகப் பார்க்க வேண்டும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: ஒரேஞ்சு; எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 22, 25.

**மிதுனம்:**
முயற்சிகள் குறைவு பெறாது பயண வெற்றிகள் பலன் தரும். பண வசதிகள் கைக்கு வந்து சேரும். புதிய திட்டங்களை நண்பர்களின் உதவியுடன் முடிக்கும் பலன் உள்ளது. பெண்களுக்கு மகிழ்வான செய்திகள் வந்துசேரும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: சாம்பல் வர்ணம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 19, 24.

**கடகம்:**
வீட்டில் விருந்தினர் வரவுண்டு. தொழில் சுமையும் ஏற்படும். எதிர்பார்த்த பிரச்சனைகளில் திருப்பம் ஏற்படும். இருப்பிட சூழ்நிலை மாற்றம் காணும். குடும்பத்தில் பிள்ளைகளின் பிரச்சனைகள் பணச் செலவு ஏற்படுத்தும். ஆயிலிய நட்சத்திர காரருக்கு அலைச்சல், பணச் செலவுகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: இளநீலம்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள்: 20, 24.

**சிம்மம்:**
பாக்கியஸ்தான பலத்தின் நிலை புதிய ஸ்தானமும் புது வகையான வாழ்வும் தொழில் முயற்சிகளில் வெற்றியும் கிட்டும். உயர் கௌரவ நிலையும் காணப்படும். மக நட்சத்திரர் வசதிகளை யோக பலன்களை கொடுக்கப்பெறும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 21, 23.

**கன்னி:**
மனதில் வெறுப்புச் சூழ்நிலை ஏற்படும். தொழில், உடல் நோய் துன்பமும் எதிர்பார்த்த திட்டங்கள் வெற்றியைத் தருமோ என்ற ஏக்கமும் காணப்படும். அத்த, உத்திர நட்சத்திர பெண்கள் கவனமாக இருக்க வேண்டும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 23, 24.

**துலாம்:**
புதிய செய்திகள் மனதை சந்தோஷப்படுத்தும். பணம்- பொருள் வரவுகள் அதிகமாக இருக்கும். காதலர் தொடர்பும் குடும்ப நிலைப்பற்றியும் புதிய தொடர் முடிவுகளை கொடுக்க இருக்கின்றது.
சுவாதி, விசாக பெண்களுக்கு சந்தோஷமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: இளம்பச்சை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள்: 19, 23.

**விருட்சிகம்:**
கடன் பிரச்சனைகள் குறையும். நண்பர்கள், பிள்ளைகளால் பணவரவு ஏற்படும். கேட்டை நட்சத்திரர் பலவெற்றிகளைப் பெறக்கூடிய பலன் உண்டு.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள்: 20, 22.

**தனுசு:**
கல்வி, தொழில் உயர்வைக் கொடுக்கும். சகோதரர்களின் முன்னேற்ற செய்திகள் குடும்பத்தில் மனமாற்றத்துடன் சந்தோஷமாகக் காணப்படும். நோய் துன்பங்கள் தீரப்பெறும். மூல நட்சத்திரர் சந்தோஷமடைவர்.
அதிஷ்ட நாட்கள்: புதன் வியாழன்.
அதிஷ்ட நிறம்: ஒரேஞ்சு வர்ணம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 19, 24.

**மகரம்:**
குடும்ப அமைப்பில் சண்டை சச்சரவுகளும் பண இழப்புக்களும் ஏமாற்றமான நிலையும் ஏற்படும். முக்கிய விடயத்தில் தோல்வியும் பயந்த சூழ்நிலையும் காணப்படும். அவிட்டக்காரர் குடும்பகாரருக்கு பலன்கள் நன்றாக இல்லை.
அதிஷ்ட நாட்கள்: ஞாயிறு, சனி.
அதிஷ்ட நிறம்: பலவர்ணம்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 20, 25.

**கும்பம்:**
முக்கிய விடயம் தோல்வியில் முடிந்து அவமரியாதையும் மனதில் தடுமாற்றமும் அரச தலையீடுகள் சட்ட பிரச்சனைகளும் காணப்படும். அவிட்ட பெண்கள் மரியாதை குறைவான நிலை ஏற்பட்டு தோல்விகளை சந்திப்பார்கள்.
அதிஷ்ட நாட்கள்: ஞாயிறு, சனி.
அதிஷ்ட நிறம்: கருமை நிறம்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள்: 24, 19.

**மீனம்:**
குடும்பத்தில் மகிழ்வும் பண வசதிகள் பெருகிய நிலையும் இருக்கும். இடமாற்றம் ஏற்படலாம். பாராட்டும் புகழும் ஏற்படும். ஆலய தரிசனம், கல்வி உயர்வு கிட்டும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 23, 24.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## நோய் காட்டும் நாக்கு



- சிவப்பு அல்லது சிவந்த வறட்சியான கோடு நாக்கின் மத்தியில் காணப்பட்டால் அது டைபோயிட் காய்ச்சலுக்கு அறிகுறி.
- நாக்கு சிவப்பாகவும், எந்த மாசும் இல்லாமல் தெளிவாகவும் காணப்பட்டால், அது கடுமையான காய்ச்சலைக் குறிக்கும்.
- நாக்கில் வெடிப்புக்கள் காணப்பட்டால், அது குடலில் புண் இருப்பதற்கான அறிகுறி.
- நாக்கு கடும் ஈரலிப்பாக இருந்தால் வாந்திபேதியின் தொடக்க நிலையாக இருக்கும். அது நுரையீரல் கோளாறுகளையும் குறிக்கும்.
- நாக்கு வெளுப்பாக இருந்தால் உடல் இயல்புக்கு மீறி குளிர்ச்சியடைந்திருக்கிறது என்று உணர வேண்டும்.
- நாக்கு நீலநிறமடைந்திருந்தால், இரத்த ஓட்டத்தில் ஏதோ கோளாறு என்று உணர வேண்டும்.
- நாக்கில் கெட்டியான மாவு போன்று படிந்திருந்தால் அது சயரோகத்தின் அறிகுறி.
- நாக்கு மிகுந்த வறட்சியுடனும், சிவந்தும் காணப்பட்டால் அது மூளை தொடர்

## சரியாகச் சமைக்க...

காய்கறிகள் சமைத்து சாப்பிடும்போது புதிய அணுகுமுறை சமையலில் இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் உங்கள் சமையலில் சுவை இருக்காது. அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்கிறீர்களா?

சில டிப்ஸ்களை கடைபிடியுங்கள் போதும்.



- ★ தீட்டப்பட்ட தானியங்களை நீங்கள் விரும்பிச் சாப்பிடுகிறீர்களா? ஆம் என்றால் புரதம், விட்டமின்கள், தாதுப் பொருட்களை இழந்து வருகிறீர்கள்.
- ★ அதேபோல தானியங்களை இரண்டு மூன்று தடவை தண்ணீரில் கழுவினால் விட்டமின் 'சி'யை இழந்து விடுவீர்கள்.
- ★ அரிசியை பாதி அளவில் வேக வைத்து சாப்பிட முயற்சி செய்யுங்கள்.
- ★ தானியங்களை வேக வைக்கும்போது சரியான அளவில் தண்ணீர் வைத்து குக்கரில் சமைத்துவிடுங்கள்.
- ★ சத்து நிறைந்த முளைகட்டிய தானியங்கள் ஜீரண சக்தியை எளிதாக்குவதோடு விட்டமின்களை நிறையக் கொடுக்கிறது. எனவே அடிக்கடி உணவில் தானியங்களை சேர்த்துக் கொள்ளுங்கள்.
- ★ குறைந்த நேரத்தில் சமைத்து நிறைவாகச் சாப்பிடுங்கள். பச்சைக் காய்கறிகளை அதிகம் சேர்ப்பதே நல்லது.
- ★ குளிர்ச்சாதனப் பெட்டியில் வைக்கும் காய்கறிகளை இரண்டு நாட்களுக்குப் பிறகு பயன்படுத்தப்படும்போது அதிலுள்ள அதிகளவு வைட்டமின் குறிப்பாக விட்டமின் சி அழிந்து போகிறது.
- ★ தானியங்களை மாவாக்கி பதார்த்தங்கள் செய்து சாப்பிட்டால் அதிலிருந்து விட்டமின்கள் கிடைக்கும். மாவில் செய்த பண்டங்களை குழந்தைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.
- ★ சமையலில் சமையல் சோடா சேர்க்க வேண்டாம். இதனால் காய்கறிகளிலுள்ள தயாமின் அழிந்துவிடும்.
- ★ வேர்க்கிழங்குகளான, உருளைக்கிழங்கு, கேரட், முள்ளங்கி, பீட்ருட் போன்றவற்றின் தோல்களில் விட்டமின் சத்து இருப்பதால் தோலுடன் சமைக்க வேண்டும்.
- ★ ஆவியில் காய்கறிகளை வேகவைத்துச் சாப்பிடுவதால் சத்து முழுமையாக கிடைத்துவிடும். இட்லி அவிப்பது போல காய்கறிகளை தட்டில் வைத்து அவித்தால் சுவையுள்ள உணவு தயாராகிவிடும்.
- ★ இரும்புச்சத்து நிறைந்த உணவைச் சாப்பிடுவதே உடல் நலத்திற்கு நலம் தரும். பேரீச்சம்பழம், நிலக்கடலை சாப்பிடுவதோடு, விட்டமின் 'சி' சத்துள்ள காய்கறிகள் பழங்களை சாப்பிட்டு வந்தால் போதும்.
- ★ திட்டமிட்ட சமையல்தான் சுவைக்கும். சமையல் சரியில்லை என்றால் சண்டை வரும் என்பது உங்களுக்கே தெரியும். அதனால் தினமும் உங்கள் சமையலில் விதவிதமான உணவு இருக்கட்டும். சாப்பிட்டு முடித்தவுடன் குடும்பத்தினர் உங்களை பாராட்டினால் அந்த மகிழ்ச்சியே போதுமல்லவா?


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

### மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** GW

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15-01-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா

# 20 மோனிக்கா என் மோனிக்கா

அமெரிக்காவில் பலதரப்பட்ட கொண்டாட்டங்கள் கொண்டாடப்படுவதுண்டு. இங்கெல்லாம் ஆசிரியர் தினம், காதலர் தினம் போன்ற நாட்கள் குறிப்பிட்டு ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுவது போல் அமெரிக்காவில் பல சிறப்பு நாட்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்று இலாக்காக்கள், திணைக்களங்கள், அலுவலகப் பிரிவுகள் ஆகியவற்றின் தலைவர்களைக் கௌரவிக்கும் நோக்குடன் கொண்டாடப்படும் தேசிய பொஸ்கள் தினமாகும்.

வெள்ளை மாளிகையின் தலைவர் சாட்சாத் கிளின்ரனேதான். ஆகவே பொஸ்கள் தினத்தையொட்டி கிளின்ரன் மீது மோனிக்கா ஒரு செய்யுளை எழுதினாள். அழகிய அட்டையில் அந்தச் செய்யுளை அச்சிட்டுக் கொண்டாள். இடையில் அவளுக்கு ஒரு தயக்கம் தலையெடுத்தது. அந்த அட்டையில் தான் மட்டும் கையொப்பமிட்டுக் கொடுப்பது அவளுக்கு அப்போது சரியாகப் படவில்லை. தன்னுடன் ஒன்றாகப் பயிற்சியில் சேர்ந்த சகலரையும் கையொப்பமிடவைத்தாள்.

இந்த அட்டையை தங்களுடைய பயிற்சிக்குப் பொறுப்பதிகாரியாகவிருந்த கரின் ஏப்ராம்சன் என்பவரை அணுகினாள். அவர் அதனை வாங்கிக் கொண்டு, "இதில் காணப்படும் வாசகங்களைப் படித்துப் பார்க்கும் பாக்கியம் எனக்கும் கிடைக்குமா?" என்றார்.

"தாராளமாகப் படித்துப் பாருங்கள்," என்றாள் மோனிக்கா. பிரித்துப் படித்துவிட்டு, தன் எதிரே நின்றிருந்த மோனிக்காவை ஏறிட்டார். அமரும்படி சைகை காட்டினார். சில வரிகள் மட்டுமே இருந்த அக்கவிதையை அவர் மீண்டும் மீண்டும் பலமுறை படித்துப் பார்த்தார். "மோனிக்கா- இதனை நீயே எழுதினாயா?" என்று வினவினார்.

"ஆமாம்! இது என்னுடைய சொந்தக் கருத்துத்தான்!" என்றாள்- உறுதியாக.

கரின், "நம்பமுடியவில்லை; அருமையாக இருக்கிறது. எனக்கு ஒரேயொரு கருத்துத்தான் தோன்றுகிறது. சொல்லட்டுமா?" என்று கேட்டார்.

"சரி உங்கள் கருத்தைக் கூறுங்கள்!"

"நீ தேர்ந்தெடுத்துள்ள தொழில் உனக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை!"

இவ்வாறு கரின் ஏபிராம்சன் கூறியதும் மோனிக்காவுக்குப் பெரும் குழப்பமாகிப் போயிற்று. "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று சற்றுக் கவலையுடன் வினவினாள்.

### தவறான தேர்வு?

"ஒன்றுமில்லை மோனிக்கா, உனக்குள்ள புலமையைப் பார்க்கும்போது, உன்னுடைய ஆற்றலை அரசியல் சூதாட்டம் நிரம்பிய வெள்ளை மாளிகைக்குள் முடக்கிக் கொண்டிருக்காமல், சுதந்திரமான வானம்பாடி போல் விண்நோக்கிப் பறக்கவிட்டால், சிறந்த இலக்கிய கர்த்தாவாக ஆகிவிடலாமே என்று அபிப்பிராயப்படுகிறேன்!" என்று உணர்ச்சி வசப்பட்டவராகக் கூறினார்.

நடுத்தர வயதான கரினின் வார்த்தைகள் வெறும் புகழ்ச்சிக்காக கூறப்பட்ட கருத்துக்களல்ல என்பதை அவருடைய முகக்குறிப்பே காட்டியது. மோனிக்காவுக்கு உள்ளம் குளிர்ந்தது. நன்றி கூறினாள். அவளுடைய வாழ்த்து அட்டையைத் தன்கையில் வைத்துக்கொண்டே, அதிபர் கிளின்ரனிடம் நேரடியாகவே அதனைக் கொண்டு போய்க் கொடுக்கலாமே, என்றார். ஆனால் இந்த யோசனையை ஏனோ மோனிக்கா ஏற்கவில்லை. அவரிடமே கொடுத்துவிட்டுத் திரும்பிவிட்டாள்.

அடுத்த நாளே மோனிக்காவைத் தன்னிடம் வருமாறு கரின் தொலைபேசி மூலம் கேட்டிருந்தார். அவருடைய அலுவலகம் சென்றதும், மோனிக்காவிடம் ஒரு காகித உறையை நீட்டினார். அதன் மீது எதுவும் எழுதப்படவில்லை. ஆனால் உறையினுள் ஒரு குறிப்பு இருந்தது. அதனை கரின் முன்னிலையில் திறந்து பார்க்க விரும்பாத மோனிக்கா, அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தனது இருக்கையில் வந்து அமர்ந்துகொண்டாள். உறையைத் திறந்து எழுதியிருந்த வாசகங்களைப் படித்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்த அளவுக்கு ஏற்றதாக எதுவும் அமையவில்லை.

கிளின்ரன் தனது கைப்பட "வாழ்த்துக் கவிதை படித்தேன். நன்றாக இருந்தது" கிளின்ரன். என்று மட்டும் இருந்தது. வேறு பிரத்தியேகமாக ஏதாவது சிறு குறிப்புகள் இருக்குமோ என்று திரும்பத் திரும்ப பார்த்தாள். அதுவும் ஏமாற்றமே.

அன்று அமெரிக்கத் தேசிய விடுமுறை நாள். 1995 நவம்பர் 10ம் திகதி. அலுவலகங்களில் நீண்டகாலம் பணிபுரியும் ஊழியர்களை கௌரவிக்கும் தினம். அன்று எங்குமே செல்லாமல் வீட்டிலேயே ஒய்வெடுப்பதாக ஏற்கனவே திட்டமிட்டிருந்தாள் மோனிக்கா.

படுக்கையில் புரண்ட வண்ணம் அண்டி பிளேய்லருடன் தான் களித்த இன்பமயமான பொழுதுகளை எண்ணி இரை மீட்டுக்கொண்டிருந்தாள். இன்பமும் துன்பமும் மாறி மாறி அவளுடைய மனதைத் தாலாட்டிக் கொண்டிருந்தன.



சிறிது நேரத்தில் அவளுடைய தொலைபேசி கிணுகிணுத்தது. தனது இன்பக்

### தொலைபேசியில் வந்த திடீர் அறிவித்தல்

கனவைக் கலைப்பதாக எண்ணி அதனை வெறுப்புடன் எடுத்துத் தனது காதுக்குக் கொடுத்தாள். தொலைபேசியின் அடுத்த முனையில் பேசிய குரலைக் கேட்டதும் மோனிக்கா துணுக்குற்றாள். அவளுடைய வாழ்க்கை மட்டுமல்ல, அமெரிக்காவின் வரலாற்றிலேயே ஒரு தனியான அத்தியாயத்தைத் தொடக்கிவைக்கப் போகும் தகவலுடன் அக்குரல் ஒலித்தது.



மோனிக்கா சில நொடிகள் மூச்சுவிட மறந்துபோனாள். தன்னை சுதாகரித்துக் கொண்டு அடுத்த வார்த்தைகளைக் கேட்டாள்.

### பாராட்டும் தகவலும்

அதிபரின் சிறப்புச் செயலாளர்களில் ஒருவரான ரிம் கீட்டிங்தான் தொலைபேசியில் பேசினார். முதலில் வாழ்த்துத் தெரிவித்தார். தொடர்ந்து வெள்ளை மாளிகையின் நிர்வாகப் பிரிவில் மோனிக்காவுக்கு பணி நிரந்தரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் வருடாந்தம் 25 ஆயிரம் டொலர் வேதனமாகத் தரப்படும் என்றும் அவர் தெரிவித்து, மீண்டும் பாராட்டிவிட்டு தொலைபேசித் தொடர்பைக் கத்தரித்துக் கொண்டார்.

மோனிக்கா மகிழ்ச்சி மேலீட்டால் பலத்த சப்தமிட்ட வண்ணம் தன் அறையினுள் துள்ளிக் குதித்தாள். அவளுடைய தாயோ சித்தியோ அப்போது அங்கிருக்கவில்லை. வீட்டுப் பணிவிடைகளைச் செய்யும் பெண்மணி ஒருத்திதான் சமையலறையில் இருந்தாள்.

மோனிக்கா போட்ட கூச்சலைக் கேட்டு அந்த அம்மையார், மோனிக்கா வின் அறைக்கு ஓடிவந்தாள். மோனிக்கா அந்த அம்மையாரை ஓடிச் சென்று கட்டிப்பிடித்து மேலே தூக்கிய வண்ணம் கூத்தாடினாள். பிறகு தனது சினேகிதிகள் அனைவரையும் தொலைபேசியில் அழைத்து தகவலைத் தெரிவித்தாள். தனது தாயார் எங்கிருக்கிறார் என்பதை அறிந்து தொலை பேசியில் தொடர்பு கொண்டாள். தாயாருக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது. உடனடியாகப் புறப்பட்டு வருவதாக அறிவித்தார். சொன்னது போல் அரைமணி நேரத்தில் அங்கு வந்து சேர்ந்துவிட்டார்.

தனது தந்தையாருக்கும் தம்பிக்கும் தொலைபேசி மூலம் தகவல் சொன்னாள். அண்டி பிளேய்லருக்கும் தொலைபேசியில் தகவல் சொல்ல நினைத்தாள். ஆனால் தவிர்த்துக் கொண்டாள். தனது சினேகிதிகளிடம் இவ்வாறுதான் மோனிக்கா தகவலைக்கூறி மகிழ்ந்தாள்:

"கல்லூரியிலிருந்து சில மாதங்களுக்கு முன்னர்தான் வெளியேறினேன். இதற்கிடையில் எனக்கு வெள்ளை மாளிகையில் உயர்ந்த சம்பளத்தில் நிரந்த வேலை கிடைத்துவிட்டது. வேறு எனக்கு என்ன வேண்டும்! உண்மையில் நான் ஒரு அதிஷ்டசாலிப் பெண்ணேதான்! எனக்கு பெருமையாக இருக்கிறது!" என்று எல்லோரிடமும் கூறினாள். (வருவாள்)

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
### செட்டிக்குளம் வாசகிக்கு அதிஷ்டம்!


| | |
|---|---|
| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| இவர்தான் | மகிழினி-செல்வராஜா, அரசினர் வைத்தியசாலை, செட்டிக்குளம். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





சக்தி தனக்கே உடைமையாக்கு-அது
சங்கடங்கள் யாவினையும் உடைக்கும்-
மதி
சக்தி தனக்கே உடைமையாக்கு-அங்கு
சத்தியமும் நல்லறமும் கிடைக்கும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# நான் தான் ராஜா



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது.

ஒரு நாள் சிங்கம் வேட்டைக்குப் போனது. அப்போது அதனிடம் முயல்குட்டி ஒன்று மாட்டிக்கொண்டது. சிங்கத்திடம் மாட்டிக்கொண்ட முயல்குட்டி, செய்வதறியாது திகைத்து நின்றது. எப்படியாவது அதனிடமிருந்து தப்பிக்கொள்ள எண்ணியது. உடனே ஒரு தந்திரம் செய்தது. முயல்குட்டி சிங்கத்தைப் பார்த்து, "இதுவரை இந்தக் காட்டில் என்னை யாரும் தொட்டது கூட இல்லை. நீ என்னவென்றால் என்னைக் கொல்லப் பார்க்கிறாயா?" என்று கேட்டது.

"ஏன், நீ இந்தக் காட்டின் ராஜாவா?" என்று கிண்டலாகக் கேட்டது சிங்கம்.

"ஆம், நான் தான் ராஜா. கடவுள் தான் என்னை இந்தக் காட்டிற்கு ராஜாவாக இருக்க அனுப்பி வைத்திருக்கின்றார்!" என்றது முயல்குட்டி.

"நான் இதை நம்பமாட்டேன்!" என்ற சிங்கம், முயல்குட்டியை நெருங்கியது.

உடனே முயல்குட்டி, "அப்படியே நில்! நீ என்னைக் கொன்று தின்றால் கடவுள் உன்னை அழித்து விடுவார். என்னை யார் தொட்டாலும் அனைவருக்கும் சாவு நிச்சயம்.

இதனால் எல்லா மிருகங்களும் என்னைக் கண்டால் அஞ்சி ஓடும்!" என்றது.

"இதை நான் எப்படி நம்புவது?" என்று கேட்டது சிங்கம்.

"நான் சொல்வதில் சந்தேகம் இருந்தால் என்னுடன் வா உன் சந்தேகம் தீர்ந்து விடும்!" என்று சிங்கத்தை அழைத்தது முயல்குட்டி.

முயல்குட்டியின் பேச்சை நம்பிய சிங்கம், அதோடு சென்றது. சிங்கம் வருவதைக் கண்ட மிருகங்கள் எல்லாம் ஓடி மறைந்தன. "பார்த்தாயா? என்னைக் கண்டதும் மிருகங்கள் எல்லாம் எப்படி ஓடுகின்றன என்று? இன்னுமா என் மீது சந்தேகம்?" என்று கேட்டது முயல்குட்டி.

சிங்கம் இதை உண்மை என்று நம்பி. முயல்குட்டியிடம் மன்னிப்புக் கேட்டு விட்டுச் சென்றது.

தன் புத்திசாலித்தனத்தால் தப்பிக் கொண்ட முயல்குட்டி தனக்குள் சிரித்துக் கொண்டது.

## அதிசயம் - ஆனால் உண்மை!



பஹமாவில் உள்ளது ரிக்காட் தவளை. உலகிலேயே இவ்வகைத் தவளைதான் தமது முட்டைகளை அடைகாத்து முட்டை பொரிக்கிறது.



உலகிலேயே வெப்பமிகு நாய்கள் மெக்ஸிகோவில்தான் உள்ளன. இந்த நாய்களின் வெப்பநிலை எப்போதும் 104 பாகை ஃபாரன்ஹைட்டாக இருக்கும்.



சம்மட்டித்தலை சுறா (ஹமர்ஹெட் ஷார்க்) வைப் போன்ற உருவத்தில் சம்மட்டித் தலை ஈ உள்ளது.

## மூக்குக் கண்ணாடி

பார்வைக் கோளாறுகளைச் சரிசெயவதற்காக மூக்குக்கண்ணாடி பயன்படுகிறது. ஆனால் முதன் முதலில் சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் பார்வைக் கோளாறுகளைச் சரிசெய்ய உபயோகிக்கப்படவில்லை.

நீதிமன்றத்தில் வழக்கு நடக்கும் போது, நீதிபதி வழக்குப் பற்றி என்ன அபிப்பிராயப் படுகிறார் என்பதை அவரது கண்கள் மூலம் பிறர் அறியக்கூடாது என்பதற்காக மூக்குக்கண்ணாடி அணியப்பட்டது. இது புகை மூட்டம் போன்ற ஒருவகைப் பளிங்குக் கல்லால் செய்யப்பட்டது.

முதன் முதலில் பார்வைக் கோளாறுகளைச் சரிசெய்யப் பயன்படும் மூக்குக் கண்ணாடி எப்போது உருவாக்கப்பட்டது?

அநேகமாக 1286ல் இத்தாலியில் உள்ள பைஸா நகரில் இது உருவாக்கப்பட்டிருக்கலாம். இவை 1300ல் விற்பனைக்கு வந்தன, என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.



ஆனால் மூக்குக்கண்ணாடியை உருவாக்கியவர் யார் என்பது இதுவரை அறியப்படவில்லை.

1800ம் ஆண்டில் இத்தாலியில் உள்ள ஃபுளோரன்ஸ் நகரில் இருக்கும் தேவாலயத்தில் ஒரு நினைவுச்சின்னம் உருவாக்கப்பட்டது. அதில் மூக்குக் கண்ணாடியைக் கண்டுபிடித்த ஊர்பேர் தெரியாத அந்த மனிதனை வானளாவப் புகழப்பட்டுள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **15.01.2000.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 326**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 324

**பரிசுக்குரியவர்:**
பிரதாப் கிருபாகரன்,
சென். ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். ஐ. ஸ.ஃப்னா பானு, மருதாவெல, மாவனல்லை. | டி. எஸ். கிறிஸ்டோபர், சுதிரேஷன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி. |
| பி. சிரோமி, பரி/ யோவான், த.ம.வி, இறக்குவானை. | எஸ். துஷான், றோயல் கல்லூரி, கொழும்பு-07. |
| எம். கலைவாணி, பூண்டுலோயா த.ம.வி., பூண்டுலோயா. | பா. விஷ்ணு வத்சன், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-04. |
| என். நஸியா, தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. | ச. பிரமிளா, கமு/ பாசுபதேஸ்வர வித்தியாலயம், தம்பட்டை. |
| பே.வி. பியோனி பிரியதர்சனி, தமிழ் மத்திய கல்லூரி, பண்டாரவளை. | நவேந்திரன் விஜயலட்சுமி, சந்தை வீதி, கோட்டைக்கல்லாறு. |

## விடுகதைகளும் விடைகளும்

1. முத்தழகி உடலெல்லாம் பச்சை நிறம். அது என்ன?
2. பச்சைமாளிகையில் வெள்ளை மெத்தையிலே கறுப்பு ராஜா தூங்குகிறார். அது என்ன?
3. முள்ளம்பன்றி வயிற்றுக்குள் நூறு மஞ்சள் குருவி. அது என்ன?
4. அதிக விலைக்காரன், அடக்கமாய் அகத்தில் இருப்பான் அவன் யார்?
5. எட்டிப் பார்க்கும் தூரத்தில் குட்டிப் பட்டணம், ஆனால் அதை எட்டிப் பார்க்க முடியாது. அது என்ன?
6. மரங்களின் நடுவே வலை, வலையின் நடுவே மீனவன். அவன் யார்?
7. ஓடுவார், ஓடுவார், ஓடிக்கொண்டே இருப்பார்; இருந்தாலும் ஒரே இடத்தில் இருப்பார். அவர் யார்?
8. மாவில் பழுத்த பழம், மக்கள் விரும்பும் பழம். அது என்ன?
9. வெளியே வெள்ளி, உள்ளே தங்கம். அது என்ன?
10. பட்டுமேலே பட்டுடுத்தி, முத்துப்பட்டுடுத்தி பட்டணந்தான் போறா சின்னச் சிட்டு. அது என்ன?

### விடைகள்

1.வெண்டைக்காய் 2.கொடுக்காப்புளி
3.பலாப்பழம் 4.முத்து
5.முதுகு 6.சிலந்தி
7.கடிகாரம் 8.அப்பளம்
9.முட்டை 10.சோளக்கதிர்

## கன்றா? குட்டியா?



அவுஸ்திரேலிய நாட்டின் தேசியச் சின்னம் கங்காரு. உலகில் அருகி வரும் உயிரினங்களில் கங்காருவும் ஒன்று.

கங்காருவின் இளமைப் பெயரைத் தமிழில் குட்டி என்கிறோம். அதாவது 'கங்காருக் குட்டி' என்று. இது தவறு. கன்று என்பதே சரி.

சில விலங்குகளின் இளமைப் பெயரை கன்று என்றும் மற்றும் சில விலங்குகளின் பெயரைக் குட்டி என்றும் அழைக்கின்றனர்.

யானை, குதிரை, கழுதை, எருமை, ஒட்டகம், மான் போன்ற விலங்குகளை இளமையில் 'கன்று' என்று சொல்வதே சரி. இவை தாவரத்தை உண்டு வாழ்பவை அத்துடன் ஒரு முறைக்கு ஒரு கன்றையே ஈனும்.

நாய், பூனை, பன்றி, நரி, புலி, சிங்கம், போன்றவற்றின் இளமைப் பெயர் 'குட்டி' இவை ஒரே தடவையில் பல குட்டிகளை ஈனும்.

கங்காருவும் ஒரு கன்றையே ஈனும். கன்றை ஈன்ற பின்னர் அதைத் தனது அடி வயிற்றில் உள்ள பையில் வைத்துப் பாலூட்டி வளர்க்கும்.

## தன்னிச்சையின் எச்சரிக்கை

நம் உடலின் அனைத்து செயல்களும் மூளையால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

ஆனால் மூளைக்குக் கட்டுப்படாத இயக்கங்களும், நம் உடலில் ஏற்படுவதுண்டு. அதற்குப் பெயர் 'தன்னிச்சை' என்பதாகும்.

தன்னிச்சை செயல்கள் எவை என்று தெரியுமா?

நாம் அடிக்கடி கண் சிமிட்டுகிறோம் அல்லவா? இது மூளையின் செயற்பாடு இல்லாமல் நடக்கிறது. இதே போன்று காலில் முள் குத்தும்போது உடனே காலைத் தூக்குகிறோம். இதுவும் மூளையின் செயற்பாடு இல்லாமல் நடக்கிறது. இவை யாவும் தன்னிச்சைச் செயல்கள்.

உதாரணத்திற்கு உங்கள் நண்பர் ஒருவரை உங்கள் முன் நிற்க வைத்து, அவரின் முகத்தில் அடிப்பதற்காகக் கையை ஓங்குங்கள். அவர் உடனே வேகமாகக் கண்ணை மூடிக் கொள்வார்.



எச்சரிக்கையுடன் செயற்படுவதில் தன்னிச்சை மிகவும் கவனமாக இருந்து வருகிறது.

## எப்படி வந்தது?

'வாக்கு' என்பதை 'வோட்' (vote) என்று ஆங்கிலத்தில் கூறுவோம். இந்த 'வோட்' என்ற சொல் எப்படி வந்தது தெரியுமா?

'வோட்டம்' (votum) என்ற இலத்தீன் சொல்லில் இருந்துதான் 'வோட்' என்ற சொல் வந்தது. 'வோட்டம்' என்ற இலத்தீன் சொல்லுக்கு உறுதிமொழி என்று அர்த்தம்.

தான் தேர்ந்தெடுக்கப்பட்டால் "அதைச் செய்வேன், இதை செய்வேன்" என்று வாக்குறுதி கொடுக்கிறார்கள் அல்லவா? அதன் அடிப்படையில் தான் 'வோட்டம்' என்ற சொல்லில் இருந்து 'வோட்' என்ற சொல் வந்தது.

## பிணங்களின் சீட்டாட்டம்

பல ஆண்டுகளுக்கு முன் பெல்ஜியத்தின் மாஸ்பஸ் கோட்டையின் நுழைவாயிலில் மின்னல் தாக்கி வெடி மருந்து வெடித்தது.

சம்பவம் நடந்த 3 வாரங்களுக்குப் பின் வேலையாட்கள் இடிந்த கோட்டைச் சுவரைத் தோண்டினார்கள்.



அப்போது பாதாள அறையினுள் 4 சிப்பாய்கள் சீட்டு விளையாடிக் கொண்டிருப்பதுபோலவும் 5வது சிப்பாய் நின்று பார்ப்பது போலவும் காணப்பட்டனர்.

உண்மையில் 5 சிப்பாய்களும் வெடி மருந்து வெடித்தபோது அக்கணமே மாண்டுவிட்டனர்.

வெடிப்புக்காற்றலையால் அங்கு ஒரு வெற்றிடம் உருவாகி சடலங்கள் அழியாது நிலைத்து விட்டன.

இக்குழுவை ஒரே கல்லறையில் கையில் பிடித்த சீட்டுக்களுடன் அப்படியே புதைத்து விட்டனர்.

# திக் திக் தொடர்

# சிகப்பு வணக்கம் 08

அதிகாரமில்லை. என்னோட ஜாதகப்படி எனக்கு வயசு எண்பத்தேழு. இன்னும் முப்பது வருஷகாலம் உயிரோடு இருக்கப் போகிறேன் நான். என்னை யாரும் எதுவும் செய்துவிட முடியாது.."

"ப்ளக்..."

அறைக்கதவைத் திறந்துகொண்டு பொலிஸ் கமிஷனர் லட்சுமிபதி உள்ளே வந்தார். உடம்பில் பதற்றம். கண்களில் கோபம்.

ஆச்சார்யா கேட்டார்:

"என்ன கமிஷனர் ஸார்... இவ்வளவு டென்ஷனா உள்ளே வருகிறீர்கள்..? வேறு ஏதாவது பிரச்சனையா...?"

"அதே பிரச்சனைதான். உங்களை மிரட்டின ஆள் மறுபடியும் ஃபோன் செய்திருந்தான்."

"என்னவாம்...?"

"உங்களுக்கு ஆயுள் இன்னமும் ஐந்து நிமிஷம்தானாம். முடிந்தால் ஆச்சார்யாவைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு ரிஸீவரை வைத்து விட்டான்."

ஆச்சார்யா சிரித்தார்.

"எனக்கு ஆயுள் இன்னமும் ஐந்து நிமிஷம்தான் என்று டெலிஃபோனில் மிரட்டல் வந்ததை சீரியஸாக எடுத்துக் கொள்ளாதீர்கள் போலீஸ் கமிஷனர் ஸார்...!"

லட்சுமிபதி தோள்களைக் குலுக்கினார்- "அது வெறும் மிரட்டலாகவே இருந்தாலும், நாம் இருக்க வேண்டிய ஜாக்கிரதையில் இருக்க வேண்டியது முக்கியம் இல்லையா? நீங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் வெளியே வருவது வேண்டாம். இனி வரப்போகிற ஒவ்வொரு விநாடியும் நமக்கு முக்கியம்...!"

உடம்பின் ஒவ்வொரு உறுப்புக்குள்ளும் பயம் கான்க்ரீட் மாதிரி அடைத்துக் கொண்டிருந்தாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் ஆச்சார்யா புன்னகைத்தார்.

"இப்படி போலீஸ் ஸெல்லுக்குள் ஒரு கைதி மாதிரி உட்கார்ந்திருக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது கமிஷனர் ஸார்! உயிருக்குப் பயந்தவன் நான் கிடையாது..."

"உங்கள் துணிச்சலைக் காட்ட இது நேரம் கிடையாது. இந்த விவகாரத்தைப் பொறுமையாகத்தான் கையாள வேண்டும்."

லட்சுமிபதி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ஆச்சார்யாவின் சஃபாரி பாக்கெட்டில் இருந்த செல்ஃபோன் மெலிதாய்க் கனைத்துக் குரல் கொடுத்தது.

ஆச்சார்யா செல்ஃபோனை எடுத்துப் பார்த்தார்.

ஒரு டெலிஃபோன் பூத்திலிருந்து அழைப்பு வந்திருந்தது. கமிஷனர் எட்டிப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

"பப்ளிக் பூத்திலிருந்து யாரோ பேசுகிறார்கள். அநேகமாய் அந்த மிரட்டல் பேர்வழியாக இருக்கலாம்..."

ஆச்சார்யா கேலியான குரலில் கேட் டார்.

"இந்த ஃபோனை அட்டெண்ட் பண்ணவாவது எனக்கு அனுமதி உண்டா கமிஷனர் ஸார்...? இல்லை இதுக்கும் தடையா?"

"ஃபோனை அட்டெண்ட் செய்யுங்கள். அப்போதுதானே பேசுவது யார் என்று தெரியும்...."

"இதற்காகவாவது அனுமதி கொடுத்தீர்களே! நன்றி!" சொன்ன ஆச்சார்யா செல்ஃபோனை எடுத்து காதுக்குப் பொருத்தி "ஓ எஸ்" என்று குரல் கொடுத்தார்.

மறுமுனையில் குரல் கேட்டது.

"யார் ஆச்சார்யாவா..?"

"ஆமாம்...!"

"உங்களுக்கு என் கடைசி வணக்கம். இனிமேல் உங்களுக்கு யாரும் வணக்கம் சொல்லமாட்டார்கள். நீங்களும் யாருக்கும் வணக்கம் சொல்ல முடியாது..."

ஆச்சார்யா சிரித்தார்.

"உன்னுடைய உளறல்களையெல்லாம் எப்போது நிறுத்திக் கொள்ளப் போகிறாய்...?"

"இன்னும் இரண்டு நிமிஷத்தில்! ஏனென்றால் நீங்கள் உயிரோடு இருக்கப் போவதே இரண்டு நிமிஷம் தானே?"

"உன்னுடைய மிரட்டல்களையெல்லாம் குப்பைக் கூடையில் போட்டுப் போட்டு அது நிரம்பிவிட்டது..."

"இப்போதும் ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை மிஸ்டர் ஆச்சார்யா. நான் ஏற்கெனவே விடுத்த மூன்று கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எனக்கு வாக்குறுதி கொடுங்கள். நீங்கள் உங்கள் ஆயுட்காலம் வரைக்கும் உயிரோடு இருக்கலாம்...!"

ஆச்சார்யா பலமாய் வாய்விட்டு அண்ணாந்து சிரித்தார்.

"உன்னுடைய வெத்து மிரட்டலைக் கேட்டுக் கேட்டு என் காதுகள் இரண்டும் புளித்துப் போயிற்று. பேசாமல் ரிஸீவரை வைத்துவிட்டுப் போகிறாயா...?"

"பிடிவாதம் பிடிக்காதீர்கள். நீங்கள் உயிர் வாழப் போவது இன்னும் ஒரு நிமிஷமே..."

"புலம்பாதே...!"

"இன்னும் ஐம்பத்தி ஐந்து விநாடிகள் தான்..."

"முட்டாள்...!"

"ஐம்பது விநாடி..."

"உனக்குப் பொழுது போகவில்லையென்றால் எண்ணிக் கொண்டே வா... என்னதான் நடக்கப்போகிறது என்று நானும் பார்த்து விடுகிறேன்..."

"நாற்பத்தைந்து விநாடி...!"

ஆச்சார்யா புன்னகையோடு செவிமடுத்தார்.

"நாற்பது..."

"...."

"முப்பது..."

"..."

"இருபது...."

"....."

"பத்து..."

"ஐந்து..."

"சீக்கிரமா சொல்லி முடி..."

"சைபர்! இனி அந்த ஆண்டவனே வந்தாலும் உன்னைக் காப்பாத்த முடியாது. போய்ச் சேர்..."

மறுமுனையில் குரல் சொல்லி முடித்த விநாடி-ஆச்சார்யாவின் கையில், இருந்த செல்ஃபோன் 'டொம்ம்ம்' என்ற சத்தத்தோடு வெடிக்க, ஆச்சார்யா ரத்தமாய்ச் சிதறினார்.

அறையின் நான்கு பக்க சுவர்களிலும் ரத்தப் புள்ளிகள் டிசைன் போட்ட தினுசில் பதிந்தன.

★★★

முரளி பைக்கை விரட்டிக் கொண்டு, வளசரவாக்கம் போய்ச் சேர்ந்தபோது, முற்பகல் வெய்யில் நெருப்பாய்த் தகித்துக் கொண்டிருந்தது.

ஒரு மரத்துக்குக் கீழே முளைத்திருந்த டீக்கடைக்குப் பக்கத்தில் பைக்கை நிறுத்தி, பாய்லருக்குள் கரியை அள்ளிப் போட்டுக் கொண்டிருந்த நபரிடம் கேள்வி கேட்டான்.

"இங்கே ஆர்யமாலா தெரு எது...?"


"இதே ரோட்ல கடைசிக்குப் போங்க..."

"எவ்வளவு தூரம் போகணும்?"

"கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர்..."

பைக்கை உயிர்ப்பித்து விரட்டினான் முரளி.

அரை கிலோ மீட்டர் தூரம் போனதுமே பொட்டல் வெளி



ஆரம்பமாகி, அங்கொன்றும் இங்கொன்றுமாய் முளைத்திருந்த வீடுகளைக் காட்டியது. தார் ரோட்டுக்காகக் காத்திருந்த செம்மண் பாதைகளில் புழுதி பறந்தது.

பைக் ஒரு கிலோ மீட்டர் தூரம் உள்ளே போனதும், புதிதாக உருவாக்கியிருந்த தொகுப்பு வீடுகள் புது டிஸ்டெம்பர் பூச்சில் பளபளத்தன. ஆட்கள் நடமாட்டம் சொற்பமாய்த் தெரிந்தது.

முரளி, பைக்கை மெதுவாய் விரட்டி, ஆர்யமாலா தெருவைக் கண்டுபிடித்து, இருபத்தியாறாம் எண் வீட்டை தேடினான்.

### க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

மரங்களுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த அந்தப் பழைய கட்டடம் பார்வைக்குக் கிடைத்தது.

பெயிண்ட் உதிர்ந்து போன பழைய இரும்பு கேட்டில் சாக்பீஸால் எழுதப்பட்ட '26' எண் தெரிந்தது.

முரளி பைக்கினின்றும் இறங்கி, கேட்டை நெருங்கி மெதுவாய்த் தள்ளினான்.

அது சத்தம் இல்லாமல் பின்னோக்கிப் போயிற்று.

முரளி உள்ளே நடந்தான். வெயிலுக்கு இதமாய், கீழே கொட்டியிருந்த நிழலில் மெதுவாய் நடந்தே போய் வாசற்படி ஏறினான்.

காலிங்பெல் தேடி, அது கிடைக்காமல் போகவே, முஷ்டியைக் குவித்துக் கதவைத் தட்டினான்.

நான்கைந்து தட்டல்களுக்குப் பிறகு, அந்த பழைய மரக்கதவு ஸ்லோமோஷனில் பின் வாங்கிப் பாதியில் நிற்க, ஒரு பெரியவர் எட்டிப் பார்த்தார்.

"யார் வேணும்?"

"இது இருபத்தியாறாம் நொம்பர் வீடு தானே...?"

"ஆமா..!"

முரளி சில விநாடிகள் தயங்கி விட்டு, பிறகு மெல்லிய குரலில் சொன்னான்.

"ஒரு மணி நேரத்துக்கு முந்தி இந்த வீட்டிலிருந்து எனக்கு ஒரு ஃபோன் வந்தது..."

"ஃபோன் இங்கேயிருந்தா...?"

"ஆமா..."

"இருக்காதே...! காரணம், இந்த வீட்ல டெலிஃபோனே கிடையாது. உங்க பேர் என்ன..?"

"முரளி..."

"சரி... நீங்க இங்கே யாரைத் தேடிகிட்டு வந்தீங்க...?"

"பைரவிங்கிற பொண்ணை..."

"இந்த வீட்ல பெண்கள் யாரும் கிடையாதே..."

"இங்கே யார் இருக்காங்க...?"

"நான் மட்டும்தான். இந்த வீட்டுக்கு நான் வாட்ச்மேன். வீட்டுக்கார ஓனர் பம்பாய்ல இருக்கார். நீங்க ஏதோ தப்பான அட்ரஸுக்கு வந்துட்டீங்கன்னு நினைக்கிறேன்."

"இது ஆர்யமாலா தெருதானே?"

"ஆமா..."

"ஃபோன்ல சொன்னது இந்த தெருவைத்தான்...."

"அப்படீன்னா யாரோ உங்களை ஏமாத்தியிருக்காங்க..."

முரளி தயங்கி நிற்க, பெரியவர் கேட்டார்.

"என்ன...?"

"இந்த வீட்ல இப்போ நீங்க மட்டுந்தான் இருக்கீங்களா?"

"ஆமா..."

"எனக்கு ஒரு சந்தேகம்..."

"கேளுங்க..."

"உங்களுக்கு இப்போ என்ன வயசு இருக்கும் பெரியவரே...?"

"திடீர்ன்னு எதுக்காக இந்தக் கேள்வி...?"

"ஏதோ கேட்கணும்போல் தோணிச்சு... கேட்டேன். என்ன வயசு... பெரியவரே..?"

"எழுபதுக்கு மேலே ஆச்சு..."

"பார்த்தா அப்படித் தெரியலையே. ஏதோ வேஷம் போட்ட மாதிரி இருக்கு..."- முரளி சொல்லிக் கொண்டே பெரியவரின் தாடையில் கையை வைத்து, தாடியைப் பிடித்து, சட்டென்று ஒரு இழுப்பு இழுத்தான்.

தாடி கையோடு வந்துவிட்டது.

★★★

ஏர்போர்ட் மொத்தமும் பொலீஸ் யூனிஃபார்ம்களால் நிரம்பியிருக்க, உள்ளே பதட்டம்:

பேட்ரோல் காரில் டி.ஜி.பி. ஜோஷி கவலைக் கண்களோடு வந்து இறங்க, மற்ற போலீஸ் அதிகாரிகள் அரைவட்டமாய் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

ஜோஷி நடந்து கொண்டே கேட்டார்.

"சம்பவம் தொடர்பாய் யாராவது பிடிபட்டார்களா..?"

"இல்லை...."

"எப்படிப்பிடிபடாமல் போவான்? டெலிஃபோனில் மிரட்டல் மிரட்டியே இத்தனையாவது நிமிஷத்தில் இறக்கப் போகிறீர்கள் என்று சொல்லிச் சொல்லியே ஆச்சார்யாவைக் கொலை செய்திருக்கிறான். பக்கத்தில் நின்றிருந்த கமிஷனர் லட்சுமிபதியின் உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லையே...?"

"இல்லை... லேசாய் சிராய்ப்புகள் மட்டும். ஆச்சார்யாவைப் பலி வாங்கியது ஒரு மைக்ரோ டைனமிட். அது அவருடைய செல்ஃபோனிலேயே சிம்கார்டுக்குப் பக்கத்திலேயே பொருத்தப்பட்டு லேசர் ரிமோட் கண்ட்ரோலால் இயக்கப்பட்டிருக்கிறது..."

"ஆச்சார்யா இப்படிக் கொலை செய்யப்பட்டு இருப்பது போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு ஒரு தீராத களங்கம்.

இந்தக் களங்கம் துடைக்கப்பட வேண்டுமானால் கொலையாளி இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்..."

ஜோஷி கோபமாய்ச் சொல்லி நடை போட்டுக் கொண்டிருக்கும் போதே-

அவரிடம் இருந்த பேஜர் கூவியது

அவசரக் கூவல்.

எடுத்துப் பார்த்தார்.

பேஜரில் எழுத்துக்கள் பிரசவமானி ஒரு வாக்கியமாக மாறியிருந்தது.

படித்தார்.

**'போலீஸ்துறைக்கு என் முதல் சிகப்பு வணக்கம்'.**

**(தொடர்ந்து வரும்)**

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

# தர்மயுத்தம் 18

அவர்களுக்கு எதற்கு விருந்து? குறிப்பாக காரணம் எதுவும் இல்லை, சும்மாதான். அந்த விருந்திற்குக் காரணம் கண்டிப்பாக வேண்டும் என்றால் ஒரே காரணம்தான், அவர்கள் வசதியானவர்கள்!

அக்காவின் கணவர் கை நிறைய சம்பாதிப்பவர், அவர்களை அடிக்கடி வீட்டிற்கு அழைத்து விருந்து கொடுப்பதன் மூலம் தங்கள் கௌரவத்தை விளம்பரப்படுத்திக் கொண்டது அந்தக் குடும்பம்.

வெளியில் வந்த அத்தான், கோபமாகக் கேட்டார். "என்ன ராத்திரியிலே வந்து கலாட்டா பண்றே? படிச்சவனா நீ! தண்ணி அடிச்சுட்டு வந்தியா? இல்ல, கஞ்சா அடிச்சியா?" ஏற்கெனவே நொந்து போயிருந்த அந்த இளைஞன்? இந்தக் கேள்விகளைக் கேட்டதும், "மரியாதையா பேசு!" என்று ஓரடி முன்னே வந்தான்.

இருவரும் தள்ளு முள்ளில் இறங்கினார்கள். மொத்தக் குடும்பமும் அத்தானுக்கு சப்போர்ட். அந்தத் தெருவே அவனை ரௌடியாகப் பார்த்தது. உடன்பிறந்த சகோதரியோ, "என் புருஷனை எப்படிடா திட்டலாம்?" என்று துடைப்பத்தை கையில் எடுத்தாள்.

ருந்தபோது, போலீஸ் வேன் வழிமறித்தது.

கைகளைப் பின்புறம் கட்டி, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று, அங்கே கைகளை அவிழ்த்துவிட்டனர். கைகளை மட்டுமல்ல, அவர்கள் போட்டிருந்த சட்டை, பாண்ட், பனியன் ஆகியவற்றையும் அவிழ்த்து விட்டு, வெறும் ஜட்டியுடன் உட்கார வைத்தனர்.

செய்தி கேள்விப்பட்டு குடும்பத்தினர் மீண்டும் சபிக்க ஆரம்பித்தனர். "அவன் எங்க புள்ளையே இல்லை, அப்படி ஒரு புள்ள எங்க குடும்பத்துல பெறக்கலேன்னு நாங்க நெனைச்சுக்கிறோம். அவனை நாங்க தலை முழுகிட்டோம்" இது குடும்பத்தினரின் வாக்குமூலம்.

அவர்களின் கதையைக் கேட்ட அந்த இன்ஸ்பெக்டருக்கு மாத்திரம் அவர்களின் மீது ஒரு இரக்கம் பிறந்தது.

"இந்த இளைஞர்கள் என்ன பிறவிக் குற்றவாளிகளா? இல்லை. சந்தர்ப்ப சூழ்நிலையால், சகவாச தோஷத்தில் குற்றப்படுகுழியில் தவறி விழுந்தவர்கள். சாராயம் கடத்துவதா இந்த இளைஞர்களின் லட்சியம்? அதற்காகவா கல்லூரிகளில் பெரிய பெரிய பேராசிரியர்கள் எழுதிய புத்தகங்களை எல்லாம் மனப்பாடம் செய்தார்கள்?

இரவெல்லாம் கண்விழித்து படித்து



இந்த மொத்த நிகழ்ச்சிகளுக்கும் மூல காரணம், அந்த இளைஞனுக்கு வேலை இல்லை; வருமானம் இல்லை. அவனே ஒரு சம்பாதிக்கும் இயந்திரமாக அங்கீகரிக்கப்பட்டு இருந்தால், அவன் குற்றங்கள் உடையவனாக இருந்திருந்தாலும், அந்தக் குற்றங்கள் மறைக்கப்பட்டிருக்கும்.

வெந்த மனதோடு வெளியில் வந்தான் அந்த இளைஞன். விடிந்ததும் தனது நண்பர்களைச் சந்தித்தான். நண்பர்கள் அவரவர் பாக்கெட்டிலிருந்து ஒரு அவசர நிதி திரட்டி, அவனை சாப்பிட வைத்தனர்.

சாப்பிடும்போது ஒரு நண்பன் சொன்னான், "நேற்று ஒருத்தர சந்திச்சேன். அவன், 'ஒரு எடத்தில வேலை இருக்கு. நல்ல காசு கிடைக்கும். நீ செய்யறியா?'ன்னு கேட்டார். 'என்ன வேலை?'ன்னு கேட்டேன். அவரு சொன்ன வேலையைக் கேட்டதும் எனக்குப் பயமாய் போச்சு. 'நாளைக்கு வர்றேன்'னு சொல்லிட்டு ஓடிவந்துட்டேன்!" என்றான்.

உடனே மற்றவர்களும், "என்ன வேலைடா? சொல்லு" என்றார்கள். "சிட்டிக்கு வெளியே இருந்து, சாராயம் கொண்டு வரணுமாம். ஒரு ட்ரிப்புக்கு இவ்வளவுன்னு காசு. வேலை முடிஞ்சவுடனே பணம்..."

பசியோடு சாப்பிட்டுக் கொண்டிருந்தவன், பாதியில் நிறுத்திவிட்டான். மற்றவர்கள் மௌனம் காத்தனர். "ஒரு ட்ரிப்புக்கு எவ்வளவு தருவாங்க?" இது நம்முடைய இளைஞனின் கேள்வி. உடனே, முதல் இளைஞன், "வேணாம்டா, போலீஸ் பிடிச்சிட்டா, பெரிய அவமானமா போயிடும்..."

"அவமானமா? இப்ப மட்டும் ரொம்பமானம், மரியாதையோட வாழ்ந்துகிட்டிருக்கிறதா நெனப்பா? வீட்டுல, தெருவுல, நாம நடமாடற இடங்கள்ல எல்லாத்துலையுமே நம்மள அவமானப் பூச்சிகளாத்தான் பார்க்கறாங்க."

### வேலை கிடைத்தது

முடிவில் அந்த நால்வர் அணியின் செயற்குழுவில் பலத்த விவாதங்களுக்குப் பிறகு, இப்போது கிடைத்திருக்கிற அந்த வேலையை ஏற்றுக் கொள்வதென்ற ஏகமனதாகத் தீர்மானம் இயற்றப் பட்டது. ஆம், அவர்களுக்கு வேலை கிடைத்து விட்டது! வருமானமும் வரத் தொடங்கியது.

இடையில் அந்த இளைஞன் தன் வீட்டிற்கும் வந்து போவது உண்டு. இப்போதெல்லாம் அவன் வெறுங்கையுடன் வீட்டிற்கு வருவதில்லை. வீட்டிலிருப்பவர்களுக்கு ஏதாவது வாங்கிக் கொண்டுதான் வருவான்.

குடும்பத்தில் இருப்பவர்கள் 'என்ன வேலை..?' என்று கேட்டால், ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி, 'டெம்ப்ரரியாக வேலை செய்கிறேன். .: பாக்டரி ஊரை விட்டு தள்ளியிருப்பதால், பக்கத்திலேயே ரூம் எடுத்து, நண்பர்களோடு தங்கியிருக்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் போவான்.

தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்தது. சாராயத்திற்கு வாடிக்கையாளர்களின் கிராக்கி அதிகம் இருந்தது. அதேபோல் போலீஸ் கெடுபிடியும் இருந்தது. அதிகாலை நேரத்தில் சாக்கு மூட்டையில் சாராயப் பந்துகளை ஏற்றிக் கொண்டு, மினி வேனில் வந்து கொண்டி

பரீட்சை எழுதினார்களே, எதற்கு? சாராயம் எப்படி கடத்துவது என்கிற தந்திரத்தைத் தெரிந்து கொள்ளவா? இல்லை. சமூகத்தில் ஒரு கௌரவமான மனிதனாக வாழ வேண்டும் என்ற வேட்கையினால்தான்".

இதை உணர்ந்த அந்த இன்ஸ்பெக்டர், தனக்கு ஒரு நல்ல கேஸ் கிடைத்தது என்று சந்தோஷப்படுவதற்குப் பதிலாக அந்த இளைஞர்களின் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்பட்டார்.

### ஆறுதல்

இந்தப் புதுமுக குற்றவாளிகளை ஜெயிலுக்கு அனுப்பி ஏற்கெனவே ஜெயிலில் இருக்கும் பழைய குற்றவாளிகளோடு பழகவிட்டால், வெளியில் வரும்போது, அவர்கள் முழுநேரக் குற்றவாளிகளாக அல்லவா மாறிவிடுவார்கள்? இந்தச் சமூகத்திற்குப் புதிய குற்றவாளிகளை உருவாக்கிக் கொடுக்கிற பாவத்தை நாம் செய்ய வேண்டாம் என்று அவர் நினைத்தார்.

அந்த இளைஞர்களை அழைத்து, "நீங்க ஜெயிலுக்கு போனீங்கன்னா உங்க வாழ்க்கையே நாசமாயிரும். நீங்க திருந்தி வாழணும்னு ஆசைப்படறேன். நீங்க என்ன சொல்றீங்க?" என்று கேட்டார்.

"ஸார், இப்படி ஒரு ஆறுதலான வார்த்தையை, எங்க எதிர்காலத்தைப் பத்தி கவலைப்படற ஒரு மனசை, சமீப காலத்துல நாங்க சந்திக்கவே இல்லை ஸார், காக்கிச் சட்டைக்குள்ளேயும் கடவுள் குடியிருப்பாருங்கிறதை நாங்க இன்னைக்குத்தான் ஸார் தெரிஞ்சுக்கிட்டோம்.

சத்தியமா சொல்லிறோம் ஸார், நாங்க திருந்துவதற்கு ரெடி. ஆனா, அதுக்கப்புறம் நாங்க வாழணுமே ஸார்!"

அவர்கள் மனதில் நம்பிக்கை விதைத்த அந்த இன்ஸ்பெக்டர், அதைச் செயல்படுத்தவும் செய்தார். தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, வெவ்வேறு இடங்களில் அந்த இளைஞர்களுக்கு வேலையும் வாங்கிக் கொடுத்தார்.

இன்று அந்த இளைஞர்கள் உழைக்கும் வர்க்கத்தின் ஒரு பகுதியாகிவிட்டனர். அவர்கள் மாஜி குற்றவாளிகள் அல்ல; மனம் திருந்திய மனிதர்கள்! அந்தமனித மனங்களை இனம் கண்டு, புலனாய்வு செய்து, அவர்களின் இதய ரணங்களுக்கு மருந்திட்ட அந்த மனிதநேய மருத்துவரின் நினைவோடும், இனி எதிர்காலத்தில் தவறுகளின் நிழல்கள் தங்கள்மீது படிந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் அந்த இளைஞர்கள்.

இன்னும் எத்தனையோ இளம் இதயங்கள், சரியான முறையில் இனம்கண்டு கொள்ளப்படாமல், புறக்கணிப்புத் தீயில் பொசுங்கிக் கொண்டிருக்கின்றன.

அவர்கள் தண்டனைக்குரியவர்கள் அல்லர்; அவர்கள் புகலிடம் தேடிப் பொல்லாதவர்களின் கையில் சிக்குவதற்கு முன்னால், தடுத்து நிறுத்தி திருத்த வேண்டியது நம் கடமை. நமது சமுதாயத்தின் கடமை.

(அனுபவங்கள் தொடரும்)

நிஜ தரிசனம்

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாலும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்–1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.



# வீரன் தான் பிரீன்

15

தமிழில் ப.ராமஸ்வாமி

**ஹோ**கன் இருந்த வண்டி மிக நீளமானது. அதில் பன்னிரண்டு தனி அறைகள் இருந்தன. அந்த அறைகளுக்கு வெளியே எல்லாவற்றிற்கும் பொதுவான பாதையிருந்தது. கால்ட்டீ ஆசாமிகள் அந்தப் பாதையிலே நின்று கொண்டிருந்தனர். ஸீன் ஹோகன் கைவிலங்கிடப்பட்டு எஞ்சின் இருந்த திசையைப் பார்த்து உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அவனுக்கு இரு பக்கத்திலும் ஒரு சார்ஜென்டும், ஒரு பொலிஸ்காரனும் இருந்தனர். அவனுக்கு முன்னால் வேறு இரண்டு பொலிஸ்காரர்கள் அமர்ந்திருந்தனர். நான்கு காப்பாளர்களும் துப்பாக்கி, கத்தி முதலிய ஆயுதங்களையும் தயாராய் வைத்துக் கொண்டிருந்தனர்.

அன்றைய போராட்டத்தை ஸீன் டிரீஸியே தலைமை வகித்து நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவன் உத்தரவு கொடுத்துவிட்டான். ரயில் வந்து நின்று ஐந்த விநாடிகளுக்குள் அவர்கள் அதில் ஏறி நீண்ட பாதையின் வழியாக ஹோகனிருந்த அறைக்குள் பாய்ந்தனர். பாயும்பொழுதே அவர்கள் "தூக்குங்கள் கைகளை!" என்று கூவிக்கொண்டே சென்றனர்.

அவர்கள் உள்ளே போவதற்கு ஒரு நிமிஷத்திற்கு முன்புதான் சார்ஜெண்டு ஹோகனைப் பார்த்து, "அடே! உன்னுடைய ஸீன் டிரீஸியும், தான் பிரீனும் இப்பொழுது எங்கடா போனார்கள்?" என்று கேட்டுக் கேலிசெய்தானாம். அடுத்த நிமிஷத்தில், அவன் விளையாட்டாகக் கேட்ட கேள்விக்கு உண்மையாகவே பதில் கூற, நீட்டிய றிவோல்வர்களுடன் தான் பிரீனும், டிரீஸியும் அங்கு புகுந்து விட்டனர். ஹோகன் அநாதையில்லை என்பதை நிரூபித்து விட்டார்கள்.

பொலிசார் புதிய ஆசாமிகளைக் கண்டவுடன் அவர்கள் வந்த காரியத்தைத் தெரிந்துகொண்டனர். என்ரைட் என்ற கொன்ஸ்டபிள், தன் றிவோல்வரை எடுத்து ஹோகனுடைய நெற்றிக்கு நேராக நீட்டிவிட்டான்! யாராவது கைதியை விடுவிக்க வந்தால் முதலில் கைதியைச் சுட்டுக்கொல்லும்படியாகப் பொலிஸ் மேலதிகாரிகள் அவர்களுக்குச் சொல்லி விட்டிருந்தார்கள்.

கணகொட்டு முன்னால் அப்பாதகன் ஹோகனைச் சுட்டிருப்பான். றிவோல்வரின் விசையை இழுக்கப்போகும் பொழுது, அவனுடைய நெஞ்சில் படீரென்று குண்டு பாய்ந்து விட்டது! அவன் சுருண்டு விழுந்து இறந்துபோனான். அந்தக் குண்டு புரட்சிக் காரருடைய முதற் குண்டு.

வண்டியிலிருந்த மற்ற பிரயாணிகள் புரட்சி வாலிபர்களுடைய நோக்கத்தைத் தெரிந்துகொண்டார்கள். அங்கிருந்த பட்டாளத்தான் ஒருவன்கூட, பிரிட்டிஷ் காக்கி உடையை அணிந்துகொண்டே, "குடியரசு நீடூழி வாழ்க!" என்று வாழ்த்துக் கூறி ஆர்ப்பரித்தான். அவன் சொந்த வேலையின் பொருட்டு எங்கோ சென்று கொண்டிருந்தவன்.

முதல் குண்டில் ஒரு பொலிஸ்காரன் தீர்ந்துபோனதைக் கண்டு மற்றவர்கள் ஹோகன் மேல் கைவைக்க அஞ்சினர். அந்தக் குண்டோசை கேட்டவுடன், மற்றொரு பொலிஸ்காரன் யன்னல் வழியாகக் குதித்து, ஊளையிட்டுக் கொண்டே மாயமாய் மறைந்து போனான். மறுநாள் காலையில்தான் அவன் எமிலி பொலிஸ் நிலையத்திற்குப் போய் முதல் நாள் ஸ்டேஷனில் நடந்ததைக் கூறினானாம்!

கொன்ஸ்டபிள் என்ரைட் இறந்துபோனான். மற்றொருவன் உயிருடன் மறைந்தொழிந்தான். சார்ஜெண்டு வாலஸ் என்பவனும், கொன்ஸ்டபிள் றெய்லியுந்தான் பாக்கியிருந்தார்கள். அவர்கள் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் சுட ஆரம்பித்தார்கள். புரட்சிக்காரர்களும் சுட்டார்கள்.

அவர்கள் சுடுவதில் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியிருந்தது. ஏனெனில் அவர்களுடைய குண்டுகள் தங்கள் ஆட்களையே கொன்று விடக்கூடும். அல்லது ஹோகன் மேல் பட்டுவிடக் கூடும். இடையில் கொன்ஸ்டபிள் றெய்லி கீழே தரையில் சாய்ந்துவிட்டான்.

இருக்கும் நிலைமையைக் கருதி, அவன் இறந்தவனைப் போல் பாசாங்கு செய்துகொண்டு தரையோடு தரையாய்க் கிடந்தான். தலையை மேலே தூக்கியிருந்தால் அவனும் விண்ணை எட்டிப்பார்த் திருப்பான்.

சார்ஜெண்டு வாலஸ் கடைசிவரை தயங்காது தனியே நின்று போராடி வந்தான். அவன் அடைக்கலம் புகுந்தால் உயிர்ப்பிச்சை கொடுப்பதாய்ப் புரட்சிக்காரர்கள் பலமுறை கூறிவிட்டார்கள். அவன் கேட்பதாயில்லை.

கூட இருந்தவர்கள் தன்னைக் காட்டிக் கொடுத்து விட்டுப்போன பின்பும் அவன் கலங்காது நின்று போராடினான். சுற்றிலும் பெருங் குழப்பம். இடமோ மிகச் சிறியது. வண்டியில் மக்கள் கூட்டம் அதிகம். அவ்வளவுக்கு மிடையே புரட்சிக்காரர்கள் ஹோகனைக் கதவு வழியாக வெளியே தள்ளிக் கொண்டு போவதற்கு ஏற்பாடுகளைச் செய்தனர்.

கடைசியில் ஹோகன் பந்தோபஸ்தாய் வெளியேற்றப்பட்டான். புரட்சிக்காரர்களும் வண்டியை விட்டு வெளியே குதித்தார்கள். வீரமிக்க சார்ஜெண்டு அவர்களை விடுவதாயில்லை. அவனும் வெளியே குதித்து அவர்களைப் பார்த்துச் சுட்டுக்கொண்டேயிருந்தான்.

தான் பிரீன் திரும்பிப் பார்த்தான். அவன் உடம்பில் ஒரு குண்டு பாய்ந்து இரத்தப் பெருக்கெடுத்தது. ஆனால் குண்டு எந்த இடத்தில் பாய்ந்தது என்பது அந்த ஆத்திரத்திலும் அவசரத்திலும் அவனுக்குப் புலனாகவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகுதான் சுவாசப்பையில் காயம் பட்டிருப்பதை உணர்ந்தான்.

டிரீஸி, இமன் ஒபிரியன், ஸ்கான்லன் ஆகிய மூவருக்கும் காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவர்களிடமும் தான் பிரீனிடமுமே றிவோல்வர்கள் இருந்தன. ஆயுதங்கள் வைத்திருந்த நால்வருடைய உடம்புகளிலும் இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. தான் பிரீனைத் தவிர மற்ற மூன்று பேர்களுடைய துப்பாக்கிகளும் சண்டையில் எங்கோ விழுந்து விட்டன. தான்பிரீன் ஒருவனே ஆயுதந் தாங்கிச் சண்டை செய்யக்கூடிய நிலைமையில் இருந்தான். அவனுக்கு எதிராக சார்ஜெண்டு வாலஸ் போராடிக் கொண்டிருந்தான். அத்துடன் இறந்து போனதாய் பாவனை செய்து கொண்டிருந்த கொன்ஸ்டபிள் றெய்லியும் மெல்ல எழுந்து வந்து தான்பிரீனைப் பார்த்து ஓயாமல் சுட்டுக் கொண்டிருந்தான்.

தான் பிரீனுடைய வலது கையில் மீண்டும் ஒரு குண்டு பாய்ந்தது. அவனுடைய றிவோல்வரும் கீழே விழுந்துவிட்டது. அவன் குனிந்து அதை எடுத்துக்கொண்டு, மீண்டும் இரண்டு எதிரிகளையும் பார்த்து சுடலானான். வலது கை பயனற்றுப்போனதால், இப்பொழுது இடது கையால் சுட்டு வந்தான். இத்தகைய சந்தர்ப்பம் ஏற்படுமென்றே அவன் முற்காலத்திலேயே இரண்டு கையாலும் குறிதவறாது சுடப்பழகியிருந்தான். அந்தப் பழக்கம் இந்த ஆபத்தில் மிக உதவியாக இருந்தது.

எதிரிகளுடைய குண்டுகளுக்கு இடம் கொடாமல் தப்புவதோடு, அவர்களையும் சுட வேண்டியிருந்தது. இடையில் வேறு எதிரிகள் எங்கிருந்தாவது வருவதற்குள் போராட்டத்தை அவசரமாகவும் முடிக்க வேண்டியிருந்தது. கொன்ஸ்டபிள் கை பதறாமலிருந்தால் தான் பிரீனை ஒரு கணத்தில் சுட்டுக் கொன்றிருக்க முடியும். தான் பிரீன் விரைவாக றிவோல்வரை அவன் நெஞ்சுக்கு நேராகப் பிடித்தான். தனக்கு சாவுமணி அடித்து விட்டதென்று அஞ்சி அவன் அவ்விடத்திலிருந்து குதிரைபோல் துள்ளி ஓடிவிட்டான். சார்ஜெண்டுக்கு பலமான காயங்கள் ஏற்பட்டன. அவனும் தரைமேல் வீழ்ந்தான். தான் பிரீன் றெய்லியை விடாது சுடவேண்டுமென்று பார்த்தான். ஆனால் அவனுடைய கண்களில் இரத்தம் வழிந்து பார்வை தெரியாமல் போய்விட்டது. இதற்குள் நண்பர்கள் ஹோகனை ஸ்டேஷனுக்கு வெளியே சௌகரியமான ஓரிடத்திலே கொண்டு சேர்த்தனர்.

இறந்த கொன்ஸ்டபிளையும் இறந்து கொண்டிருந்த சார்ஜெண்டையும் தவிர அங்கு வேறு எதிரிகள் இல்லை. ஆதலால் தான் பிரீன் விரைவாகச் சென்று ஸ்டேசன் வாயிலை அடைந்தான். மக்கள் திகைப்படைந்து ரயிலிலிருந்து கீழே குதித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். எஞ்சின் ஓட்டிக்குக்கூட சண்டை நடந்தது தெரியாது. எங்கோ குண்டோசை கேட்பதாக அவன் எண்ணிக்கொண்டான்.

அன்றிரவு இறந்துபோன என்ரைட்டின் உடலும், காயம்பட்ட சார்ஜெண்டும் ரயிலில் கில்மல்லக் என்ற ஊருக்குக் கொண்டுபோகப்பட்டதில் சார்ஜெண்டும் மறுநாள் மாலை இறந்துபோனான். பின்னால் மரண விசாரணையில் றெய்லி வாக்குமூலம் கொடுத்தான். அவன் வாக்குமூலத்தை ஒருவரும் நம்பவில்லை. அந்த மரண விசாரணையின் முக்கிய அம்சம் என்னவெனில், ஜூரர்கள் கொலை என்று தீர்ப்புக் கூற மறந்துவிட்டதேயாகும். கௌரவமான மனிதர்களை அரசாங்கம் கைது செய்ததும், மக்களுக்கு ஆத்திரமூட்டியதும், தக்க பந்தோபஸ்தில்லாமல் பொலிஸாரை அனுப்பிவைத்ததும் குற்றமென்று அவர்கள் கூறினார்கள்!

அத்துடன் புரட்சிக்காரர்களுக்கு இறந்துபோன பொலிஸாரிடம் பகைமை இல்லை என்பதையும், பொலிஸார் தங்கள் கடமையை மறந்து துப்பறிந்து கூறும் உளவாளிகளாக நடந்தும், பட்டாளத்தின் வேலைகளைத் தாங்களே செய்தும் வந்ததால் இம்மாதிரிச் சண்டைகள் நடந்தன என்பதையும் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்!

நாக்லாங் சம்பவத்தைப் பற்றிப் பலர் பலவாறு கூறி வந்தனர். பாதிரிமார்களும், பத்திரிகைக்காரர்களும் வழக்கம் போல் அதைக் கண்டித்து ஓலமிட்டனர். ஆனால் இதே ஆசாமிகள்தான் பின்னால் 'வீரர்கள் வாங்கித் தந்த சுயராஜ்யம்' என்று அவர்களைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

மற்ற விஷயங்களைக் கவனிப்பதற்கு முன்னால் ஸீன் ஹோகன் பீலர்கள் கையில் அடைந்த துன் பங்களைச் சிறிது பார்ப்போம்.

பல்லாக் நகரில் நடனக் கச்சேரி முடிந்ததும், அதிகாலையில் ஸீன் ஹோகன் ஆன்பில்டில் இருந்த மீகர் குடும்பத்தார் வசித்து வந்த வீட்டுக்குச் சென்றான். அவனுடன் பிரிஜிட் என்னும் பெண்ணும் துணையாகச் சென்றாள். அவள் மீகருடைய உறவினள். அவளுடைய சொந்த வீட்டில்தான் டிரீஸி, தான் பிரீன் முதலியோர் அன்றிரவு படுத்திருந்தனர்.

ஹோகன் காலையுணவு சாப்பிட உட்கார்ந்தான். உணவை மறந்து அப்படியே கண்ணயர்ந்து மேசையின் மேல் சாய்ந்துவிட்டான். ஐந்து நாள் இரவு தொடர்ந்து தூக்கம் விழித்த களைப்பு அகனைக் கீழே உருட்டிவிட்டது. பின்னர் ஒருவாறு மீண்டும் கண்ணை விழித்துக் கொஞ்சம் உணவு அருந்திவிட்டு அவன் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்து உறங்க ஆரம்பித்தான். அவனுடைய றிவோல்வரும் இடுப்பில் கட்டும், கச்சை வாரும், பக்கத்திலே கழற்றி வைக்கப்பட்டிருந்தன. மீகரும் அவருடைய இரண்டு பெண்களும் பால் கறப்பதற்காகத் தொழுவிற்குச் சென்றனர்.

"பொலிஸார் வீதியில் வருகிறார்கள். வருகிறார்கள்!" என்று திடீரென்று சத்தம் கேட்டது ஹோகன் திடுக்கிட்டெழுந்து கச்சையை இறுக்கிக்கட்டி றிவோல்வரை எடுத்துக்கொண்டு வாயிற்படிக்குச் சென்றான்.

பொலிஸார் வெகுதூரத்தில் வரும் பொழுதே யாரோ ஓடிவந்து தகவல் கொடுத்துவிட்டதால், ஹோகன் தப்பி ஓடுவதற்குப் போதுமான நேரம் இருந்தது. அவன் வீட்டிலிருந்தே வெளியில் எட்டிப் பார்த்தான். பொலிஸார் தென்படவில்லை.

(பயணம் ...தொடரும்)

---

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

40

# அரங்கம் அந்தரங்கம்

கவியரசு கண்ணதாசன்



**'கொலை'** நடந்து பல நாட்களுக்குப் பிறகு வழக்கு வந்திருப்பதால் ஜாமீனில் விடுவது கஷ்டமாக இராது' என்ற விவரத்தை அவர்கள் நாராயண சாமிக்குத் தெரிவித்தார்கள்.

ஒரு மகாராணி போல் வாழக்கை நடத்திய கற்பகம் அன்றிரவு போலீஸ் லாக்-அப்பில் இருக்க வேண்டி நேர்ந்தது.

அதே இரவில் மற்ற வீடுகள் எப்படி இருந்தன?

வக்கீல் வரதராஜன் நீண்ட நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் வனஜாட்சியைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்.

காரணம், வனஜாட்சி மனது வைத்தால்; வரதராஜனையும் ஒரு குற்றவாளியாக்கி விடமுடியும்.

தலைவர் சந்திரசூரியன், 'என்னையும் எங்கே சாட்சியாக்கி விடுவாரோ' என்று தலைவலிக்கப் படுத்திருந்தார்.

தலைவர் தங்கசாமி, 'இந்தத் தொடர் கதையில் எங்கே தன் மைத்துனியின் பெயரும் இழுக்கப்படுமோ' என்று கலங்கிக் கொண்டிருந்தார்.

செய்தி கேள்விப்பட்ட கமலுக்கு காற்றடிப்பதுகூட 'பூட்ஸ்' சத்தம் போலக் கேட்டது.

முன்னாலே போன கார் விபத்துக்குள்ளான பிறகு பின்னாலே வரும் காரின் டிரைவருக்குக் கொஞ்ச நேரம் புத்தி வருவது போல எல்லோருக்குமே புத்தி வந்து கொண்டிருந்தது.

அதிகாலை ஏழு மணி இருக்கும்.

இரவில் எவ்வளவு நேரம் கண் விழித்தாலும், எத்தனை மணிக்குப் படுத்தாலும் காலை ஏழு மணிக்கெல்லாம் விழித்து விடுவது என்னுடைய பழக்கம். ஆனால் எட்டரை மணி வரையில் யாரையும் நான் சந்திப்பதில்லை.

அந்த நிலையிலும் ஏழு மணிக்கே நாராயணசாமி விடுவிடென்று என் அறைக்குள் நுழைந்தார்.

இரவெல்லாம் தூங்கவில்லை என்பதை அவர் முகம் காட்டிற்று.

மளமளவென்று விஷயங்களை என்னிடம் ஒப்புவித்தார்.

"நீங்கள்தான் எனக்கு ஏதாவது யோசனை சொல்ல வேண்டும்!" என்றார்.

கலை விஷயத்தில் ஏதாவது யோசனை சொல்ல எனக்குத் தெரியுமே தவிர, கொலை விஷயத்தில் தெரியாது.

ஆனாலும் நான் அவருக்கு ஆறுதல் கூறினேன்.

"உள்துறை இலாகாவில் ஏதாவது சிபாரிசு செய்ய முடியுமா?" என்று கேட்டார்.

'இதற்கெல்லாம் சிபாரிசு செய்யப் போனால் விளைவு எப்படி இருக்குமோ?' என்று நான் அஞ்சினேன்.

ஜனநாயகத்தில் சிபாரிசு என்பது தவிர்க்க முடியாதது. "என்னுடைய அரசாங்கத்தில் சிபாரிசு இருக்க முடியாது", என்று யாராவது சொன்னால், அவர்களுடைய அரசாங்கம் நீண்ட நாள் இருக்க முடியாது.

ஓமந்தூரார் மந்திரி சபைக்கும், ராஜாஜி மந்திரி சபைக்கும் நேர்ந்த கதி அதுதான்.

நூற்றி ஐம்பது எம்.எல்.ஏ.க்களை நம்பி அரசாங்கம் அமைத்தவன், அவர்களைக் காப்பாற்றிக் கொண்டால்தான் அரசாங்கத்தைக் காப்பாற்ற முடியும்.

அவர்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால், அவர்களுடைய சிபாரிசுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்.

இல்லை, மொத்தமாக ஐம்பது பேர் போர்க்கொடி தூக்கி விட்டால், மந்திரியே மற்றவர்களிடம் சிபாரிசுக்குப் போக வேண்டியிருக்கும்.

எந்த இடத்துக்கும் சிபாரிசு செய்வதற்கு நான் தயங்குவது கிடையாது.

'ஊதுகிற சங்கை ஊதி வைப்போம்: நடந்தால் நடக்கட்டும்' என்று கருதுவது என் வழக்கம்.

ஆனால் இந்த விஷயத்தில் யாரிடம் சிபாரிசுக்குப் போவது?

எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

மேல் அதிகாரிகளிடம் சிபாரிசுக்குப் போவதைவிட, இந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஒரு நீதிபதியிடமே சிபாரிசுக்குப் போய் விட்டால்?

நல்ல யோசனைதான். ஆனால் எந்த நீதிபதியும் எங்களுடைய சொசைடியில் உறுப்பினராக இல்லையே!

இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் நீதிபதிகளில் சிலருக்கு மதுப்பழக்கம் இருந்தாலும், பிறர் முன்னிலையில் அவர்கள் அதை வைத்துக் கொள்வதில்லை.

தாங்கள் இருக்கும் ஆசனத்துக்குக் களங்கம் வந்துவிடக்கூடாது என்பதில் அவர்கள் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள்.

ஆகவே, நான் இதில் செய்யக் கூடியதெல்லாம், ஜாமீன் தாமதமாகாமல் உடனடியாகக் கிடைக்க வழி செய்வது ஒன்றே!

நான் உள்துறை இலாகாவில் உள்ள ஒருவருக்கு ஃபோன் செய்தேன்.

"கற்பகத்தை ஜாமீனில் விடுவதைத் தாங்கள் எதிர்க்கப்போவதில்லை!" என்று அவர்கள் சொன்னார்கள்.

என் வேலை சுலபமாகிவிட்டது.

வக்கீல் வரதராஜனுக்கு டெலிஃபோன் செய்தேன்.

என் குரலைக் கேட்டவுடனேயே, "என்ன கவிஞரே...!" என்று கத்தினார் அவர்.

"என்ன காலையிலேயும் சுதியா..?" என்று கேட்டேன்.

"சீச்சீ! ராத்திரிச் சுதியே இன்னும் இறங்கவில்லை.." என்றார்.

(அந்தரங்கம் வரும்)

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

~கண்ணதாசன்~

# இளவட்டங்கள்

கல்யாணப் பந்தல் போடுபவர்கள் மத்தியில் அப்பாவின் உபசார வார்த்தைகள் உயர்ந்து ஒலித்தன. பலகாரச் சூட்டில் ஈடுபட்டிருந்த உறவினர்கள் மத்தியில் அம்மா மகிழ்ச்சியுடன் செயற்பட்டுக் கொண்டிருந்தார்.

எத்தனை விவாக பேச்சுக்கள்தான் எனக்கு தடைப்பட்டுப் போச்சுது! எவ்வளவு காலம்தான் அம்மா அப்பாவுக்குப் பாரமாக இருந்திட்டன்.

எல்லாம் கேடுகெட்ட அந்த இளவட்டங்களாலைதான்! ஒரு மாதத்துக்கு முதல் அந்த கனடா பேச்சுக்கள்கூட 'இந்தா அந்தா'



திருமலை வீ.என்.சந்திரகாந்தி

என்று நடந்து முடிஞ்சமாதிரித்தான் எல்லாம் அமைஞ்சு வந்தது.

சாதி சமயம் விசாரித்து சாதகம் பார்த்து வீடுவளவு நகை நட்டு என்று எல்லா சொத்துக்களையும் உருக்கி வார்த்தது மாதிரி பத்து இலட்சம் சீதனம் பேசி முடிவே எடுத்துவிட்ட மாதிரித்தான் எல்லாம் இருந்தது.

கடைசியிலை ஒரு ஏரோகிராம் வந்து ஷெல் போல விழுந்தது.

மாப்பிள்ளைக்கு டொலரில்தான் சீதனம் வேணுமாம். சிலோன் காசு அங்கு பொலியாதாம். எனவே இந்தச் சம்மந்தம் சரிவராதாம்.

அம்மா எனக்காக என்ன மாதிரி கண்ணீர் வடிச்சா? ஆனால் எனக்கு சொட்டுக் கண்ணீர் வரவில்லை. எல்லாமே எதிர்பார்த்ததுதான்!

நான் பாடசாலைக்கு குமராக போன காலம் முதல் 'ஏ எல் தேர்ட் ஷை' க்காக 'ரியூசன்' என்று போய்த் திரிந்த காலம் வரை எத்தனை இளவட்டங்கள் என்னை சைட் அடிச்சு திரிஞ்சிருக்குது

அந்த இளவட்டங்களிலை என்னிடம் முறையாக வசை கேட்ட ஒருவனோ, அல்லது என்னை உண்மையாகவே விரும்பி ஒரு தலைப்பட்சமாக நேசிக்கின்ற ஒருவனோ எனக்கு விவாகம் நடந்து விடாதபடி தடுத்து நிறுத்திக்கொண்டிருக்கின்றான். இந்த உண்மை எனது பெற்றோருக்குத் தெரிய நியாயமில்லைத்தான்.

ஆனால் இந்த பேச்சுக்கால் மட்டும் எப்படியோ மணவறை அமைக்குமளவுக்கு வந்து விட்டதை என்னால் நம்பமுடியவில்லை.

**பா**தி அலங்காரம் முடியுமுன்னரே அழகு களைகட்டத் தொடங்குவதை நிலைக் கண்ணாடி உணர்த்த, புத்தம் புதிய துவாய் ஒன்றினால் தோள்களை மறைத்தபடி எழுந்து சென்று மண்டபத்தைப் பார்க்கின்றேன்.

மண்டபம் நிறைந்த உறவினர்கள், பட்டு பீதாம்பரத்தில் பெண்கள், சிறுவர்களின் துடியாட்டங்கள்.

ஆனால் மாப்பிள்ளை அழைப்புக்காக சென்றுவிட்ட தோழன், எந்நேரமும் தனியே திரும்பிவிடக்கூடும்!

அதுதான் எனக்கான நியதி.

வாழ்க்கையில் காண்பன அனைத்தையும் முதலில் உண்மையென்று நம்புகிறோம். ஆனால் நாம் விரும்புவது போல காரியங்கள் கைகூடுவதில்லை. இதனால் எதையுமே நம்ப மறுக்கிறோம்!

இதுவல்லவா சித்தாந்தம்?

எனக்கு தோழியாக இருந்து இன்று தாய் ஸ்தானத்துக்கு உயர்ந்துவிட்ட எனது நண்பி, மணமகன் வந்து விட்டமையை எனக்கு அறிவித்து என்னைச் சீண்டுகின்றாள்.

தவில் ஓசையும் நாதஸ்வர ஒலியும் இன்னிசைக்கின்றன. அதனைத் தொடர்ந்து மந்திர உச்சாடணம் ஒலிக்கக் கேட்கின்றேன்.

மனம் மட்டும் அமைதி அடையவில்லை. நான் ஏன் அஞ்ச வேண்டும் நான் செய்த தவறில்லையே.

தோழியின் வழிகாட்டலில் மணவறையை நோக்கி மெல்ல அடியெடுத்து வருகின்றேன். மணவாளன் அருகே நாணத்துடன் அமர்கின்றேன். பின் மெல்ல தலை நிமிர்த்துகின்றேன் மணவாளனைப் பார்ப்பதற்காக அல்ல!

யாராவது விஷமிகள் அங்கு இருந்து விடக்கூடாதே என்ற எனது பயப் பிராந்தி.

எனக்குத் தலை கிறு கிறுக்கின்றது. கனவா? நனவா? அல்லது கற்பனையா? அந்த இளவட்டங்களில் சிலரை இந்த கல்யாண மண்டபத்தில் நடமாடக் காண்கின்றேனா?

காளித்தாயே! இது மட்டும் பொய்யாக இருந்து விட வேண்டும். இன்று நீ என்னை மணமகள் ஸ்தானத்தில் ஆசீர்வதிக்க வேண்டும்.

புதிய கூறை அணிந்து, மாலை ஏந்தி மீண்டும் மணவறைநோக்கி வருகின்றேன்.

பதற்றம் என்.மேனியை படபடக்க வைக்கிறது. ஏக்கம் என் உள்ளத்தைத் தகிக்கின்றது

இவை பெண்மையின் வெளிப்பாடுகளல்ல. இளவட்டங்கள் குறித்த அச்சம் ஆயினும் விதி என்றும் அவர்கள் பக்கம் என்று இல்லையே!

என் கழுத்தினை தாலி தழுவுகின்றது. மணவறையிலிருந்து அகன்று தனியறை சென்று எனது கணவரை எதிர் கொள்கின்றேன்.

இந்த பால் முகத்தை எங்கோ பார்த்திருக்கின்றேன். எப்போதோ ஒரு நாள் எனது மனதில் இனிதாக சுவடு பதித்த முகம் அவரே விளக்கினார்.

"உங்கள் பாடசாலையில் நான் உங்களுக்கு 'சீனியர்'. உங்கள் இளமைக்கால நடத்தைகளை நான் நன்றாக புரிந்து கொண்டவன். எனது 'கம்பஸ்' படிப்பு முடிந்து உத்தியோகமும் கிடைத்த பின்னர்தான் விவாகம் என்ற நினைப்பு எனக்கு வந்தது. தமது படிப்பையும் கெடுத்து மற்றவர்களின் முன்னேற்றத்தையும் கெடுக்கும் இளவட்டங்களால் உங்கள் வாழ்க்கை பாதிப்புக் குள்ளானதை அறிந்து கொண்டு தான் உங்களை திருமணம் செய்யத் தீர்மானித்தேன்."

என்னால் எதனையுமே நம்ப முடியவில்லை. இந்த உலகமே என்னைத் தூக்கி வானில் வைத்தது போல இருந்தது. அங்கிருந்து பார்த்தபோது நான் கண்ணுற்றது.

ஆம் ஒரு ஆண் மகனை!

# மனபக்கம்

ஞாயிறு இரவு அரவிந்தன் கொழும்பிலிருந்து வீட்டுக்கு வந்தபோது மணி பதினொன்றைக் காட்டியது. அவன் அம்மா தெய்வானை அவனுக்காகக் காத்திருந்தாள்.

"அரவிந்த் சாப்பிடவாப்பா!" தாயின் அழைப்பு அவனை நெகிழ வைத்தது.

"நீ சாப்பிட்டியாம்மா?" கேட்டுக் கொண்டே தாயின் அருகே நெருங்கினான்.

இருவரும் சேர்ந்து, இரவு உணவை முடித்துக்கொண்டபின் அம்மா அவசரமாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

"அரவிந்த் ஆனந்தியை நீ எப்போ கலியாணம் பண்ணிக்கப்போறே? இப்பிடியொரு மருமக கெடைக்க நா ரொம்பக் குடுத்து வைக்கணும். அடக்கம், பணிவு, அடுத்தவங்களுக்காக உழைக்கிற குணம் கோடி கொடுத்தும் கெடையாதப்பா. அவ புறத்தி இல்ல; உன் மாமன் மகள். ஒரு அனாதப் பொண்ணுப்பா."

மளமளவென்று சொல்லிவிட்டு அவன் முகத்தை ஏறெடுத்தாள் அம்மா.

அரவிந்தின் இதயம் படபடத்தது. 'கரிக் கட்டை. ஆந்தைமுழி. நெற்றியில தோசையளவு பொட்டு-யாருக்கு வேணும்?' அவன் மனசு முணுமுணுத்த வார்த்தைகள் அவன் அம்மாவுக்குக் கேட்கவில்லை. பதிலேதும் சொல்லாமல் மௌனித்திருந்த அரவிந்தை அவள் அவசரப்படுத்தினாள்.



"அம்மா அசதியாருக்கு நாளைக்குப் பேசலாமே!" என்று சொல்லிவிட்டுப் படுக்கை அறைக்குள் நுழைந்தான்.

தெய்வானைக்கு இரவு நீண்டு கொண்டே போனது. அவள் இமைகள் இரண்டும் இணைய மறுத்தன.

அரவிந்தன் என்ன பதில் சொல்வான் என்பதில் அந்தத் தாயின் இதயம் தவியாய்த் தவித்தது.

ஆனந்தி, தெய்வானையின் தம்பி மகள். முடிவடையாத யுத்தத்துக்குப் பயந்து தஞ்சமடைந்த இடத்தில் தன் பெற்றோரைப் பலிகொடுத்தவள்.

ரூபராணி

ஆறுமாதங்களுக்கு மேல் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதைக்கு ஆளானவள். விடுதலை பெற்று அனாதையாய்-அகதியாய் வீடு தேடி வந்த ஆனந்திக்கு அடைக்கலம் கொடுத்தவள் தெய்வானை.

வீட்டு வேலைகளை எல்லாம் சிலுவையாய் சுமந்து தனக்குத் துணையாய் இருக்கும் ஆனந்திக்கு நல்லதோர் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று துடியாய்த் துடித்தாள்.

காலைப் பொழுது மலர்ந்ததைப் பக்கத்து வீட்டுப் பார்வதிப்பாட்டியின் சேவல் செட்டையடித்து ஒலிபரப்பியதும் தெய்வானை எழுந்து வெளியே வந்தாள்.

அங்கே கிணற்றடிப்பக்கம் கிடந்த கல்லில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் அரவிந்தனைக் கண்டு திடுக்கிட்டாள்.

அவனை நெருங்கிய தெய்வானை ஆதரவோடு அவன் தலையைத் தடவி "என்ன யோசனை?" என்று கேட்டுக் கொண்டே வேப்பங்கட்டை ஒன்றில் உட்கார்ந்தாள்.

"அம்மா கோபிச்சுக்காத. எனக்கு ஆனந்தியக் கட்டிக்க இஷ்டமில்ல." தெய்வானையின் முகம் அனிச்சம் பூவாய் வாடியது.

"என்ன காரணம் எண்டு சொல் அரவிந்த்?" வார்த்தைகள் தெய்வானையின் வாயிலிருந்து சோர்ந்து விழுந்தன.

"அம்மா. ஆனந்தி நல்லவள். குணசாலி ஏத்துக்கிறன். ஆனா ஆறு மாசத்துக்குமேல விசாரணைக் கைதியாய் இருந்தாளே... அவளிட கற்புக்கு என்ன உத்தரவாதம்...?"

அரவிந்த் எய்த அம்பு அவன் தாயின் இதயத்தைத் துளைத்தது. அவள் அதிர்ச்சியில் ஆடிப்போனாள். அவள் முகம் இறுகியது.

"அரவிந்த் நீ ஒரு பெரிய எழுத்தாளன். நீ எழுதிய 'பெண் விடுதலை' நாவலுக்கு விருது கிடைச்சி பாராட்டியப்போ, நீ நிர்க்கதியான பெண்களுக்கு வாழ்வளிக்க ஒவ்வொரு ஆணும் முன் வர வேணுமெண்டு வீறாப்பாய்ப் பேசினதெண்டாலும் நெனப்பிருக்கா?"

தெய்வானை அவனை வார்த்தைகளால் சாடினாள்.

அரவிந்தனின் சிரிப்பு அவளைத் திகைப்பிலாழ்த்தியது. அவன் சிரிப்புக்கு அர்த்தம் புரியாமல் தெய்வானை குழம்பினாள்.

"அம்மா, எழுதுவதுபோல் எந்த எழுத்தாளனும் நடப்பதில்லை. எழுத்துக்கும் நடத்தைக்கும் முடிச்சுப் போடாத. நிர்க்கதியான பெண்களுக்கு வாழ்வளிக்க வேணும். அதான் இலட்சியம் எண்டு எழுதினன்- பேசினன். உண்மைதான்.

அதெல்லாம் எனக்கில்லம்மா. மத்தவங்களுக்குத்தான். இதப்போய் பெரிசாத் தூக்கி அலட்டிக்காத, கூடிய சீக்கிரம் கௌரவமான குடும்பத்திலிருந்து ஓர் அழகான மருமகள உங்க முன்னால கொண்டு வந்து நிறுத்திறன்."

அரவிந்தன் சொல்லி விட்டு அதை அவனே ரசித்துச் சிரித்தான்.

நடத்தைக்கும் எழுத்துக்கும் சம்பந்தமேயில்லை என்ற உண்மை தெய்வானைக்குக் கசந்தது.

# இழப்பதற்கு எதுவுமில்லை...!

சூசையப்பர் தேவாலயத்தில் உட்புறத்தே அகதிகளின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. 'ஓயாத அலைகள்-3'ன் காரணமாக மன்னார் மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் ஏற்பட்ட அநர்த்தங்களால் பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் தஞ்சம் புகுந்தோர் பலர். சொத்து, சுகம், நிலபுலங்கள், சொந்தங்களை இழந்து அகதிகளாக ஓடும் நிலை தமிழர்களாகிய எமக்கு புதிதான ஒன்றல்லவே!

சென்ற மாதம்வரை மோகன் பிரபல கணித ஆசிரியன். ஆனால் இன்று அவனை பார்ப்பவர்கள் 'விசரனோ' என நினைக்குமளவிற்கு வாரப்படாத தலைமயிர், தாடி, மீசை, கண்கள் சிவந்து வீங்கிய நிலையில் வெறித்த பார்வையோடு, யாரோடும் கதைக்காமல்- கதைக்கவிரும்பாமல், நடமாடும் பிணமாக இருக்கின்றான்.



பக்கத்து வீட்டு மோகனா அக்கா,

"தம்பி மோகன் இந்தா பிடி! இந்தச் சோற்றை சாப்பிடு. எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கப் போகின்றாய்? எழும்பு எழும்பு!" என்றவாறே அவனை சுயநினைவுக்குக் கொண்டு வரமுயன்றாள். கண்களில் இருந்து கண்ணீர் அருவியாக ஓடியதே தவிர, அவனிடம் எந்த விதமான அசைவும் தென்படவில்லை. மோகனா அக்காவோ, மோகனின் கவலையில் அமிழ்ந்து போனாள்.

**வி**சுவலிங்கத்தார் அக்கிராமத்திலேயே பணவசதிவடைத்தவரும், புகழ்மிக்கவருமான ஒருவர். அவருக்கு ஆஸ்திக்கு மோகனும், ஆசைக்கு றூபிகாவுமே பிள்ளைகள். பிள்ளைகள் மேல் பெற்றோர் உயிரையே வைத்திருந்தார்கள். விஸ்வலிங்கத்தார் பிள்ளைகளுடன் எப்போதும் நல்நண்பனாக நடந்து கொள்வதால் மோகனும் றூபிகாவும் பெற்றோரில் மிகவும் பாசமும், மதிப்பும் வைத்திருந்தனர். மோகன் படிப்பில் மிகவும் சுட்டி. பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவுடன் மகனை யாழ் நகர் அனுப்பி கல்வியை தொடரவைத்தார். அந்த வேளையில்தான் மோகன் வித்தியாவை சந்தித்தான். கண்டவுடனே பிடித்துப் போய்விட்டது. கொஞ்சக் காலம் பின்தொடரல்கள், துரத்தல்கள்... தொடர்ந்து காதல்.

இருவீட்டாருக்கும் இவர்களின் காதல் தெரியவரவே வித்தியாவின் பெற்றோர் இதை எதிர்த்தனர். ஆனால் விஸ்வலிங்கத்தார், மகனின் விருப்பத்தையே பெரிதாகக் கொண்டு, தன் அந்தஸ்து, புகழை எல்லாம் விட்டுக்கொடுத்து சிறுசுகளின் சந்தோசமே பெரிது எனக் கருதியவராக, வித்தியாவின் பெற்றோரின் எதிர்ப்புக்களை எல்லாம் பொருட்படுத்தாது, மோகன்-வித்தியா திருமணத்தை ஜாம், ஜாம் என செய்து முடித்தார். திருமணத்தை தொடர்ந்து மோகனுக்கு ஆசிரியர் தொழிலும் கிடைத்தது. விஸ்வலிங்கத்தாரும், மனைவியும் வித்தியாவை சொந்த மகள் போலவே பாவித்தனர். மோகனின் தங்கை றூபிகாவோ "அண்ணி அண்ணி" என்று வித்தியாவின் சேலையைப்பிடித்துக் கொண்டு சுற்றுவாள். மொத்தத்தில் மிகவும் சந்தோசமாக வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. வித்தியா, தன் குடும்பத்தை, பெற்றோரை நினைத்து கவலைப்படக் கூட அவளுக்கு அவகாசம் கொடுக்காமல் சந்தோசமாக அவளை நடத்தி வந்தார்கள்.

இக்காலகட்டத்தில் மோகனின் வாரிசு வித்தியாவின் வயிற்றில் வளரத்தொடங்கியது. இதனை அறிந்து அந்தக் குடும்பமே ஆனந்தக் கூத்தாடியது. விஸ்வலிங்கத்தார் அயல் அட்டை எல்லாம் இனிப்பு வழங்கி சந்தோசப் பட்டார்.

ஒரு நாள் பாடசாலையில் வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கும் போதுதான் அந்தப் பயங்கரம் தொடங்கியது. தொடரான ஷெல் வீச்சுக்கள் மாணவர்களும், ஆசிரியர்களும் திக்குக் கொருவராக சிதறி ஓட்டம் பிடித்தனர். ஷெல் வீச்சுக்களின் போதே வானத்தில் பொம்பர் சுற்றி சுற்றி குண்டு மழை பெய்யத் தொடங்கியது. சனங்கள் ஓட்டமும் நடையுமாக மூட்டை முடிச்சுகளுடன் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடத் தொடங்கினர்.

சனங்களின் அழுக்குரல்களும், அவசரமும் சேர வீதியே அல்லோல கல்லோலப்பட்டது. தொடர்ந்து ஷெல் வீச்சால் சனங்கள் எங்கு போவது என்று திண்டாடிக் கொண்டிருக்கும் போது, மோகனின் கிராமத்து சனங்களும் ஓடி வரத்தொடங்கின. மோகன் வீட்டாரை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். இப்ப என்ன செய்யலாம் 'சரி எதற்கும் வீட்ட போய் அவையையும் கூட்டிக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்குப் போவம்' என்று நினைத்தவாறே மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்தான்.

"தம்பி உமக்கென்ன விசரே? இந்த நேரத்தில் பைக்கில போகப் போறீரோ? அந்த பக்கம் தான் பொம்பர்காரன் வீசுறான் போல கிடக்குது நீர் நில்லும் அவையை அப்பர் கூட்டி வருவார்" என்று பெரியவர் ஒருவர் குரல் கொடுத்தார். மோகனும் கால் கடுக்க வழிமேல் விழிவைத்து வீட்டாரின் வருகைக்காக காத்திருந்தான். ஷெல் வீச்சு உக்கிரம் அடைந்ததே ஒழிய வீட்டாரைக் காணவில்லை. திடீர் என மோகன் நின்றிருந்த பாடசாலை வளாகத்திற்கு அண்மையிலும்

எஸ்.ஜெசி-மன்னார்

ஷெல் ஒன்று விழ அதிலிருந்து மீண்டும் ஓட்டம் பிடித்தனர்.

அன்று காலை 10 மணிபோல தொடங்கிய ஷெல் வீச்சு, மாலை 4,5 மணியளவிலும் நின்ற பாடாய் இல்லை. சனத்தோடு சனமாக மோகனும் சூசையப்பர் தேவாலயத்தில் இருந்து கொண்டு வீட்டாரை எதிர் பார்த்திருந்தான்.

'அட இப்பதான் பக்கத்து வீட்டு மோகனா அக்காவையும் அயல் அட்டை சனமும் வருகினம். இவையிற்ற கேட்போம்' என்று எண்ணியவாறு எழுந்துவனை வந்த சனக்கூட்டமும், மோகனா அக்காவும் கட்டிப்பித்து ஒப்பாரி பாடத்தொடங்கினம்.

முதல் பொம்பரின் இலக்கிலே தாக்கப்பட்டதே மோகனின் வீடுதான். அந்த இடத்திலேயே மோகனின் தந்தை, தாய், றூபிகா, வித்தியா, மோகனின் எதிர்கால வாரிசு எல்லோரும் உருக்குலைந்து சின்னாபின்னமானார்கள்.

தொடரான ஷெல் வீச்சால என்ன செய்வது என்று தெரியாத நிலையில் மீண்டும் இந்த இடத்திற்கு வந்து. மரணச்சடங்கு செய்ய முடியுமோ என்ற கேள்விக்குறியோடு அயல் அட்டை சனங்கள் ஓரிருவர் மிகுந்த பயத்தோடு தங்கள் உயிரையும் கையில் பிடித்துக் கொண்டு. ஒரு கிடங்கு வெட்டி நால்வரையும் ஒன்றாகப் போட்டு மூடியதும், மூடாததும் பாதியாக ஓடிவந்து விட்டார்கள். இச்செய்தி சொல்லும்போதே மோகன் சுயநினைவில்லாமல் விழுந்தவன், இரண்டு நாளைக்குப் பின் நடைப்பிணமாக எழுந்தான் கடந்த ஒரு மாதமாக இதே நிலை.

சனத்தோடு சனமாக, மோகனும் அகதியாகவும் அனாதையாகவும் இக்கோயிலில் பெயரளவில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

மோகனா அக்காவும் மோகனுக்கு பக்கத்தில் அமர்ந்து அவனை நினைத்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார். மோகனா அக்காவின் மகன் வந்து "மாமா அழாம சாப்பிடுங்க மாமா!" என்று ஒரு பிடி சோற்றை பிசைந்து அவனுக்கு ஊட்ட முயன்றான்.

அதற்கிடையில் வானில் பொம்பர் பறந்தது. கோவிலின் அருகில் குண்டு மழை பொழியத் தொடங்க சனங்களின் கூக்குரலும், அழுகையும் வானைப்பிழந்தது கோவிலின் உட்புறத்தே இருந்தவர்கள் தமது மூட்டை முடிச்சுகளை காவிக் கொண்டு மீண்டும் முன்னேறி ஓடத் தொடங்கினர்.

"மாமா வாங்கோ ஓடுவம்!" என்ற சிறுவனைப்பார்த்து "என்னிடம் இந்த தேவையில்லாத உயிரைவிட வேறு எதுவுமில்லை. நீ ஓடு அம்மா அப்பாவோடு ஓடு போ!" என்று அவனைத் துரத்தி விட்டு வானத்தையே வெறித்தவண்ணமிருந்தான்.

இம்மண்ணில் பிறந்த பாவத்திற்காக மோகனைப் போல் பல்லாயிரம் பேர் நடைப்பிணமாகத் திரிகின்றார்கள்.

# இலக்கிய நயம்

# பழியொன்று சூழும்!

எழுதுவது

**முழுடில்யன்**

"கண்களைப் படைத்து பெண்களையும் படைத்தது கடவுள் செய்த பெரிய கொடுமை...!" ஆதித்தன் திடீரென்று நினைத்துக் கொண்டவன் போல் சற்று உரத்துச் சொன்னான்.

அருகிலிருந்த சேந்தன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"என்ன திடீரென்று கண்ணதாசன் ஞாபகம்?"

"பாடத் தெரிந்தவன் பாடிவிட்டுப் போயிருக்கிறான். இவர்கள் பண்ணுகின்ற சித்திரவதை தாங்க முடியவில்லை சேந்தா...!"

"கடிக்கின்ற கல்லையும் செரிக்கின்ற வயதுக்கு இது ஒரு கடிவாளம். உன் தெனா வட்டுத் திமிறல்களெல்லாம் ஒரு நொடியில் அடங்கி பிஸ்கட்டுக்காக வாலைக் குழைக்கிற நாய்க்குட்டி போல.. ஆசையும் பொங்கி மேன்மேல் மேவிய நெஞ்சம் வேறோர் விருப்புற... அன்பெனும் வெள்ளக்கால் பெருகும்... வயது... ஆதித்தா வயது....!"

"சிரிக்காதே சேந்தா... அவள் என்னை ஒரு பொருட்டாகவே நினைக்கிறாளில்லையே... அவள் நினைவோ எனக்கு என் குடலத்தனையும் முறுக்கிப் பிழிவதாக இருக்கிறது..."

"பார்த்துப் பேசு. அவளிடம் உன் நிலையைச் சொல்லிவிடு!"

"அதெல்லாம் சொல்லியாகி விட்டது. அவள் இரக்கமே இல்லாதவளாக இருக்கிறாள். நானிருக்கும் பக்கமே வருகிறாளில்லை. அவளுக்கு நான் ஒருவன் இந்தப் பூமியிலே இருக்கிறேன் என்ற நினைப்பே வருவதாகத் தெரியவில்லை. ஆனால் எனக்கு மட்டும் ஏன் அவள் நினைப்பு இவ்வளவு சித்திரவதைகளைத் தரவேண்டும்? உயிர் நடுங்குகிறது. அது என்னிலிருந்து வேறாகப் பிரிந்து நின்று என்னை வருத்துகிறது. அலட்சியத்தைத் தாங்க முடியாமல் அதை விட்டுவிடுவேனோ என்று பயமாக இருக்கிறது..."

"நான் பேசிப் பார்க்கட்டுமா?"


"நீ போய், என்ன பேசப் போகிறாய்... அவள் தனக்குப் படிப்பைத் தவிர வேறெந்த எண்ணமும் இல்லையென்கிறாள்... எனக்கு அந்தக் கள்ளியின் நியாயம் விளங்கவில்லை. என்னைப் பித்தனாக்கியிருப்பது அவள்; எனக்குள் மூச்சு முட்ட வந்து நிறைந்து கொண்டிருப்பது அவள்; என் நினைவுகளிலிருந்தும் என்னை அகற்றி விட்டு தான் வந்து குடியிருக்கிறாள். நான் இப்போது அந்தப் பழைய 'நானாக' இல்லாமற் போனது இவளால்தானே...! அப்படியிருக்க, இதிலெல்லாம் தனக்கு எந்த சம்பந்தமுமில்லை. தான் எந்தத் தப்பும் செய்யவில்லை என்று நடித்துத் திரிகிறவளிடம் பேசி என்ன புரியவைக்கப் போகிறாய்?"

"உன்னால் ஓர் உயிர் கலங்குவதைப் பார் என்று பக்குவமாய் எடுத்துச் சொல்கிறேன்...!"

"பிரயோசனமில்லை. அவள் உன்னைக் கண்டாலும் ஒரு காத தூரம் ஓடி விடுவாள்."

"பிறகு என்னதான் ஆதித்தா செய்வது? உன் நிலைமையைப் பார்க்கச் சகிக்கவில்லையே... நீ உடைந்து சிதிலமாகிப் போயிருப்பதை அவளுக்கு எப்படியாவது புரியவைக்க வேண்டுமே..."

"அவள் எனக்கென்று விசேடமான எந்தப் பார்வையையும் தரவில்லை. அவள் வழியில் எதிர்ப்படும் எல்லாப் பொருட்களையும் பார்த்தது போலவே என்னையும் பார்த்தாள்... என் மனம்தான் விபத்துக்குள்ளாகிவிட்டது. என்னை மறுபடியும் மனிதனாக்கி விடுகிற மருந்தும் அவள் விழிகளில்தான் இருக்கிறது. ஒரு பார்வையால், சிறு



புன்னகையால் அவள் நீருற்ற வேண்டும். இல்லையெனில் நான் மீண்டும் தழைப்பதற்கு வழியில்லை...."

"ம்...கெஞ்சிப் பேசிச் சரிக்கட்ட முடியாதென்கிறாய்... அப்படியென்றால் மிரட்டிப் பார்த்துவிட வேண்டியதுதான்..."

"டேய்.. என்ன சொல்கிறாய்...?"

"புதிதாக எதுவும் சொல்லவில்லை. நம் கடவுளர்களிலிருந்து நேற்றைய காதலர்கள் வரை கடைப்பிடித்த யுக்திதான். அவளுக்குப் பயங்காட்டிப் பார்த்துவிடலாம் வா...!"

"வேண்டாம். காதலையும் தடியால் அடித்துக் கனிய வைக்க முடியும் என்று நம்புகிறாயா?"

"தடியால் அடிக்கப் போவதில்லை... உன் நிலையை வார்த்தைகளால் சொல்லிக் கனியவைக்கப் போகிறேன்... போகிறேன் என்ன போகிறேன்... நீதான் சொல்லப் போகிறாய்..."

"என்ன?"

"பேனாவும் காகிதமும் எடு. உன் உள்ளத்திலிருப்பதை எழுது. அதை நான் அவளிடம் கொடுத்துவிடுகிறேன்!"

"நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று எழுதினால் அவள் பயந்து ஓடி வந்துவிடுவாள் என்கிறாயா?"

"முட்டாள், நான் சொல்வதுபோல் எழுது. 'காண்கிறவர்களெல்லாம் எனக்கு என்ன நோய், என்று கரிசனையோடு விசாரிக்கிறார்கள். நான் மெல்ல மெல்ல இந்த நோயினால் அழிந்து கொண்டிருப்பதாக எச்சரிக்கிறார்கள். அவர்களிடம் நீதான் என் மருந்து என்பதைச் சொல்லிவிட்டேன். ஒரு பார்வையோ புன்னகையோ புரிந்து நீதான் என்னைத் தேற்ற வேண்டும். நான் உயிர் பிழைத்திருப்பதற்கான வழியை நீதான் காட்ட வேண்டும். இல்லாவிடில் மிகுந்த கவலையோடுதான் உயிர் நீங்கப் போகிறேன். கவலை என்னை எண்ணி அல்ல. இதற்குக் காரணமான நீ ஊராரின் பழிச் சொல்லுக்கு ஆளாகப் போகிறாயே என்றுதான்...."

"நிறுத்து... நிறுத்து சேந்தா! அவளைத் துடிக்க வைப்பதில் எனக்கு என்ன இன்பம்?"

"இது நீ செய்யும் தப்பு இல்லை, ஆதித்தா! இது கடவுளர்கள் காட்டிய வழி, வேட்டுவ இளைஞனாக வள்ளிக் குறத்தியிடம் வந்த கந்தன், இதைத்தான் சொல்லியிருக்கிறான். 'ஊரார் உன்னைத்தான் பழிசொல்ல நேரும்' என்பது இறுதிக் கட்ட எச்சரிக்கை, அவ்வளவுதான்!... இன்று உன் நிலையும் அதுதான்... பாடலைக் கேள்."

**மொழியொன்று புகலா யாயின்**
**முறுவலும் புரியா யாயின்**
**விழியொன்று நோக்கா யாயின்**
**விரகமிக் குழல்வேன் உய்யும்**
**வழியொன்று காட்டா யாயின்**
**மனமுஞ்சற் றுருகா யாயின்**
**பழியொன்று நின்பாற் சூழும்**
**பாராமுகம் தவிர்தி என்றான்.**

-கந்தபுராணம்-

# சிந்தியா பதில்கள்

**கே : எவ்வளவோ முயற்சிகள் செய்தும் சிகரெட் பழக்கத்தை விடமுடியவில்லை. நிறுத்துவதற்கு ஏதாவது யோசனை சொல்ல முடியுமா சிந்தியா?**


சி.பவானி, காரைதீவு.

**ப :** *ம்! உங்கள் கேள்வியைப் பார்த்த பிறகு சங்கிலிப் புகைப்பாளரான (chainsmoker) என் நண்பர் ஒருவரிடம் இதுபற்றிக் கேட்டேன். "அது ஒன்றும் பெரிய கஷ்டமான விஷயம் இல்லை நான் எத்தனையோ முறை நிறுத்தியிருக்கிறேனே!" என்றார் அவர்.*

✉

**கே : எதிலும் முதல் இடத்தில் இருப்பவர்களுக்குத்தான் மரியாதை கிடைக்கிறது. மற்றவர்களை உலகம் கவனிப்பதில்லையே ஏன்?**

சு.பாவலன், அரியாலை.



வாலி

**ப :** *கண்ணதாசன் கவியரசராக இருந்தார். பிறகு வைரமுத்து கவிபேரரசு பட்டத்தைத் தனக்குப் போட்டுக் கொண்டார். ஆனால் இருவர் காலத்திலும் வாலி நின்று பிடித்தார். இளையராஜா முதலிடத்தில் இருந்த காலம் போய் இப்போது ரஹ்மான் முதலிடத்திலிருக்கிறார். இருவர் காலத்திலும் இரண்டாமிடத்தில் தேவாதான் அதிக சம்பாத்தியத்தைப் பார்த்திருக்கிறார். வாலி தேவா வகையறாக்களும் கவனத்திற்குரியவர்கள்தான். வாழ்க்கையில் வெற்றிகரமானவர்களும் கூட.*

✉

**கே : நல்ல சிறுகதை எப்படி இருக்க வேண்டும்?**

பெ.சிவனடி, இரத்தினபுரி.

**ப:** *எழுத்தாளர் சுஜாதா சொல்லியிருப்பதைத் தருகிறேன். "ஒரு வாரம் கழித்தோ ஒரு வருஷம் கழித்தோ ஞாபகம் இருந்து, அதை மூற்றவரிடம் மாற்றியோ மாற்றாமலோ சொல்ல வைப்பது நல்ல சிறு கதைகளில் உள்ள பொதுவான அம்சம். படித்த இரண்டு நிமிடத்தில் மறந்து போய்விட்டால் அது சிறுகதையல்ல. பஸ் டிக்கட்."*

✉

**கே : கல்யாணமானவர்கள் காதலிக்கலாமா?**

வி.பாமினி, வவுனியா.

**ப :** *காதலிக்கலாம் தத்தம் மனைவியை!*

✉

**கே : புத்தாயிரமாம் ஆண்டில் மாற வேண்டுமென்று சிந்தியா எதிர்பார்ப்பது?**

மா.தயான்பன், கிளிநொச்சி.

**ப:** *மனிதர் நோக, மனிதர் பார்க்கும் வாழ்க்கை.*

✉

**கே : பொய்யர்களோடு சகவாசம் வைத்துக் கொள்வதில்லை. பச்சோந்திகளாக ஏமாற்றிப் பிழைப்பவர்களை நம்புவதில்லை. பயத்தில் நியாயத்தைத்திரித்து உளறுபவர்களைப் பக்கத்திலும் அண்ட விடுவதில்லை என்பவற்றை என் புது வருடத்தீர்மானங்களாக எடுத்திருக்கிறேன் உங்கள் தீர்மானம் எப்படி?**

அன்ரனி டேவிட், திருமலை.

**ப :** *உங்களைப் போலவேதான். இனிப் பத்திரிகைகள் படிப்பதில்லை என்பதாக.*

✉

**கே : நாடு பொருளாதார இக்கட்டினுள் அமிழ்ந்திருக்கும்போது, போரை நிறுத்துவதற்கு ஒன்றுபட அரசியல் தலைவர்கள் முன்வருகிறார்களில்லையே?**

அகமட், கண்டி.

**ப :** *சிலர் என்னதான் ஆபத்து வந்தபோதும் தங்கள் குணத்தை மாற்றிக் கொள்ள நினைப்பதில்லை. தண்ணீரில் தந்தை மூழ்கிக் கொண்டிருந்தார். அவரைக் காப்பாற்றுவதற்காக மற்றவர்களைக் கூவி அழைத்தான் மகன். தண்ணீருக்குள்ளிருந்து ஒருமுறை மேலெழும்பிப் பார்த்த தகப்பன் கத்தினார். "டேய், அவர்கள் வந்து காப்பாற்றுவதாயிருந்தால் காப்பாற்றட்டும். ஆனால் பத்து ரூபாய்க்கு மேல் ஒப்புக் கொள்ளாதே!"*

✉



சோனாலி

**கே : வன்னியில் நடந்த மிலேனியம் விழாவில் விடுதலைப் புலிகளின் தலைவருக்கு 40 அடி உயர கட் அவுட் வைக்கப்பட்டதாமே?**

தாகீர் உசேன், புத்தளம்.

**ப :** *அவரைத் தேசியத் தலைவராக ஏற்றுக் கொண்டவர்கள் கட் அவுட் வைத்து கொண்டாடுவதைக் குறைசொல்ல முடியாது. அவரைத் தலைவராக ஒப்புக் கொள்ளாதவர்கள் தங்கள் பிழைப்புக்காக தூக்கிப் பிடித்து வருவதுதான் அசிங்கம்.*

✉

**கே : முதலில் "கவர்ச்சியாக நடிக்க மாட்டேன்!" என்று சொல்லும் நடிகைகள் பின் கவர்ச்சியாய் நடிப்பது ஏன் சிந்தியா?**

உமா கணேஸ், கொழும்பு 15.

**ப :** *நடிப்புக்கலை தெரிந்தவர்கள் என்பதை நிஜத்திலும் நிரூபிக்கிறார்கள் போலும்.*

✉

**கே : ஏமாற்றம் வரும்போது எப்படிச் சமாளிப்பீர்கள்?**

எம்.தேவராஜ், பதுளை.

**ப :** *ஒரு காகம் தவளையிடம் வந்து சொல்லியது, "சொர்க்கத்தில் பெரிய விருந்து நடக்கப் போகிறது!" என்று. தவளை தன் வாயைத்திறந்து "ஹை அங்ங்கேயா!" என்றது.*

*காகம் தொடர்ந்து "அங்கு மிகச் சிறந்த உணவும் குடிவகைகளும் உண்டு!" என்றது.*

*தவளை மேலும் "ஹை அங்ங்கேயா!" என்று கேட்டது.*

*"அங்கு தேவகன்னிகளும், களியாட்டங்களும் உண்டு" என்றது காகம்.*


*தவளை மேலும் தனது வாயை அகலமாகத் திறந்து, "ஹை அங்ங்கேயா!" என்று கூவியது.*

*காகம் சொன்னது "ஆனால் பெரிய வாயுடைய யாரையும் உள்ளே அனுமதிக்க மாட்டார்கள்!"*

*தவளை தனது வாயை இறுக்க மூடிக்கொண்டு முணுமுணுத்தது:*

*"பாவம் முதலை! ஏமாந்து விடும்!"* ◘

# சச்சினுக்கு ஆதரவாக அக்ரம்



அவுஸ்திரேலியா நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணியினர் டெஸ்ட் தொடரில் படு தோல்வியைத் தழுவியுள்ளனர்.

இப்போட்டித் தொடரின் முதல் டெஸ்டில் இந்திய அணியின் கப்டன் சச்சின் டெண்டுல்கருக்கு இரண்டு இன்னிங்ஸ்களிலும் கொடுக்கப்பட்ட அவுட் சர்ச்சைக்குரிய விதத்தில் அமைந்துள்ளன.

முதல் இன்னிங்ஸில் ஷேன் வோர்ன் பந்து வீச்சில் டெண்டுல்கர் 'கேட்ச்' பிடிக்கப்பட்டு அவுட்டானார். இது டெண்டுல்கரின் கால்காப்பில் பட்டு பிடிக்கப்பட்டது.

இரண்டாவது இன்னிங்ஸில் மக்ராத் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் அவுட்டானார். மக்ராத் வீசிய பந்து தரையில் பட்டு எழும்பி வந்ததால், அதன் தாக்குதலில் தப்பிக்க டெண்டுல்கர் குனிந்தார்.

அப்போது உயர்ந்து வந்த பந்து அவரது தோள்பட்டையை உரசிக் கொண்டு சென்றது.

இந்தத் தீர்ப்புக்கள் குறித்து டெண்டுல்கர் கருத்து எதனையும் கூற மறுத்து விட்டார்.

"உலகம் முழுவதும் கிரிக்கெட் இரசிகர்கள் பார்த்துக் கொண்டிருந்த சம்பவத்தை தனியாக விமர்சிக்க விரும்பவில்லை!" என்று கூறிவிட்டார் டெண்டுல்கர்.

ஆனால் டெண்டுல்கருக்கு ஆதரவாகவும் நடுவரின் தீர்ப்புக்கு எதிராகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில் பாகிஸ்தானின் கப்டன் வாஸிம் அக்ரமும் டெண்டுல்கருக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். சர்ச்சைக்குரிய அவுட் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அக்ரம் கூறியதாவது,

"இரண்டாவது இன்னிங்ஸில் மக்ராத் வீசிய பந்து டெண்டுல்கரின் தோள்பட்டையை உரசிக் கொண்டு சென்றது.

அதைத் தொலைக்காட்சி ஒளிபரப்பிலும் தெளிவாகப் பார்க்க முடிந்தது. இந்த அளவுக்குப் பந்து உயர்ந்து வந்ததால் நிச்சயமாக பந்து ஸ்டம்பில் படுவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே எல்.பி.டபிள்யூ கொடுத்தது தவறானது.

ஒருவேளை மைதானத்தில் இருந்த ஒருவரால் தீர்மானிக்க முடியாமல் போயிருந்தால், மூன்றாவது நடுவரது தீர்ப்புக்கு விட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் அவுட் கொடுத்தது தவறானது", என்று கூறியுள்ளார்.

Regd. as a News Paper at the G.P.O. (QD/40/NEWS/99)

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 30

ஆண்டவருடைய கருத்தையே தான் தெரிவிப்பதாக தமது சீடர்களிடம் இயேசுபிரான் கூறினார். "நான் உங்களுக்கு கூறியவற்றை நானாக உங்களுக்குக் கூறவில்லை; என்னுள்ளும் இருந்து கொண்டு செயலாற்றுபவர் என் தந்தையே! நான் தந்தையுள் இருக்கிறேன், தந்தை என்னுள்ளும் இருக்கிறார்!"

இவ்வாறு ஆண்டவர் வேறு தான் வேறு அல்ல என்பதை வெளிப்படுத்தினார். மேலும் பல உண்மைகளைத் தமது சீடர்களிடம் ஒளிவு மறைவின்றி இயேசுபிரான் கூறலானார்.

"நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களிடம் திரும்பி வருவேன். இன்னும் சிறிது காலத்தில் உலகம் என்னைக் காணாது. ஆனால் நீங்கள் என்னைக் காண்பீர்கள். ஏனெனில் நான் வாழ்கிறேன்; நீங்களும் வாழ்வீர்கள்.

நான் தந்தையுள்ளும் நீங்கள் என்னுள்ளும் நான் உங்களுள்ளும் இருப்பதை அந்நாளில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவர் என்மீது அன்பு கொண்டுள்ளார். என்மீது அன்பு கொள்பவர்மீது தந்தையும் அன்பு கொள்வார். நானும் அவர்மீது அன்பு கொண்டு அவருக்கு என்னை வெளிப்படுத்துவேன்."

இயேசு பெருமாளின் மற்றுமொரு சீடர் இயேசு பெருமானிடம்: "ஆண்டவரே! நீர் உம்மை உலகிற்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு வெளிப்படுத்தப் போவதாகச் சொல்கிறீரே! ஏன் அவ்வாறு கூற வேண்டும்?" என்று வினவினார்.

### அன்பு கொண்டவர்கள்

இவ்வினாவுக்கு விடையளித்த இயேசுபிரான், "என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம்.

என்மீது அன்பு கொண்டிராதவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பதில்லை. நீங்கள் கேட்கும் வார்த்தைகள் என்னுடையவை அல்ல; அவை என்னை அனுப்பிய தந்தையுடையவை. உங்களோடு இருக்கும் போதே இவற்றையெல்லாம் உங்களிடம் சொல்லி விட்டேன்.

என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார்; நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார். அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்.

நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதிபோன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்; மருள வேண்டாம். நான் போகிறேன், பின் உங்களிடம் திரும்பி வருவேன்' என்று நான் உங்களிடம் சொன்னதைக் கேட்டீர்களே! நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் நான் தந்தையிடம் செல்வது பற்றி மகிழ்ச்சி அடைவீர்கள். ஏனெனில் தந்தை என்னை விடப் பெரியவர். இவை நிகழும்போது நீங்கள் நம்புமாறு இப்போதே, இவை நிகழு முன்பே, சொல்லி விட்டேன்.

இனி நான் உங்களோடு மிகுதியாகப் பேசப் போவதில்லை; ஏனெனில் இவ்வுலகின் தலைவன் வந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு என் மேல் அதிகாரம் இல்லை. ஆனால் நான் தந்தைமீது அன்பு கொண்டுள்ளேன் என்பதையும் அவர் எனக்குக் கட்டளையிட்டபடி செயல்படுகிறேன் என்பதையும் உலகு தெரிந்து கொள்ள வேண்டும். எழுந்திருங்கள், இங்கிருந்துபோவோம்.

### திராட்சைச் செடி உவமை

"உண்மையான திராட்சைச் செடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர். என்னிடமுள்ள கனிகொடாத கொடிகள் அனைத்தையும் அவர் தறித்துவிடுவார். கனிதரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனி தருமாறு கழித்துவிடுவார். நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கெனவே தூய்மையாய் இருக்கிறீர்கள். நான் உங்களோடு இணைந்து இருப்பது

# இறுதிகால அறிவுரைகள்



போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். கொடி திராட்சைச் செடியோடு இணைந்து இருந்தாலன்றித் தானாக கனிதர இயலாது. அதுபோல நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிக் கனிதர இயலாது. நானே திராட்சைச் செடி; நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்.

என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது. என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார். அக்கொடிகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படும். நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால், நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும். நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது. என் தந்தை என்மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள்.

நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள். என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்.

**இராஜகுமாரன்**

### நண்பர்கள்

நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை. நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள். இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்ல மாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன்; ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்.

நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார். நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை.

### உலகம் வெறுக்கும்!

"உலகு உங்களை வெறுக்கிற தென்றால், அது உங்களை வெறுக்குமுன்னே என்னை வெறுத்தது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் உலகைச் சார்ந்தவர்களாக இருந்திருந்தால் தனக்குச் சொந்தமானவர்கள் என்னும் முறையில் உலகு உங்களிடம் அன்பு செலுத்தியிருக்கும். நான் உங்களை உலகிலிருந்து தேர்ந்தெடுத்துவிட்டேன்.

நீங்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. எனவே உலகு உங்களை வெறுக்கிறது. பணியாளர் தலைவரைவிடப் பெரியவர் அல்ல என்று நான் உங்களுக்குக் கூறியதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். என்னை அவர்கள் துன்புறுத்தினார்கள் என்றால் உங்களையும் துன்புறுத்துவார்கள். என் வார்த்தையைக் கடைப்படித்திருந்தால் தானே உங்கள் வார்த்தையையும் கடைப்பிடிப்பார்கள்!

என் பெயரின் பொருட்டு உங்களை இப்படியெல்லாம் நடத்துவார்கள். ஏனெனில் என்னை அனுப்பியவரை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

நான் வந்து அவர்களிடம் பேசியிராவிட்டால் அவர்களுக்குப் பாவம் இராது. ஆனால் இப்போதுஅவர்கள் தங்கள் பாவத்துக்குச் சாக்குப் போக்குச் சொல்ல வழியில்லை. என்னை வெறுப்போர் என் தந்தையையும் வெறுக்கின்றனர். வேறு யாரும் செய்திராத செயல்களை நான் அவர்களிடையே செய்யவில்லையென்றால் அவர்களுக்குப் பாவம் இராது. ஆனால் இப்போது அவர்கள் என்னையும் என் தந்தையையும் கண்டும் வெறுத்தார்கள்.

"காரணமின்றி என்னை வெறுத்தார்கள்' என்று அவர்களுடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது இவ்வாறு நிறைவேறிற்று. தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப் பப் போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் வரும்போது என்னைப்பற்றிச் சான்று பகர்வார். நீங்களும் சான்று பகர்வீர்கள். ஏனெனில் நீங்கள் தொடக்கமுதல் என்னோடு இருந்துவருகிறீர்கள்.

நீங்கள் நம்பிக்கை இழந்து விடாதிருக்க இவற்றையெல்லாம் உங்களிடம் சொன்னேன். உங்களைத் தொழுகைக் கூடத்திலிருந்து விலக்கி வைப்பார்கள். உங்களைக் கொல்லுவோர் கடவுளுக்குத் திருப்பணி செய்வதாக எண்ணும் காலமும் வருகிறது. தந்தையையும் என்னையும் அவர்கள் அறியாமல் இருப்பதால்தான் இவ்வாறு செய்வார்கள்.

இவை நிகழும் நேரம் வரும்போது நான் உங்களுக்கு இவை பற்றி முன்பே சொன்னதை நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள். இதற்காகவே இவற்றை உங்களிடம் கூறினேன்."

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 27 விடை: ☛ கயபா**

**பரிசு பெறுவோர்:**

1. **செல்வி ரட்ணகுமார் மதிவதனி,** பெய்லி வீதி, நாவலப்பிட்டி.
2. **சரஸ்வதி மயில்வாகனம்,** செல்வா நகர்,-2, ஆரையம்பதி.
3. **ல. அமலானந்தகுமார்,** மாதம்பிட்டி வீதி, கொழும்பு-15.
4. **சோ. கல்யாணி,** பிரதான வீதி, பொகவந்தலாவ.
5. **எம். ஜெயமணி,** புதுக்கமம், உயிலங்குளம்.

**திருமறை [பு.ஆ] 30** வினா :- இயேசுவின் சீடர்களை உலகு ஏன் வெறுக்கிறது என்று இயேசு கூறுகிறார்?

ஜனவரி 15 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:
**திருமறை-பு.ஆ.30-தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

# வணக்கம் வயாக்ரா!

இயக்குநர் மணிரத்னம், வெளியாக இருக்கும் தனது படத்தில் ஒரு வயாக்ரா நகைச்சுவைக் காட்சியை வைத்திருந்தால் எப்படியிருக்கும்? மணிரத்னம் பாணியில் உதயசூரியன் என்பவரின் கற்பனையில் உதித்த காட்சி.

(நடைபாதையோரத்தில் 'வயாக்ரா' மாத்திரைகளை விற்கிறார் ஒருவர். அவரிடம் ஒரு ஜொள்ளிஸ்ட், மாத்திரை வாங்க வருகிறார்)



ஜொள்ளிஸ்ட்: (கண்ணடித்தபடி) இருக்கா?

கடைக்காரர்: இருக்கவே இருக்கு!

ஜொள்: எது?.... எப்படி?

கடைக்: அதேதான்!... அப்படியேதான்!

(அப்போது வேறு சிலர் வர.. கடைக்காரர் அவர்களுக்குத் தேவையான மாத்திரைகளைத் தர கடுப்பாகிறார் ஜொள்ளிஸ்ட்!)

ஜொள்: (எரிச்சலாக) எவ்வளவு நேரம் ஆகுது?

கடைக்: (கிறக்கமாக) ம்ம்மா!-நெறய்ய நேரம்!

ஜொள்: (லேட்டாகப் புரிந்து கொண்டு) அடச்சே! மாத்திரை தர்றதுக்கு எவ்வளோ நேரம் ஆகும்னு கேட்டேன்!

கடைக்: சரியில்லே!... உங்க கேள்வி சரியில்லே!

ஜொள்: சேல்ஸ் எப்படி?

கடைக்: மோகம்!... அமோகம்!

ஜொள்: கஷ்டமர்கள் யாரு?

கடைக்: (நக்கலாகச் சிரித்தபடி) கஷ்டப்படறவங்கதான்!

ஜொள்: மாத்திரை என்ன கலர்?

கடைக்: எந்த நிறமானால் என்ன பயம்? எல்லாம் இன்ப மயம்!

ஜொள்: மாத்திரை, முன்னாலயா? பின்னாலயா?

கடைக்: எதுக்கு?

ஜொள்: சாப்பாட்டுக்கு?

கடைக்: அது-உங்க இஷ்டம்! ஆனா.. சாப்பாட்டிலயே போட்டு சாப்பிட்டிறாதீங்க! அது கஷ்டம்!

ஜொள்: சைடு எஃபக்ட் எதுனா வருமா?

கடைக்: யார் சைடில? உங்க சைடிலா? அவங்க சைடிலா?

ஜொள்: உங்களுக்கு ரொம்பத்தான் லொள்ளு! ஆமா. ரிசல்ட் எப்படி?

கடைக்: போச்சு!.. இதுவரைக்கும் சுமார் நூறுபோச்சு!

ஜொள்: நூறு உயிரா? ஐயையோ! அப்போ எங்கதி?

கடைக்: ச்சேய்! காலையிலிருந்து நூறு மாத்திரை வித்துப்போச்சுன்னு சொன்னேன்.

ஜொள்: தப்பு செய்ற துக்குத்தானே இதை யூஸ் பண்றாங்க?

கடைக்: ஆமா! ஆனா அது சரியானவங்க செய்ற தப்பா இருக்கணும்!

ஜொள்: அப்போ... தப்பானவங்க சரியா செய்ய முடியாதா?

கடைக்: செய்யலாம்! சரியானவங்க தப்பா செய்யலாம்! ஆனா.. தப்பானவங்க தான் சரியா செய்யணும்!

ஜொள்: அது மட்டும் தப்பில்லையா?

கடைக்: தப்பில்லை!... நாலு மணி நேரத்துக்கு சந்தோஷம்னா.. எதுவுமே தப்பில்லை!

ஜொள்: அதேதான்! அதுக்கே தான்! ஆனா... அதுக்கு அடிக்ட் ஆயிட்டா... அப்புறம் நிறுத்த முடியாதே!

கடைக்: ஏன் நிறுத்தணும்? இப்பவும் யூஸ் பண்ணிட்டு இருக்காங்களே அவங்க நிறுத்தட்டும்!... அப்புறம் நீங்க நிறுத்துங்க!

ஜொள்: ஐயோ-போதும் நிறுத்துங்க!

கடைக்: ஓகே! இதைப் போட்டா சிட்டுக்குருவியும் பருந்தாக மாறும்! கொட்டும் அருவியும் நிமிர்ந்தே ஓடும்!

ஜொள்: கவிதை?... எழுச்சியூட்டும் கவிதை!

கடைக்: அச்சமின்றி, மிச்சமின்றி, மெச்சும்படி உச்சத்தைத் தொடலாம்!

ஜொள்: பிச்சிட்டியேம்மா! சொச்சத்தை அப்புறம் பேசலாம்! எடு மாத்திரையை!

(வாங்கிக் கொண்டு பறக்கிறார்)




"கிரிக்கெட் பிளேயர்ஸ் எல்லாம் எப்படிப் பேசுவாங்க தெரியுமா?"
"எப்படி?"
"'ஓவரா'ப் பேசுவாங்க."









← புத்தகம் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் எந்த இடத்திலும் புத்தகம் படிப்பார்கள். சாப்பிட்டுக் கொண்டு, நீச்சல் தடாகத்தில் இருந்த படி என அனைத்து இடங்களிலும் படிப்பார்கள்.

இப்படிப் படிக்கும்போது தண்ணீர் பட்டு புத்தகங்கள் நனைந்து விடும். இதற்குத் தீர்வாக அமெரிக்காவில் தண்ணீரில் விழுந்தாலும் நனைந்து பாழாகாத வகையில் பிளாஸ்டிக்கால் உருவாக்கப் பட்ட புத்தகங்களை அறிமுகம் செய்துள்ளார்கள்.

கடற்கரை மணலில் படுத்து சூரியக் குளியல் செய்பவர்களும் இப்புத்தகங்களை அதிகளவில் வாங்கிப் படிக்கிறார்கள்.

அமெரிக்காவில் தொடங்கியுள்ள இப் பழக்கம் ஐரோப்பிய நாடுகளிலும் பரவியுள்ளது.






## மலர்க் கடிகாரம்

↓ அமெரிக்காவுக்கும் கனடாவுக்குமிடையில் நயகரா நீர் வீழ்ச்சியுள்ளது. உலகப் பிரசித்தி பெற்ற இந்நீர்வீழ்ச்சியிலிருந்து இரண்டரை கிலோமீட்டர் தொலைவில் காணப்படும் மலர்க் கடிகாரம்தான் படத்தில் காட்சியளிக்கின்றது. நயகராப் பூங்காவில் இவ்வழகிய மணிக்கூடு 50 வருடங்களுக்கு முன்னர் 1950ம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

நாற்பது அடி (12.2 மீட்டர்) குறுக்களவு கொண்ட இம் மலர்க்கடிகாரம் 15 ஆயிரம் பூச்செடிகளால் உருவாக்கப்பட்டுள்ளது. பனி காலம் முடிவடைந்து வசந்த காலம் தொடங்கும் போது, இந்த மணிக்கூடு 4 நாட்கள் மட்டும் நேரம் காட்டாமல் ஓட்டம் நிறுத்தப்பட்டுவிடும்.




முதல் நாளன்று பூஞ்செடிகள் அத்தனையும் வேருடன் பிடுங்கப்பட்டுவிடும். பின்னர் மேடை திருத்தி புதிய பூஞ்செடிகள் நடப்படும். வசந்த காலத்திலும் தொடரும் கோடைகாலத்திலும் பூக்கள் பூத்து கடிகாரம் பார்ப்பதற்கு மிக அழகாகக்காட்சி தரும்.

இம்மலர்க்கடிகாரத்தைக்கண்டு களிக்க (நேரம் பார்க்கவும் தான்) இதன் கீழ்ப் பகுதியில் ஒரு மேடை அமைக்கப்பட்டுள்ளது. அரைவட்ட வடிவமான மேடையில் பலர் நின்று நேரம் பார்ப்பதையும் அவதானிக்கலாம். உலகிலேயே மிகவும் பெரிய மலர்க்கடிகாரம் என்று சாதனை நிலைநாட்டிய இக் கடிகாரத்தைப் படம் பிடிக்கும்போது மணி என்ன என்று கண்டு பிடிக்க முடியுமா? சரியாக 3 மணி 6 நிமிடம் 11 தொடிகள். ▪

## தானாக ஓடும்



→ படத்தில் கையசைத்தபடி ஒருவர் அமர்ந்திருக்கும் ட்ரக்டர் தனது பணியைத் தானே செவ்வனே செய்து முடிக்கக் கூடியது.

இந்த ட்ரக்டரில் பொருத்தப்பட்டுள்ள கம்பியூட்டரில் இது எத்தனை மணிநேரம் நிலத்தை உழ வேண்டும்? எவ்வளவு ஆழம்? எவ்வளவு அகலம்? எவ்வளவு நீளம் போன்ற அனைத்தையும் பதிவு செய்து விட்டால் போதும்.

இந்த ட்ரக்டர் தானே இயங்கி, வயலில் தான் செய்ய வேண்டிய அனைத்துப் பணிகளையும் குறிப்பிட்ட நேரத்தில் முடித்துவிடும்.

இது முதன் முதலில் அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட்டு, ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளில் பரவி விட்டது. இதனால் விவசாயிகளின் வேலைச் சுமையும் பெருமளவில் குறைந்து விட்டது.

## அதிவேகம்



↑ மிகவும் சக்திவாய்ந்த மோட்டார் கார் என்று இதனைக் குறிப்பிடுகிறார்கள். சந்தையில் புதிதாக விற்பனையாகும் இந்தக் காருக்கு 'மக்லாறன் எஃப் 16.1' என்று பெயரிட்டுள்ளனர். இவ்வண்டியை ஓட விட்டு 3.2 தொடிகளில் 96 கிலோமீட்டர் (60 மைல்) வேகத்தை எட்டிவிடுமாம்.

யப்பா! இதை அதிவேகம் என்று குறிப்பிடுவதை விட புயல் வேகம் என்று கூறலாம் அல்லவா? ▪

## அதிக விற்பனை



← ஆங்கில நாவல் எழுத்தாளர் உலகில் இன்று கொடிகட்டிப் பறப்பவர் டேம் பார்பரா காட்லண்ட். காதல் ரசம் சொட்டும் மொத்தம் 635 நாவல்களை இவர் எழுதிச் சாதனை படைத்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் கார்ட்லண்டின் மேற்படி நாவல்கள் 65 கோடிப் பிரதிகள் விற்பனையாகியுள்ளன. இவர் பிரிட்டனைச் சேர்ந்தவர். நடுத்தர வயதைத் தாண்டிய நிலையிலும் இவருடைய நாவல்களில் காதல் ரசம் பிரவாகமாக ஓடுவதை வாசகர்கள் அனுபவ ரீதியாக கண்டு வருகின்றனர். ▪

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி தர்சிக்கா சுதாகரன்**

15-01-2000

அலிசாவளையைச் சேர்ந்த சுதாகரன் ஸ்ரீதவா, தம்பதியினரின் செல்வப்புதல்வி தர்சிக்கா, தனது இரண்டாவது பிறந்தநாளை 15-01-2000. அன்று சுவிஸ் bern மாநகரில் உள்ள தமதில்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் உள்ள அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சித்தப்பாமார், நாதன், யோகேசு, (அத்தைமார்) வாழ்வரசி, பவானி, லலிதா, (மாமாமார்) சிறிதரன், கமலநாதன், குணசீலன், பவானி பெரியம்மா, செல்வராஜ் பெரியப்பா, (சித்திமார்) லட்சுமி, சிறிகாந்தி, சாரதா மாமி, வினோத் அண்ணா, சதீஸ் அண்ணா, (அக்காமார்) சுகந்தினி, நிரோசினி, மச்சாள் டிஷாசி, மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் தர்சிக்கா குட்டியை முருகன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழகவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அப்பா சுதாகரன்
Bern (Switzerland) Tel. 031 - 3332173